KALKI 5.3.2006
ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் களிக்க...



"எனக்கு நானே எதிரி!"

காதல் மனைவி!

வருவாரா வளர்மதி?

... Cherish your Golden Dreams...

Estd: in 1978



EVP TOWN

NEAR INTERNATIONAL AIRPORT

MEGA TOWNSHIP IN CHENNAI

CMDA APPROVED
AS PER VASTU

EVP Town is a mega modern project which is highly appreciable and absolute pollution free.

ROUTE

1) Pallavaram-EVP Town: 7 km
2) Manapakkam-EVP Town: 6 km
3) Porur - EVP Town : 5 km

PROJECT FEATURES

- Just 15 minutes drive from International Airport.
- All around compound wall with 24 hrs. security.
- Black top roads, sewage treatment plant, street lights and avenue plantation.
- Children Park / Shopping centre
- Swimming Pool, Restaurant and club, hospital.



FREE site visit on all days

Housing Loans by:
LIC, SBI, Standard Charted Bank

INDEPENDENT BUNGALOW STARTS FROM 14.68 LAKHS

EVP Housing Chennai Pvt. Ltd.
No. 23, Thiyagaraya Road,
Pondy Bazaar, T.Nagar, Chennai-17.
Website: www.evpestate.com
Phone: 45506262, 45506272

Special Offer
Fully Furnished Master bed Room
Till 5-3-2006

RP

INVITING LAND OWNERS FOR JOINT VENTURE / OUTRIGHT SALE



* பக்தி இசையில்...!

தெலுங்குப் பட உலகின் காதல் கதாநாயகன் நாகர்ஜுனா நடித்து வெளிவரவிருக்கும் (அல்லது வந்துவிட்ட) படம் 'ஸ்ரீராமதாசு'. பத்ராசல ராமதாஸின் கதை, 19 பாடல்களுடன்! கீரவாணியின் இசையில் இரு கேஸெட்டுகளாக வந்துள்ளது. நமக்கு நன்கு பரிச்சயமான 'பலுகே பங்கார மாயன்ன', 'எந்த ருசிரா', 'ஏதிருக' க்ருதிகளுடன் பரிச்சயமில்லாத பல பாடல்களும் உள்ளன. அளவான, ஆடம்பரமில்லாத பின்னணி இசையும், தெளிவான உச்சரிப்பும், மென்மையான கர்நாடக இசை ராகங்களும் இருப்பதால் 'ராமதாஸு'வின் பாடல்கள் செவிக்கும், மனதிற்கும் நிறைவு தருகின்றன.

சொத்தை விற்ற சின்னசாமி!

சங்கீத ஸம்பிரதாய பிரதர்ஷினி என்று ஒரு நூல் - சுமார் நூறாண்டுகளுக்கு முன் முத்துஸ்வாமி தீக்ஷிதரின் மருமகனான சுப்பராம தீக்ஷிதர் எழுதி வெளியிட்டது. 'அந்தக் காலத்தில்' கர்நாடக சங்கீதம் எப்படிப் பாடப்பட்டது என்பதற்கான மிகப் பெரிய ஆவணம் இந்நூல். அதன் துணையுடன், முத்துஸ்வாமி தீக்ஷிதர் காலத்து இசையைப் புதிதாக இன்றைய குரல்களில் பதிவுசெய்து சி.டி.க்களாக வெளியிடும் முயற்சியில் இறங்கியிருக்கிறது ஞானார்ணவா அறக்கட்டளை. "இன்றைய இசைக்குப் பழகிய காதுகளுக்கு இந்தப் பதிவுகள் வினோதமாகத் தோன்றும். ஆனால் இது பழசைப் பாதுகாக்கும் முயற்சி" என்கின்றனர் அறங்காவலர்கள் டி.எம். கிருஷ்ணா, ஆர்.கே. ஸ்ரீராம்குமார். ச.ஸ.பிரதர்ஷினி நூலாக பதிப்பிக்கப்பட தமது சொத்தை விற்று நிதி உதவியவர் சின்னசாமி முதலியார் என்கிற கிறிஸ்தவர். சி.டி. வெளியீட்டு விழாவில் அஷோக் லேலண்ட் சேஷசாயி இத்தகவலைக் கூறி நெகிழ்ந்தார்; நெகிழ்வூட்டினார்.

கல்கியின் 'கணையாழியின் கனவு' நாடகமாகிறது - ஆங்கிலத்தில்! தி மெட்ராஸ் பிளேயர்ஸ் - ஜஸ்ட் அஸ் ரெபர்டரி இணைந்து தயாரிக்க, சென்னை, மியூசியம் தியேட்டரில் மார்ச் 10, 11, 12 தேதிகளில் அரங்கேறவுள்ளது. இசைமயமான தயாரிப்பாக இதனை உருவாக்கியிருப்பவர் கல்கியின் பேத்தி கௌரி ராம்நாராயண். ஆங்கில நாடகத்தில் தமிழ்ப் பாடல்கள் ஒலிக்கும் - டி.எம்.கிருஷ்ணா, சங்கீதா சிவகுமார் பாடப் போகிறார்கள்.

\- ஜோதிஸ்வரூபிணி



* ஆங்கில ஆக்கம்

தெரியுமா சங்கதி?

ஜி.கே. வாசன் மத்திய அமைச்சரானதைத் தொடர்ந்து தமிழக காங்கிரஸ் தலைவராகியிருக்கிறார் கிருஷ்ணசாமி. தேர்தலுக்காக பரபரவென்று கட்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்தவரை கொஞ்ச நேரம் ரிலாக்ஸ் செய்து பேசினோம்.

திண்டிவனம் ராமமூர்த்தி 'காங்கிரஸில் வன்னியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை' என்று சலசலப்பு காட்டியதால்தான் தலைவர் பதவி உங்களுக்குக் கிடைத்ததா?

"நான் யாருக்கும் பினாமியில்லை!"

"திண்டிவனம் ஜாதி ரீதியாகப் பேசவில்லை. 'தி.மு.க கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் நிறைய இடங்களைப் பெற்றுப் போட்டியிட வேண்டும்' என்றும்தான் வலியுறுத்தினார். அவர் காட்டிய சலசலப்புக்கும் எனக்குத் தலைவர் பதவி கொடுத்ததற்கும் துளியும் தொடர்பு இல்லை. கடந்த ஒரு வருட காலமாகவே என் பெயர் பரிசீலனையில் இருந்தது. இன்னமும் சொல்லப் போனால் திண்டிவனத்தாரை முன்பு தலைவராகப் போடுவதற்கு முன்னரே என் பெயர்தான் பரிசீலனையில் இருந்தது. நான்தான் 'அவருக்குக் கொடுங்கள்!' என்று சொல்லிவிட்டேன்."

இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருக்கும் உங்கள் மகன் விஷ்ணுபிரசாத், சோனியாகாந்தி பிறந்தநாள் விழாவை கலைஞர் வீட்டில் கேக் வெட்டிக் கொண்டாடியது சரிதானா?

"இதில் என்ன தவறு! அன்னை சோனியா எங்கள் இயக்கத்தின் தலைவர். கலைஞர் தமிழ்நாட்டில் எங்கள் கூட்டணித் தலைவர். எங்கள் தலைவியின் பிறந்தநாளை மற்றொரு பெரிய தலைவர் கொண்டாடுவதும் மகிழ்ச்சிக்குரிய, பெருமைக்குரிய விஷயம்தானே."

பல சலுகைகளை அறிவித்ததன் மூலம் ஜெ. மக்களிடையே மீண்டும் செல்வாக்கு பெற்று வருகிறார் என்று சொல்கிறார்களே!

"இந்தச் சலுகைகளால் மக்கள் மயங்கிவிட மாட்டார்கள். கடந்த நான்கரை வருடங்களாக மக்களின் சகல தரப்பினரையும் துவம்சம் செய்து இவர் நடத்திய ஆட்சியை அவ்வளவு விரைவில் மறந்துவிட முடியுமா?"

ஜெ. ஆட்சி நீடிக்கக்கூடாது என்று எந்த அடிப்படையில் பிரசாரம் செய்வீர்கள்?

"முக்கியமாக ஊழல்தான். டாஸ்மாக் விவகாரத்தில் தினமும் கோடிக்கணக்கில் சுருட்டுகிறார்கள். மணல் விற்பனை அரசு நடத்துகிறது என்று சும்மா பெயர்தான். முழுவதும் தனியார் ஆதிக்கத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் அடிக்கும் கோடிகள் ஏராளம். முதல்வருக்கு வேண்டிய குடும்பம், ஆக்டோபஸ் போல கிளைகளைப் பரப்பி தமிழகத்தில் ஆங்காங்கே சமஸ்தானங்களை உருவாக்குகிறது. மீண்டும் ஜெ. ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாடு தாங்காது!"

வை.கோ விவகாரத்தில் சமரசம் செய்து வைக்கத் தயார் என்றும், தி.மு.க.வுக்கு இணையாக காங்கிரஸுக்கும் சீட்டுகள் கொடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் இளங்கோவன் பேசியிருக்கிறாரே...?


"தமிழ்நாட்டில் காங்கிரஸ் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த அடிப்படையில் கௌரவமான பங்களிப்பு வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறல்ல. அமைச்சர் பேசியது பற்றி நான் எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை."

நீங்கள் இளங்கோவனுக்கு பினாமியாகச் செயல்படுவதாக வாசன் தரப்பு சொல்கிறதே!

"வாசனுக்கு பினாமியாகச் செயல்படுவதாக மற்றொருவர்கூட குற்றம் சாட்டக்கூடும். உண்மை என்னவென்றால் நான் யாருக்கும் பினாமியல்ல. எல்லோருக்கும்

வேண்டியவன். மேலிட வழிகாட்டுதலால் அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துக் கட்சியை வளர்க்க வேண்டியது என் முதல் பணி. மகிழ்ச்சியான விஷயம், எல்லோரும் எனக்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுப்பதுதான். தேர்தலில் வெற்றிபெற வேண்டும். அதை நோக்கியே எங்கள் பயணம்."

தி.மு.க அமைச்சர்கள் நடத்தும் விழாக்களில் காங்கிரஸ் புறக்கணிக்கப்படுவதாகவும், அவர்கள் இலாகா கமிட்டிகளில், குழுக்களில் காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு இடம் மறுக்கப்படுவதாகவும் உங்கள் தொண்டர்களிடையே ஒரு அதிருப்தி நிலவுகிறதே!



"இதில் உண்மை இருப்பதை மறுப்பதற்கில்லை. இதைச் சரிசெய்ய தமிழக காங்கிரஸ் ஒரு ஒன்று பட்ட முகத்தைக் காண்பிக்க வேண்டும். உரிய மரியாதையும் கௌரவமும் கிடைக்கக் கூடிய விதத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டும்."

- ப்ரியன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேஜைக்கு

'பார்த்திபன் கனவு' படத்துக்காக தமிழக அரசின் சிறந்த நடிகர் சிறப்பு விருது பெற்ற சந்தோஷத்தில் இருந்தார் ஸ்ரீகாந்த். ஆச்சர்யம்! கணிசமாக இளைத்து மேலும் இளமையாகக் காட்சியளித்த அவரது முகத்தில், வழக்கமான சாக்லெட் சிரிப்பு அவ்வப்போது வசீகரிக்கிறது. முன்பை விடவும் முதிர்ச்சியான அனுபவங்களோடு தயக்கமில்லாமல் பேசினார்...

தனுஷ், சிம்பு வரிசை ஹீரோவைப் போல இப்படி இளைத்திருக்கிறீர்கள்... என்ன ரகசியம்?

"ஒளித்துவைக்கிற ரகசியம் எதுவுமில்லை. ஜூட், போஸ் படங்களுக்காக ஏற்றிய உடல் எடையைக் குறைப்பதற்கு முன்பே, அடுத்தடுத்த படங்களில் நடிக்க வேண்டிய நிலை. அந்த இரண்டு படங்களுக்குப் பிறகு வந்த படங்களைப் பார்த்த பிறகுதான் 'அய்யோ! இயல்பாகவே நாம் இவ்வளவு குண்டாக இருந்ததில்லையே' என்று சங்கடமாக உணர்ந்தேன். எனக்கு இப்போது இருபத்தேழு வயது. இந்த வயதுக்கு ஏற்ற மாதிரி உடலை வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்."

வந்த வேகத்தில் ஒரு டஜன் படங்களில் நடித்து விட்டீர்கள். நீங்கள் அடைய நினைத்த இடம் கிடைத்து விட்டதா?

"இல்லை. இந்தப் பக்கமும் இல்லாமல், அந்தப் பக்கமும் இல்லாமல் நடுவில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். ஒன்றிரண்டு தோல்விகள் இருந்தாலும் எனது படங்கள் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், ரசிகர்கள் யாரையும் ஏமாற்றவில்லை. ஆரம்பம் முதலே தரமான கதைகளில் மட்டுமே நடித்து வருகிறேன். ஆனால் மிகப்பெரிய வெற்றி கொடுக்கவில்லை. 'சதுரங்கம்' வெளிவந்திருந்தால் அது சாத்தியமாகி இருக்கும். அடுத்து வெளிவர இருக்கும் உயிர், மெர்க்குரிப் பூக்கள் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை இருக்கிறது. சீரான வளர்ச்சிதான் ஒரு நடிகனுக்கு முக்கியம். வேகமாகப் போய் தடுக்கி விழுவதில் காயம்தான் மிஞ்சும்... ஜூட், போஸ் படங்களின் காயமே இன்னும் ஆறவில்லை."

உங்களைத் திருப்பிப் போடுகிற மாதிரி பெரிய இயக்குனர்கள் அமையவில்லை இல்லையா?

"அப்படிச் சொல்ல முடியாது. நான் யாரென்றே தெரியாதபோது என்னை அறிமுகப்படுத்தினார் சசி. அதனால் நாமும் ஏன் புதிய இயக்குனர்களுக்கு வாய்ப்புத் தரக்கூடாது என்று ஃப்ரெஷ்ஷான திறமையாளர்களை நம்பினேன். ஸ்டான்லி, கரு.பழனியப்பன், கே.வி. ஆனந்த் போன்றவர்கள் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிய முதல் தரமான இயக்குனர்கள். ஃபாசில் பெரிய இயக்குனர்தான். ஆனால் எனக்கு அமைந்த கதையில் ஈர்ப்பு இல்லாமல் போய் விட்டது. அதே நேரம் என் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய ஒரு ஆளுமைமிக்க இயக்குனர் எனக்குத் தேவை. விக்ரமுக்கு பாலா, சூர்யாவுக்கு கௌதம், விஜய்க்கு தரணி கிடைத்ததைப் போல. நமக்குள்ளே

"எனக்கு

திறமை இருந்தால் மட்டும் போதாது. அதை வெளிப்படுத்த வைக்கிற இயக்குனருக்காகக் காத்திருக்கிறேன். வாய்ப்பு வந்தும் மணிரத்னம், விக்ரமன் படங்களில் நடிக்க முடியாமல் போய்விட்டது."

உங்களைப் பற்றித் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த கிசுகிசு செய்திகள் உங்கள் வளர்ச்சிக்கு ஒரு முட்டுக்கட்டையா?

"நிச்சயமாக! எனது சினிமா வளர்ச்சியை நேரடியாகப் பாதித்ததா இல்லையா என்பது ஒருபுறம் இருக்

கட்டும். மனரீதியாக பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. சினேகாவையும் என்னையும் சேர்த்து கிசுகிசுக்கள் உற்பத்தி செய்யப்பட்டபோது... எங்கேயாவது ஒரு இடத்திற்குப் போனால் வெளிப்படையாகக் கேலி பேசும் போது கஷ்டமாக இருக்கும். இப்போது உண்மை எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. அடுத்து கோபிகாவுடன் இணைத்தார்கள். ஒரு கட்டத்தில் லவ்வர் பாய் இமேஜ் போல ஒன்று என்னைச் சுற்றி பின்னப்பட்டது.

இது மீடியா மைலேஜுக்காகச் செய்யப்பட்டதா, இல்லை எனக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்தார்களா? அதுவும் இல்லையென்றால் படத்தின் பப்ளிசிட்டிக்காக கிளப்பப்பட்ட மறைமுக விளம்பர உத்தியா? என்னால் இனம் காண முடியவில்லை. என்னை வளர்த்தவர்கள் பத்திரிகை நண்பர்கள். அவர்களிடம் அழுத்திக்



நானே எதிரி!"

கேட்க முடியாமல் ஆரம்பத்தில் தயங்கினேன். அதைப் பற்றி பேசினால் நாமே அதற்கு முக்கியத்துவம் கொடுத்த மாதிரி ஆகிவிடும் என்றே தவிர்த்தேன். எனது மௌனம் எனக்கு நானே எதிரி என்பதைப் போல ஆக்கிவிட்டது. நல்ல வேளையாக பத்திரிகை நண்பர்கள் என்னைப் புரிந்துகொண்டு விட்டார்கள். இப்போது நான் கிசுகிசுக்கள் இல்லாத ஹீரோ."

உங்களின் அடுத்த திட்டம்...?

"பம்பரக் கண்ணாலே படம் என்னை, கிராமப்புற ரசிகர்களிடம் கொண்டு சேர்த்திருக்கிறது. இனி அவர்களுக்கும் பிடிக்கிற மாதிரி படம் பண்ண வேண்டும். எனது படத்தின் எல்லாப் பாடல்களும் மென்மையாக இருக்கின்றன. இனி கொஞ்சம் கமர்ஷியல் பாடல்களிலும் குத்தாட்டம் போட வேண்டும். காதல், ஆக்ஷன் கலந்து டீன்-ஏஜ் கதைகளில் நடிக்க வேண்டும்."

- ஜெயந்தன்

படம் : புதூர் சரவணன்

வட்டமேஜை



அபத்தத்திலும் அபத்தம்!

'காதல் சிறப்பிதழ்' கல்கி, நல்ல காதல் படம் பார்த்த திருப்தியைத் தந்தது!
தூத்துக்குடி, சிவராமசுப்ரமணியன்

தி.க.வீரமணி பற்றிய கேள்விக்கு தராசின் பதில் கல்கிக்கு பெருமை சேர்க்கக் கூடியது!
சென்னை-33, லெ.நா.சிவகுமார்

நரேந்திர மோடிக்காக தமிழிசை சௌந்தர்ராஜன் வக்காலத்து வாங்குவது அபத்தத்திலும் அபத்தம்!
ஆதமங்கலம் புதூர், கே.சண்முகம்

அ.தி.மு.க. ஆலயம் என்றால், மணி காளிமுத்து. வேறென்ன சொல்வது?
திருவண்ணாமலை, வைடூரியன்

காதல் பற்றிய பிரபலங்களின கருத்துக்கள் நெஞ்சுக்கு இதம் சேர்த்தன.
கழுகாசலபுரம், எஸ்.ஏ.கேசவன்

'டிஷ்யூம்' விமர்சனம் படித்ததும் படம் பார்க்கப் புறப்பட்டு விட்டேன்!
மதுரை, கே.பிரியதர்ஷினி

கவிதாயினிகளின் காதல் கவிதை நயம்!
சர்க்கார்பதி, பி.ஜெயபிரகாஷ்

அமரர் கல்கியின் காதலா, காமமா சிரிக்க மட்டுமல்ல... சிந்திக்கவும்!
கும்பகோணம், கே.என்.பாலகிருஷ்ணன்

'கிறுகிறுக்க' வைத்த தலையங்கம், தலையங்கங்களுக்கெல்லாம் சிகரம்!
திண்டுக்கல், வி.பைரவி

'முத்து படம் பார்த்தே ஆகணும்' என்ற தலைப்பில் எங்கள் மருந்தேஸ்வரா நிறுவனத்தைப் பற்றி 12.2.2006 இதழில் கட்டுரை வெளியிட்டமைக்கு நன்றி. அதில் 'மருத்துவக் கருத்தரங்குகளுக்கான விரிவுரையாளர்களை நாங்களே தேர்ந்தெடுக்கிறோம்' என்று நான் சொன்னதாக வெளியாகியுள்ள செய்தி தவறானது.
சென்னை, லலிதாராய்

எங்கள் எம்.எஸ். பகுதியில் பேராசிரியர் வீழிநாதன் எழுதியதைப் படித்தேன். காஞ்சி முனிவர் எம்.எஸ். அம்மாவுக்குக் காசு மாலையைத் தந்தபோது நான் அருகில் இருக்க நேர்ந்தது. எம்.எஸ். - சதாசிவம் தம்பதியின் காணிக்கையை மஹா பெரியவர் பெற்றுக்கொண்ட சில தினங்களுக்குப் பிறகே அச்சம்பவம் நடந்தது. தமக்கு ஓர் அன்பர் வழங்கிய காசு மாலையை வில்வஹாரத்தினிடையே வைத்து எம்.எஸ். அவர்களிடம் தந்தார் மஹா பெரியவர். பக்தியுடன் பெற்றுக்கொண்ட எம்.எஸ். அவர்கள், பின்னாளில் அதையும் காஞ்சி காமாக்ஷி அம்மனுக்கே காணிக்கையாக்கினார்.
சென்னை - 20, வேதமூர்த்தி


உங்கள்
குழந்தைகள்
பயமின்றி
பரீட்சை
எழுத
கோகுலம்
வாங்கிக்
கொடுங்கள்!
கோகுலம்
குழந்தைகளின் குதூகலம்!
மார்ச் 2006
ரூ.6/-மட்டுமே


பரபரப்பான விற்பனையில்
இரண்டாம் பதிப்பு
ஆங்கில நாவல்களுக்கு இணையாக
THRILLERS IN தமிழ்
1930-லிருந்து
இன்று வரை
தமிழ் வாசகர்களை அசர வைத்த
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்.பி.ஏ.,
எழுதிய நாவல்கள் – புதுப்பொலிவுடன்
ஆங்கிலத்தில் ஷெர்லாக் ஹோம்ஸ்
நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
தமிழகத்தில் அன்றும் இன்றும் என்றும்
திகம்பர சாமியார்
விறுவிறுப்பான துப்பறியும் கதைகள்
கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாத
அளவிற்கு கட்டிப் போடும் கதைகள்.
1. பூர்ண சந்திரோதயம் (5 பாகங்கள்) ரூ. 650/-
2. கும்பகோணம் வக்கீல் (2 பாகங்கள்) ரூ. 200/-
3. மாயா விநோதப் பரதேசி (3 பாகங்கள்) ரூ. 365/-
4. மேனகா (2 பாகங்கள்) ரூ. 250/-
5. மதன கல்யாணி (3 பாகங்கள்) ரூ. 355/-
6. சௌந்திர கோகிலம் (4 பாகங்கள்) ரூ. 460/-
7. வசந்த மல்லிகா ரூ. 110/-
8. வித்யாசாகரம் ரூ. 100/-
அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ண மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 2464 1314
email : srinivasan@alliancebook.com
www.alliancebook.com


அடுத்த முதல்வர் யார்?






தமிழக அரசியல் களத்தில் இது கத்திரி வெயில் சீஸன். தேர்தல் நெருங்க நெருங்க முதல்வர் நாற்காலியை கைப்பற்றப் போவது யார், வாய்ப்புகள் யாருக்கு அதிகம் என்கிற டென்ஷன். இதனைத் தீர்மானிக்கக்கூடிய மக்கள் ஒருபுறமிருக்க, முதல்வராகும் தகுதியுடையவர்களின் ஜாதகங்கள் என்ன சொல்கின்றன? பிரபல ஜோதிட நிபுணர் காஞ்சி கிருஷ்ணாவிடம் ஸ்டாலின், கலைஞர், ஜெ., ஜாதகங்களை நீட்டிக் கேட்டோம்... நீண்ட நேர ஆராய்ச்சிக்குப் பிறகு, தமது கணிப்புகளை எடுத்து வைத்தார்.


• ஜோதிடர் காஞ்சி கிருஷ்ணா



ஸ்டாலின்:

சிம்ம ராசிக்காரரான ஸ்டாலினுக்கு சூரியன் மற்றும் சந்திரனின் பார்வை, பௌர்ணமி யோகம், குரு - சுக்ரன் சேர்ந்து ப்ருஹஸ்பதி யோகம், குரு சந்திர யோகம், குரு - அங்காரகன் பரிவர்த்தனை பெற்று, நீச்சபங்க ராஜயோகத்தையும், சுக்கிர மங்கள யோகத்தையும் தருகிறார். ராசிக்கு 11-ம் இடத்து அதிபதி புதன் நீச்சமாகி, நீச்சபங்க ராஜயோகத்தைத் தருவதாலும், தற்சமயம் குரு வக்ரமாகி 11-ம் அதிபதியைப் பார்ப்பதாலும் (உயர் பதவி ஸ்தானம்) தேர்தலில் நிற்காமல், அனைத்துத் தொகுதிகளுக்கும் தீவிர பிரசாரப் பயணம் மேற்கொண்டு, தன் கட்சியையும், கூட்டணியையும் வெற்றி பெற வைக்கக் கடுமையாக முயற்சி மேற்கொண்டால், இவருக்கு உயர்பதவி தேடி வருவதற்கு வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. உடல்நலத்தில் அக்கறை தேவை. தேர்தலில் நின்றால் ஜெயிக்கலாம்... ஆனால் உயர்பதவி கிடைப்பது தாமதமாகலாம்.





கலைஞர்:

ராஜகிரகங்களின் சேர்க்கை, ப்ருஹஸ்பதி பார்வை லக்னாதிபதி உச்சனாகி, உயர்பதவி ஸ்தானத்தில் இருப்பது இவருக்கு சிறப்பான நிலையைத் தரும். தற்சமயம் கலைஞரின் ஜாதகப்படி, கேது தசை நடப்பதும், கேது 8-ல் அமர்ந்து, 8-ம் அதிபதி உச்சனாக இருப்பதும் யோகமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.

ராஜகிரகம் - ப்ருஹஸ்பதி சம்பந்தம் சிறப்பை ஏற்படுத்தி, அதன் மூலமாக கலைஞருக்கு உயர்பதவி மற்றும் அந்தஸ்தினை அளிக்க வாய்ப்புகள் உள்ளன.

தற்சமயம் குரு வக்ரமாகி ராசிக்கு 5-ல் இருப்பது சிறப்பான விஷயம். ஆனால் சனி பகவான் வக்ரமாகி 2-ல் இருப்பது, தேர்தல் நேரத்தில் சிரமத்தைக் கொடுக்கும்.

கலைஞரின் ஜாதகப் ப்ரகாரம், 7-ல் செவ்வாய், 2-ல் ராகு மற்றும் 8-ல் கேது ஆகியன உள்ளன. இதன் காரணமாக உடன் இருப்பவர்களால் அல்லது கூட்டு சேர்ந்துள்ளவர்களால் சிக்கல்கள், பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. அங்காரகன் உச்சனாகி (ஜீவனஸ்தானாதிபதி) 7-ல் இருப்பதால், கூட்டணியில் மேலும் எவ்வித சிக்கலோ, உடைப்போ, இழப்போ இல்லாதவாறு பார்த்துக்கொண்டு, அனைத்துத் தொகுதிகளிலும் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டால் 100 முதல் 120 தொகுதிகள் வரை வெற்றிபெற வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

ஜெயலலிதா:

சந்திர மங்கள யோகம், குரு மங்கள

கட்டம் சொல்லும் கணிப்பு!

யோகம், குரு சந்திர யோகம், தர்ம கர்மாதிபதி யோகம், புதன் ஆதித்ய யோகம், பௌர்ணமி யோகம், குரு ஆட்சி, சுக்கிரன் உச்சம், ப்ருகஸ்பதி வலுத்த யோகம் என பலவிதமான யோகங்கள் ஜாதகப்படி ஜெயலலிதாவுக்குச் சிறப்பாக உள்ளன.

தற்சமயம் ராகு தசையில் (25.4.2006 முதல் 25.4.2009) சுக்கிரன் புக்தி சிறப்பாகும். ராகு 11-ல் அமர்ந்தும், சுக்ரன் 10-ல் அமர்ந்தும் இருந்து ஜெயலலிதாவுக்கு உயர்பதவி, எதையும் சாதிக்கும் ஆற்றல், மனோதிடம் போன்றவற்றைத் தருகிறார்கள்.

11-ஆம் இடத்தில் உள்ள ராகுவை (தசாநாதனை) குரு பார்ப்பது சிறப்பாகும். அடுத்து, ப்ருஹஸ்பதி தொடர்பு ஜெயலலிதாவின் பெயரை உலக சரித்திரத்தில் இடம்பெற வைக்கும்.

தற்சமயம் குரு வக்ரமாகி ராசிக்கு 2-ல் இருப்பதும், சனிபகவான் வக்ரமாகி ராசிக்கு 11-ல் இருப்பதும், பல சாதனைகளைப் படைத்திட வழிவகை செய்யும். இதன்மூலம் ஜெயலலிதாவின் மீதான மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். கடந்த காலங்களில் அவரை எதிர்த்தவர்கள் ஓரிருவர் மீண்டும் ராசியாகும் யோகம் உண்டு. இந்த அளவுக்கு யோகங்கள் பல இருந்தபோதிலும், தற்சமயம் ராசிக்கு 2-ல் உள்ள கேதுவும், 8-ல் உள்ள ராகுவும் சிரமத்தை அதிகரிக்கச் செய்வதோடு மட்டுமின்றி, அலைச்சலையும், கடுமையான போட்டியையும் அதிகரிப்பார்கள். அதேசமயம் 8-ல் உள்ள ராகுவை, குரு வக்ரமாகி 2-ல் உள்ள கேதுவுடன் சேர்ந்து பார்ப்பதால் நன்மை செய்ய வழிவகுக்கும் என்பது அனுகூலமான விஷயம்.

பொதுவாக இவரின் ஜாதகத்தின்படி, தன்னுடன் இருப்பவரையும், கூட்டு சேர்ந்துள்ளவர்களையும் மிகவும் அனுசரித்துச் செல்வது முக்கியம். லக்னத்தை குரு பார்ப்பதாலும், லக்னாதிபதி ராசியாதிபதி பாக்ய ஸ்தானத்தில் இருப்பதாலும், ராகு 11-ல் குரு பார்வையில் இருப்பதாலும் இவர்களின் கூட்டணி 130 முதல் 141 இடங்கள் வரை வெற்றிவாகை சூட வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

தொகுப்பு : **இரா.முத்துக்குமார்**
படங்கள் : **ஸ்ரீஹரி, ஓம்**

ஜலதோஷம், ஆஸ்துமா போன்றவற்றுக்கு இன்ஹேலர் மூலம் மருந்துகளை சுவாசித்து நிவாரணம் பெறுவதை அறிவோம். தற்போது சர்க்கரை நோயாளிகளும் ஸ்பிரே வடிவில், இன்சுலினை சுவாசித்து கிரகித்துக் கொள்ளும் 'இன்சுலின் இன்ஹேலர்கள்' அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பிரபலமாக இருக்கின்றன. இந்தியாவிலும் இவை எப்போது வேண்டுமானாலும் மூக்கை நுழைக்கலாம். உண்மையில் இன்சுலின் இன்ஹேலர்கள், சர்க்கரை நோயாளிகளுக்கு அனுகூலமான கண்டுபிடிப்பா..? ஜெர்மனியில் நடைபெற்ற இண்டர்நேஷனல் ஆட்டோ இம்யூனோ டிஸீஸ் மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பியிருக்கும் சிறுநீரகவியல் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பி.ரவிச்சந்திரனிடம் கேட்டோம்.



● டாக்டர் ரவிச்சந்திரன்

"இந்தியாவைப் பொறுத்தவரை சர்க்கரை நோயாளிகள் என்றால் எல்லோரையும் ஒன்றுபோல் குழப்பிக் கொள்கிறார்கள். ஆனால் குழந்தைகளுக்கு வரும் சர்க்கரை நோய்தான் இன்சுலின் டிபன்டென்ட் வகை. இவர்களுக்கு இன்சுலின் இல்லாமல் வாழ்க்கையே இல்லை. இரண்டு நாட்கள் இன்சுலின் எடுக்காவிட்டாலும் 'இன்சுலின் கோமா' என்ற நிலைக்குப் போய்விடுவார்கள். இவ்வகை சர்க்கரை நோய் உள்ள குழந்தைகளுக்கு பிறவியிலேயே கணையத்தில் இன்சுலின் உற்பத்தியாகாது. அல்லது சில குழந்தைகளுக்கு இன்சுலின் உற்பத்தியாகும் கணைய செல்கள் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும். இதைத்தான் ஆட்டோ இம்யுன் டயாபடிக்ஸ் அதாவது சுயநோய் எதிர்ப்பு சர்க்கரை நோய் என்கிறார்கள்.

வயதில் மூத்த சர்க்கரை நோயாளிகளுக்கு வயது ஆகஆக மூட்டுத் தேய்மானம் ஏற்படுவதுபோல, இன்சுலின் செல்களின் கதவு திறக்காது. இந்தச் செயல்பாட்டை நிகழ்த்த 'இன்சுலின் சென்ஸடைஸர்' மருந்தைக் கொடுப்பார்கள். இதுவும் வேலை செய்யாதபோது, இவர்களும் இன்சுலின் எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். உலக அளவில் சர்க்கரை நோயாளிகள் பெருகிவிட்ட நிலையில், இன்சுலின் சந்தை பணம் கொழிக்கும் தொழிலாக மாறிவிட்டது.

விலங்குகளிலிருந்து இன்சுலின் தயாரித்த காலம் மலையேறி, மனித இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்டபோது, போட்டி போட்டு எல்லா நிறுவனங்களும் இன்சுலின் தயாரிப்பில் குதித்தன. அந்த போட்டியில் இன்சுலின் ஊசியை சட்டை பாக்கெட்டில் சொருகி எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லும் பேனா வடிவில் கொண்டு வந்தபோது பெரிய பரபரப்பு ஏற்பட்டது. அடுத்து வாய் வழியே மாத்திரைகளாக இன்சுலினை சாப்பிடும் 'புரோ-இன்சுலின்' தயாரிப்பில் இறங்குகிறோம் பேர்வழி என்று பல பகாசுர கம்பெனிகள் ஆராய்ச்சியில் இறங்கின. ஆனால் இன்று வரை எந்தத் தீர்வும் இல்லை. இப்போது இன்சுலின் இன்ஹேலர்கள் பிரபலமாகி வருகின்றன. ஆனால் இந்தியா போன்ற வளரும் நாடுகளின் தனிநபர் பொருளாதார நிலைக்கு இன்சுலின் இன்ஹேலர்கள் கட்டுப்படியாகாது. இதைவிட இதற்குள் ஒளிந்திருக்கும் வியாபாரத் தந்திரம் சர்க்கரை நோயாளிகளுக்கு அதிக கசப்பானது.

சில மருந்துகள் நேரடியாக (மார்பின், பெத்தடின் போன்றவை) ரத்தத்தில் கொடுத்தால்தான் வேலை செய்யும். இன்சுலினும் அப்படித்தான். இன்சுலினை ஸ்பிரே வடிவில் திரவக் குமிழ்களாக நுரையீரல் வழியே கொடுக்கும்போது, பத்தில் ஒரு பங்கு மட்டுமே ரத்தத்தில் சேரும். ஒருவருக்கு பத்து யூனிட் இன்சுலின் கொடுக்க வேண்டும் என்றால், தொண்ணூறு யூனிட் இன்சுலினை வீணாக்க வேண்டி வரும். இப்படி வீணாகும்போது, நோயாளி இன்சுலினுக்காக பத்து மடங்கு கூடுதலாகச் செலவிட வேண்டியிருக்கிறது. இன்சுலின் இன்

இன்சுலின் இன்ஹேலர்

வரமா, சாபமா?

ஹேலர் புழக்கத்தில் உள்ள வளர்ந்த நாடுகளில் இதற்கு இன்சூரன்ஸ் தருகிறார்கள். தவிர குழந்தைகளுக்குத் தொடர்ந்து ஊசி மூலம் இன்சுலின் தருவது சலிப்பையும், வேதனையையும் ஏற்படுத்தும் என்பதால் அவர்களுக்கு இன்ஹேலர் முறை சிறந்த தீர்வாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் குழந்தைகளுக்கு இன்சுலின் அளவு குறைவாக இருந்தால்கூட பிரச்னை வராது. அதுவே நிர்ணயிக்கப்பட்ட அளவு இன்சுலின் எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் வயது முதிர்ந்த சர்க்கரை நோயாளிக்கு இது கருணையற்ற பணவிரயம். குழந்தை நோயாளிகளுக்கான இந்தக் கண்டுபிடிப்பை, வியாபார நோக்கத்தோடு பெரியவர்களிடம் திணிப்பதை யார் தடுப்பது?'' என்று உண்மையை உடைக்கும் டாக்டர் ரவிச்சந்திரன்.

''இன்சுலின் இன்ஹேலர் போன்ற நவீன மருந்து சாதனங்களை ஹைடெக் லைஃப் ஸ்டைலாகத் தூக்கிப் பிடிப்பதன் வியாபாரப் பின்னணி ஒரு பக்கம் இருக்க, இன்னொரு பக்கம் இன்சுலின் உடலில் ஏன் உற்பத்தி ஆவதில்லை என்பதை 'ஆட்டோ இம்யுன் டிஸீஸ்' துறை கண்டுபிடித்திருக்கிறது. விரைவான வாழ்க்கை, அதன் விளைவாக மாறிப்போன உணவுமுறை, இன்சுலின் செல்களின் வழக்கமான வடிவத்தை மாற்றிவிடுகிறது. இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாத உடலின் நோய் எதிர்ப்பு செல்கள் அவற்றை எதிரிகள் என நினைத்து அழித்துவிடுகின்றன. இந்த எதிர்ப்பு சக்திக்கு ஜீன் தெரபி மூலம் இன்சுலின் செல்களுக்கு டாலரன்ஸ் சிகிச்சை அளித்து, சர்க்கரை நோயின் ஆட்டோ இம்யுனோ தன்மையை வேரோடு களையும் நாள் வெகு தொலைவில் இல்லை'' என நம்பிக்கையோடு சொல்கிறார்.

- ஸ்ரீசக்கரம்





கல்கி



2006 மார்ச் 5
பார்த்திப மாசி 21
மலர் : 64
இதழ் : 31

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.


கூட்டணி எதற்கு?


வைகோ சொல்வது ரொம்ப வேடிக்கைதான்! "ஜனநாயக முற்போக்குக் கூட்டணியிலிருந்து விலகும் எண்ணம் எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை" என்கிறார். கூடவே, "என் தாயார் என்னைப் பெரியவர் (கருணாநிதி) கட்சியுடன் தொடரும்படி அறிவுறுத்தியிருக்கிறார்" என்கிறார்! "அம்மா வற்புறுத்தவில்லை; அறிவுறுத்தினார்" என்பது வைகோ கூற்று! அப்படியானால், அந்த அறிவுரைக்கு ஓர் அவசியம் இருந்தது; அதாவது தி.மு.கவுடன் ம.தி.மு.கவுக்கு உறவுச் சிக்கல் ஏற்பட்டிருந்தது. அது தெரிந்துதானே வைகோவின் அம்மா பேசியிருக்கிறார்!

ம.தி.மு.கவின் கொள்கை விளக்க அணிச் செயலாளர் நாஞ்சில் சம்பத், கூட்டணித் தலைவரான கருணாநிதியை ஏசிப் பேசுகிறார். இந்த ஏச்சுப் பேச்சுக்கு அவர் பேரில் ம.தி.மு.க. தலைமை கண்டனம் தெரிவிக்கவுமில்லை; நடவடிக்கை எடுக்கவுமில்லை. ஆனால், வைகோ அவர் சார்பில் மன்னிப்புக் கேட்கிறார்!

கூடுதல் இடங்களுக்காக தி.மு.க. தலைமையுடன் ம.தி.மு.க பேரம் பேசி வந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். பேரம் படியாத நிலையில் எழுந்த பரஸ்பர மனக்கசப்பில் கட்சிகளின் அடிநிலைத் தொண்டர்கள் அவசரப்பட்டுப் பேசினால், மூத்த தலைவர்கள்தான் அவர்களுக்கு அறிவுரை கூறி பொறுமை காக்கும்படி வலியுறுத்த வேண்டும். ஆனால் ம.தி.மு.கவிலோ மூத்த தலைவர்களே பொறுமையிழந்து கடுமையாகப் பேசியிருக்கிறார்கள்.

தி.மு.க. தலைவர், தாம் பலமுறை வைகோவுடன் தொடர்பு கொண்டு சமரசத்துக்கு முயன்றதாகவும் அவர் பிடிகொடுக்கவே இல்லை என்றும் வருத்தம் தெரிவித்திருக்கிறார். இதையும் வைகோ மறுக்கவில்லை; தமது கட்சியினரிடையே தொகுதிப் பங்கீடு குறித்து





அதிருப்தி நிலவியதையும் அவர் மறுக்கவில்லை!

ஆனால் திடீரென்று, ஜனநாயக முற்போக்குக் கூட்டணியை விட்டு விலகும் நோக்கமே தமக்கு இருந்ததில்லை என்கிறார்! அப்படியெனில், "நாங்கள் ஜ.மு கூட்டணியில் தொடருவோம்" என்று வைகோ ஓர் அறிக்கை விடவேண்டிய அவசியம் என்ன!

ஆக, வைகோ எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் உரசல்கள் இருந்ததும் உண்மை; தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள அவர் தி.மு.கவுக்கு அழுத்தம் கொடுத்ததும் உண்மை... அந்த 'விருப்பம்' என்ன? அது எந்த அளவுக்கு நிறைவேறியது? அதற்காக யார், எதை விட்டுக் கொடுத்தார்கள் என்பனவெல்லாம் இப்போது நமக்குத் தெரியாது. ஆனால், இக் கூட்டணியில் தி.மு.க. - ம.தி.மு.க. நட்பு மீண்டும் சோதனைக்குள்ளானால் அத்தனை திரை மறைவு சங்கதிகளும் அம்பலமாகிவிடும்.

அப்படியெல்லாம் நடக்காமலிருக்க வேண்டுமானால், வரவிருக்கும் தேர்தலைப் பற்றிய தெளிவு ம.தி.மு.கவுக்கும் இருக்க வேண்டும்; தி.மு.கவுக்கும் இருக்க வேண்டும்.

ஆட்சியைப் பிடிப்பது மட்டுமா குறிக்கோள்? குறிக்கோள் அதுவாயின், மிகக் குறுகலான அந்த நோக்கில், அடிப்படையான கொள்கை மாய்ந்துபோகும்! யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைத்துக்கொள்ளத் துணிவு பிறக்கும்.

மக்களையும் எதிர்க்கட்சிகளையும் ஒடுக்கும் ஃபாஸிஸ போக்குக்கு முடிவுகட்ட வேண்டும்.

அதிகார துஷ்பிரயோகம்; ஆதிக்கப் போக்குக்கு இடங்கொடுக்கலாகாது...

- இதுபோன்ற நெகடிவ் சிந்தனைகளுடன், நல்லாட்சி அமைவது குறித்த பாஸிடிவ் கொள்கைகளும் தேவை. அனைத்துக் கூட்டணிக் கட்சிகளும் ஏற்கத்தக்கதான குறைந்த பட்ச செயல் திட்டத்துடன் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி தேர்தல் களத்தில் இறங்குமானால், அதில் இடம்பெறும் கட்சிகளின் தலைவர்கள் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஒத்துழைப்பார்கள்; ஒத்துழைக்க வேண்டும்! அப்போதுதான் தொண்டர்களும் ஒருங்கிணைந்து உழைப்பார்கள்.

வைகோவுக்கு ஸ்டாலினை ஏற்க முடியாமல் இருக்கலாம்; அதற்காக ம.தி.மு.கவின் எதிர்காலத்தையே அவர் விட்டுக்கொடுக்கத் தயாராயிருக்கலாம்... ஆனால் தமிழக மக்களின் எதிர்காலத்தை அவர் அபாயத்துக்கு உள்ளாக்குவது என்ன நியாயம்?

இப்போது மலர்ந்துள்ள நல்லெண்ணம், அனைத்துக் கூட்டணிக் கட்சிகளிடையேயும் சுமுகமான, நியாயமான தொகுதிப் பங்கீடாகக் கனியட்டும். ○



மார்ச் 2006
அருநெல்லிக்காயில் அருமைச் சமையல்!
மூலிகை வெள்ளம்!
பரீட்சைக்கு நேரமிருக்கு!
எக்ஸாம் டிப்ஸ்
அழகுத் தோட்டம் போட ஆலோசனைகள்
இப்போது விற்பனையில்...
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்

கடைக்கண் கர்நாடகா!

புதுசு:

'கூகுள்தாசனா இருக்கிற எல்லாரையும் கூடிய சீக்கிரம் எங்க கட்சிக்கு இழுக்கப் போறோம். இனிமே ஸர்ச் இஞ்ஜின்னு சொன்னா 'காஸ்மிக்ஸ்'தான் மக்கள் மனசுல ஞாபகத்துக்கு வரணும்' என்று நம்பிக்கையுடன் சொல்கிறார்கள் ஆனந்த் ராஜாராமன், வெங்கி ஹரிநாராயண் என்ற இரண்டு இந்தியர்களும்! இவர்கள் Cambrian Ventures என்ற நிறுவனத்தை நிறுவியவர்கள். கூகுளை உருவாக்கிய குழுவில் இருந்த Larry Page, Sergey Brin ஆகியோருடன் இணைந்து இவர்கள் உருவாக்கியிருக்கும் புதிய ஸர்ச் இஞ்ஜின் 'காஸ்மிக்ஸ்' (www.kosmix.com). இதன் பீட்டா வெர்ஸன் இப்போது நடைமுறையில் இருக்கிறது. பிற ஸர்ச் இஞ்ஜின்கள் எல்லாப் பிரிவுகளிலும் தேடுவது போல தேடுவதில்லை காஸ்மிக்ஸ். தேட வேண்டிய பிரிவுகளும் இதில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.



• ஆனந்த் ராஜாராமன்



• வெங்கி ஹரிநாராயண்

ப்ராடெக்ட்:

உள்ளாடைகள் வரை வந்துவிட்ட வைரத்தை இப்போது லேப்-டாப் வரை கொண்டு வந்து விட்டார்கள். Tulip நிறுவனம், E-Go Diamond என்ற புதிய லேப்-டாப்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் உடல் பல்லாடியம் வொய்ட் கோல்ட் தகடுகளால் உருவாக்கப்பட்டுள்ளது. பெண்கள் தூக்கிப்போகும் ஹேண்ட் பேக் சைஸ்தான். லேப்-டாப்பின் மேல் சட்டையையும் விதவிதமாக மாற்றிக்கொள்ளும் வசதியும் உண்டு.



பூரிப்பு:

பில்கேட்ஸின் முழுப் பார்வையும் இந்தியாவின் பக்கம் திரும்பியுள்ளது. அதிலும் ஸ்பெஷலாக கடைக்கண் பார்வை, கர்நாடக மாநிலம் மீது விழுந்துள்ளது. அடுத்த நான்கு ஆண்டுகளில் $1.7 பில்லியன் இந்தியாவில் முதலீடு செய்யப்போவதாக அறிவித்துள்ளார். நவம்பரில் வெளியாகியுள்ள மைக்ரோசாஃப்டின் SQL Server 2005, Visual Studio 2005 ஆகியவற்றை கற்றுக்கொடுக்க இந்தியாவில் ஐந்து நிறுவனங்களை (NIIT, Karrox, IIHT, New Horizons, STG சென்னை) தேர்ந்தெடுத்துள்ளது. இவை போக கர்நாடக மாநிலத்தில் ஆரம்பிக்கப் போவதாக சில ப்ராஜெக்ட்களை அறிவித்துள்ளது. அதில் முக்கியமானது மைக்ரோசாஃப்ட் இந்தியாவில் தனது முதல் இன்னொவேஷன் சென்டரை பெங்களூரில் ஆரம்பிக்க உள்ளது. இதன் மூலம் மென்பொருள் தயாரிப்பாளர் பலர் தங்களின் புது மென்பொருள்களை மைக்ரோசாஃப்டுக்கு விற்க முடியும்.

- முகில்

தினசரி ஒரு சலுகை அறிவிப்பு என்று செயல்படும் ஜெ.வின் அதிரடிப் போக்கு ஏழு கட்சிக் கூட்டணியை ரொம்பவே பாதித்திருக்கிறது. "கடந்த நான்கரை வருடங்களாக மக்களைப் பிழிந்தெடுத்துவிட்டு இப்போது அள்ளிவிட்டால் மக்கள் ஏமாற மாட்டார்கள்" என்று சொல்கிறார்கள் கூட்டணித் தலைவர்கள். "நிதிநிலை சீரடைந்துவிட்டதால் எங்களால் இப்போது கொடுக்க முடிகிறது" என்கிறார் ஜெ. இதோ சமீபத்திய சலுகைகள் பட்டியல்; அவற்றுக்காகக்கூடிய செலவுப் பட்டியல்...



1. அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு 50 சதம் அகவிலைப்படியை அடிப்படை சம்பளத்துடன் இணைத்த வகையில் செலவு - **1700 கோடி**

2. அரசு ஊழியர் ஈட்டிய விடுப்பு சரண் - **200 கோடி**

3. அரசு ஊழியர் மரண மடைந்தால் ஒன்றரை லட்சம் - **20 கோடி**

4. கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு - **22 கோடி**

5. சாலைப் பணியாளர்கள் மீண்டும் சேர்ப்பு - **62 கோடி**

6. தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கு முறையான சம்பள விகிதம் கொடுக்க மூன்று ஆண்டுகள் என்று குறைத்ததால் ஏற்படும் செலவு - **800 கோடி**

7. திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் (10,000 பேர்) - **12 கோடி**

8. பள்ளி மாணவ - மாணவியருக்கு இலவச சைக்கிள் - **20 கோடி**

9. மாணவ, மாணவியருக்கு இலவச அட்லஸ், அகராதி - **2 கோடி**

10. கிராம நிர்வாக அலுவலர்கள் - ஊழியர்கள் ஓய்வூதியம் (44,000 பேர்) - **50 கோடி**

11. விசைத்தறி மின்கட்டண சலுகை - **30 கோடி**

12. உழவர் பாதுகாப்புத் திட்டம் - **72 கோடி**

13. தேயிலைக்குக் கூடுதல் விலை - **10 கோடி**

14. கிராமப்புற ஏழைகள் - புது வாழ்வுத் திட்டம் - **514 கோடி**

15. பொங்கலுக்கு இலவச வேட்டி-சேலை (கடந்த சில ஆண்டுகளாகக் கொடுக்கப்படவில்லை) - **257 கோடி**



காணுமா கஜானா?

16. கரும்புக்கு டன் ரூபாய் 1014 என்று நிர்ணயித்ததில் செலவு - **100 கோடி**

17. விவசாயிகள் வட்டி தள்ளுபடி - அரசு ஈடுகட்ட வேண்டிய தொகை - **1,376 கோடி**

18. தமிழகமெங்கும் திருக்கோயில் களுக்கு - **5 கோடி**

19. வீட்டுக்கு ஒரு மின்விளக்கு - **4 கோடி**

20. விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் - **3,000 கோடி**

21. வெள்ள நிவாரணம் நபருக்கு 2000 ரூபாய் கொடுத்த வகையில் **1,000 கோடி**

22. என்றென்றும் சென்னை - நகரை அழகுபடுத்தும் திட்டம் - **644 கோடி**

23. ஆண்டிப்பட்டிக்கு ஸ்பெஷல் திட்டம் - **106 கோடி**

24. 2006 - 07 சாலை பராமரிப்புக்கு - **804 கோடி**

25. ரேஷன் அரிசி விலையேற்றாமல் இருக்க மாநில அரசு ஈடுசெய்ய வேண்டிய தொகை - **1,200 கோடி**

மொத்தம் : **12,010 கோடி**

அப்பாடியோவ்... இவ்வளவு நிதி ஆதாரங்களுக்கு எங்கே போவார் ஜெ. என்கிறீர்களா? (அது அடுத்து வர இருக்கும் அரசின் தலைவலி) சமீபத்தில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்த பொன்னையன், 2006-07ல் சுமார் 5,500 கோடி பட்ஜெட்டில் துண்டு விழும் என்று சொல்லியிருக்கிறார். இப்போது 'ஜெயலலிதா அறிவித்துள்ள சலுகைகளால் நிச்சயம் செலவு அதிகரிக்கும். துண்டின் நீளம் அதிகமாகும். இதைக் குறைக்க வரி போட்டு, சிக்கனத்தையும் கையாள வேண்டும். ஆனால் இதைப் பற்றியெல்லாம் ஜெ. பேசுவாரா என்ன! "தேர்தல் தேதி அறிவிப்பு வரை ஜெ.வின் அறிவிப்புகளும் தொடரும்" என்கிறார்கள். ஏழு கட்சிக் கூட்டணி, விஷயத்தை தேர்தல் கமிஷனின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. ஆனால், தேர்தல் தேதி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில் குற்றச்சாட்டுகளுக்கு வலு ஏது?

- ப்ரியன்

நான் அமிதாப் ரசிகன்!



'டிஷ்யூம்' படத்தில் குட்டி அமிதாப்பாக வந்து குட்டீஸ்களின் மனத்தைக் கொள்ளை கொண்டவர் ஃபக்ரு. அவரிடம் அந்தப் படத்தின் ஹீரோவான ரிஸ்க் பாஸ்கர் அதாங்க நம்ம ஜீவாவை பேட்டி காணச் சொன்னோம். உடனே களத்தில் குதித்துவிட்டார்.

"அமிதாப்பா, ஃபக்ருவா... எது உங்க நிஜப் பேரு?" என்று எடுத்த எடுப்பிலேயே ஜி.கே. கேள்வியைப் போட்டார் ஜீவா.

ஃபக்ரு தனக்கேயுரிய பாணியில் சிரித்துவிட்டு, "'அம்புலி அம்மாவே'ன்னு ஒரு மலையாளப் படத்துல நான் நடிச்சேன். அதுல என் கேரக்டர் பேரு ஃபக்ரு... அப்புறம் அதுவே என் பேராயிடிச்சு... இப்போ 'டிஷ்யூம்' படத்துல 'குட்டி அமிதாப்'னு ஆச்சுல்ல... அது மாதிரி... ஆனா என் ஒரிஜினல் பேரு அஜய் குமார்..." என்று சிரிக்க,

"என்னது அஜித்குமாரா..." என்று ஃபக்ருவைக் கலாய்த்துவிட்டு, "உங்களுக்கு அமிதாப்பை பிடிக்குமா?" என்றார் ஜீவா.

"பிடிக்குமாவா? என் ஃபேவரிட் ஹீரோவே அவருதான். ஒரு நாள் இல்ல ஒருநாள், அவரைச் சந்திச்சு, அவர் என்னைத் தூக்கி கையில வச்சுக்கிட்டு இருக்குற மாதிரி ஒரு போட்டோ எடுத்துக்கணும். அதான் என் ஆசை" என்ற ஃபக்ருவின் விருப்பம் நிறைவேற வாழ்த்துச் சொன்ன ஜீவா, "இந்த 'டிஷ்யூம்' சான்ஸ் எப்படிக் கிடைச்சது உங்களுக்கு" என்று ரொம்ப ஆர்வமாய்க் கேட்டார்.

"டைரக்டர் சசியோட மனைவி என்னோட ரசிகை தெரியுமா..." என்று ஃபக்ரு பிட்டைப் போட, ஜீவாவின் கண்கள் ஆச்சர்யம் காட்டின. "நான் சூர்யா டீ.வியில 'சவாரி கிரிகிரி'ன்னு ஒரு காமெடி புரோக்ராம் பண்றேன். இதுவரைக்கும் 186 எபிஸோடுகள் பண்ணியாச்சு. அதை சசி சாரோட மனைவி ரொம்பவே ரசிப்பாங்களாம். அதுல என் பெர்ஃபாமென்ஸ் அவங்களுக்கு பிடிக்குமாம். இது பத்தி சசி சார்கிட்டே சொல்லி, அதன் மூலமாத்தான் எனக்கு 'டிஷ்யூம்' சான்ஸ் கிடைச்சது. தேங்க்ஸ்டு சூர்யா டீ.வி..." என்று சொல்லும்போது ஃபக்ருவின் முகம் முழுவதும் புன்னகை.

"இதுதான் உங்களுக்கு முதல் தமிழ்ப் படம்னு எனக்குத் தெரியும்... இதுவரைக்கும் எவ்ளோ மலையாளப் படம் நடிச்சிருப்பீங்க ஃபக்ரு" என்று ஜீவா அடுத்த கேள்வியைப் போட, பளிரென்று வருகிறது பதில் 'பதினேழு' என்று.. "'டிஷ்யூம்'க்கு முன்னால ரெண்டு மூணு சான்ஸ் தமிழ்ல வந்தது... ஆனா எனக்கேத்த மாதிரி கேரக்டர் இல்ல... ஆனா 'டிஷ்யூம்'ல நல்ல ஸ்கோப் இருந்தது... நல்ல பேர் கிடைச்சதுல ரொம்ப சந்தோஷம்"

"ஆமா... ஃபக்ரு..





* ஃபக்ரு

நீங்க நிறைய ஸ்டேஜ் ஷோ பண்ணுவீங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். அதுபத்தி கொஞ்சம் எடுத்து விடறது?"

"எனக்கு இந்த ஸ்டேஜ் அப்பியரன்ஸ்ல 17 வருஷ அனுபவம் இருக்கு. 27 தடவை துபாய்ல ஷோ நடத்தியிருக்கேன். இது தவிர, அமெரிக்கா, ஐரோப்பால நிறைய புரோக்ராம் பண்ணியிருக்கேன். அதுல என்னோட காமெடி, மிமிக்ரி, பாட்டு, டான்ஸ் எல்லாத்துக்கும் நல்ல வரவேற்பு"

"உங்களோட லட்சியம் என்னன்னு சொல்லுங்க". இது ஜீவாவிடமிருந்து வந்த கடைசிக் கேள்வி.

"தமிழ் சினிமால ஒரு தனி காமெடி டிராக் பண்ணணும்ங்கறதுதான். என்னோட முழுத் திறமையும் அதுல வெளிப்படணும்" என்று சொல்லிவிட்டு, "ஜீவா சார்... இப்போ நான் உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கறேன்... உங்க பிரதருக்கு மேரேஜ் ஆயிடுச்சு... உங்களுக்கு ரூட் கிளியர்... எப்ப மாட்டிக்கப் போறீங்க?" என்று ஜீவாவைப் பார்த்துச் சிரிக்க, "பாலக்காட்டுக்குப் போற டிரெயின் வந்துடுச்சாம்... கிளம்புங்க... கிளம்புங்க..." என்றபடி ஜீவா காரில் ஏறிப் பறந்தார்.

"இனி பறந்துடிச்க!" என்றபடி ஃபக்ருவும் புறப்பட ஆரம்பித்தார்.

- முத்து

திருப்பம் தருமா திருச்சி மாநாடு?

• கே.என். நேரு

சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் பரபரப்பான சூழ்நிலையில், திருச்சியில் வரும் மார்ச் 3, 4 மற்றும் 5 தேதிகளில் நடைபெறவிருக்கிறது தி.மு.கவின் ஒன்பதாவது மாநில மாநாடு. இளைஞரணியின் வெள்ளி விழா மாநாடாக முதல்நாள் நிகழ்ச்சிகள். மார்ச் 4, 5 ஆகிய இரு தினங்களில் கட்சியின் மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள். ஞாயிறு மாலை மாநாட்டில், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி பங்கேற்கவிருப்பதாக அறிவித்திருக்கிறார் தி.மு.க தலைவர் கருணாநிதி.

செம்பட்டு விமான நிலைய வளாக சுற்றுச்சுவர் அருகே, இருநூறு ஏக்கர் பரப்பில் மாநாட்டுத் திடல். மாநாடு நடைபெறும் பகுதி விமான நிலையத்தையொட்டி அமைந்திருப்பதால், அப்பகுதி முழுவதும் தகரங்கள் கொண்டு அடைக்கப்பட்டுள்ளன. மாநாட்டுக்கான நுழைவுவாயில் மிக பிரமாண்டமாக அமைக்கப்பட்டு வருகிறது. மலையிலிருந்து சூரியன் உதிப்பது போலவும், மலைத்தொடரில் கோட்டை முகப்பு போன்ற நுழைவாயிலில் பெரியார், அண்ணா, கலைஞர், பேராசிரியர், மு.க.ஸ்டாலின் ஆகியோரின் புடைப்புச் சிற்பங்களும் வடிவமைக்கப்படவுள்ளன. இப்பணிகளை திரைப்பட கலை இயக்குனர் ஜெ.பி. கிருஷ்ணா தலைமையிலான குழுவினர் செய்து வருகின்றனர். "இருநூறு பேர் கொண்ட குழுவினர் கடந்த ஒரு மாதமாக இரவு பகல் பாராது பணியாற்றி வருகின்றனர். மாநாட்டு முகப்பு அனைவரும் கண்டு வியக்கும் அளவுக்கு விழிகளுக்கு விருந்தாக அமையும் என்பது எங்கள் குழுவினரின் கணிப்பு!" எனக் கூறுகிறார் ஜெ.பி. கிருஷ்ணா.








மூன்று லட்சம் தொண்டர்கள் உள்ளே வந்து அமரத்தக்க வகையில் மாநாட்டுப் பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. முற்றிலும் தகரத்தினால் ஆன மேற்கூரை வேயப்பட்டு வருகிறது. பெங்களூர் தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த முந்நூறு நபர்கள் மேற்கூரை வேயும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் மாநாட்டு அரங்கம் முழுவதும் இரும்புக் கம்பிகளைக் கொண்டு தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாநாட்டு மேடையில் சுமார் நானூறு பேர் (இதுவே மினி பொதுக்கூட்டம்!?) அமரும் வகையில் எண்பதடி நீளம், நாற்பதடி அகலம் கொண்ட கான்கிரீட் மேடை. இம்மேடை முழுவதும் கிரானைட் கற்கள் பதிக்கப்பட உள்ளன.

மொத்தத்தில், திமுக வரலாற்றில் இது ஒரு ஹைடெக் மாநாடு. 1996 தேர்தலின்போது, அதற்குச் சமீபமாக திருச்சியில்


மாநில மாநாடு கண்டதோடு, அப்போதைய தேர்தலில் வென்று ஆட்சியையும் பிடித்தது தி.மு.க. சென்டிமெண்டாக தற்போது 2006 தேர்தலுக்குச் சற்று முன்பாக அதே திருச்சியில் மாநில மாநாடு காணவிருக்கிறது. 96 போல 2006லும் தி.மு.க வென்று ஆட்சியைப் பிடிக்குமா என்பதுதான், மாநாட்டின் மில்லியன் டாலர் கேள்வி!





• தீபநாதன் • ஜே.பி.கிருஷ்ணா

மாநாட்டுத் திடலின் உள்ளே சவுக்குக் குச்சிகளின் ஓடுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த மூன்று



• மாநாட்டு முகப்பு!

பெண்களிடம் பேசினோம். மாநாட்டு முகப்புக்கு முன்புறத்தில் இருக்கும் ராஜாங்கம் நகர், பட்டத்தம்மாள் தெருவாசிகள் அவர்கள்.

"எங்க குடியிருப்புக்குப் பின்னாடி இருந்த இடம்ங்க இது. ஒரே முள்ளுக்காடா இருந்துச்சு. இம்மாம் பெரிய்ய எடத்தைக் கொத்திப் போட்டு சும்மா பளபளன்னு ஆக்கிட்டாங்க. இந்த மூணு நாள் மாநாட்டுக்கு ரொம்பப் பணம் செலவாகும்னு பேசிக்கறாங்க. அஞ்சு வருஷம் ஆட்சியில இல்லேங்கவும் கட்சிக்காரங்களுக்கு மேற்கொண்டு உற்சாகம் தந்து, இந்த முறை ஆட்சியைப் பிடிக்கறதுக்காக மாநாடு போடறதா சொல்லிக்கிறாங்க. எது எப்படியோ, எங்க வூட்டுக்குத் தொடர்ந்து ஒரு மாசமா அடுப்பெரிக்கச் சுள்ளி கெடைச்சதுங்க!" என்றனர் சமயபுரம், ராசம்மாள், சாவித்திரி ஆகிய மூவரும் கோரஸாக.

"பொதுவாக திருச்சியில் மாநாடு நடத்தும் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் 'இது ஒரு திருப்புமுனை மாநாடு' என்றே சொல்லி வந்திருக்கின்றன. எதுகை மோனைக்காகச் சொல்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இந்த மாநாட்டுக்குப் பின்னர் நடை பெறவிருக்கும் பொதுத்தேர்தலில் அதிக இடங்களில் வென்று தி.மு.க ஆட்சி அமைக்கப் போவது மட்டும் உறுதி!" என்றார் திருச்சி மாநகர 4வது வட்ட தி.மு.க துணைச் செயலாளர் தீபநாதன்.

மாநாட்டுப் பணிகளில் மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்தார் முன்னாள் அமைச்சரும், தி.மு.க திருச்சி மாவட்டச் செயலாளருமான கே.என்.நேரு. "தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றத்துக்கு அடித்தளமாக அமையவிருக்கும் மாநாடு இது. தேர்தல் வெற்றிக்கான முதல் முரசு ஒலிக்க இருக்கிற தி.மு.கழக மாநில மாநாடு!" என்று சுருக்கமாகவே நம்மிடம் பேசினார்.



• சமயபுரம், ராசம்மாள், சாவித்திரி...

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

"மெஷின்களைப் புரிந்துகொண்ட அளவு நாம் மனிதர்களைப் புரிந்து கொண்டோமா என்பது இன்றும் தொடரும் கேள்வி. வளைகுடா நாடுகளுக்கு பெட்ரோல் எத்தனை பெரிய வளமோ, அதைப்போல நம் நாட்டுக்கு மனிதவளம். அதற்கு போதிய கல்வி கொடுத்து, வேலையும் கொடுத்தால் அமெரிக்காவை அதட்டுகிற வல்லரசாக நாம் மாறிவிடலாம்" என்கிறார் இருபத்திரண்டு வயது திவ்யா. இளங்கலையில் பொருளாதாரமும், முதுகலையில் மனிதவள மேம்பாடும் பயின்று, முன்னணி நிறுவனத்தில் எச்.ஆர்.டி மேனேஜராகப் பணிபுரியும் இவரது தந்தை, நடிகர் சத்யராஜ்.

"அப்பா ஒரு நடிகராக இருப்பதை எந்த அளவுக்கு விரும்புகிறேனோ அதே அளவு, அவர் பகுத்தறிவுவாதியாக கள் என்றெல்லாம் பாகுபாடு பார்க்காமல் சக கலைஞர்களைத் தயங்காமல் அங்கீகரித்து பாராட்டுகிற அவரது இயல்பான குணம் காரணமாக, அவருக்கு எல்லா மட்டத்திலும் நண்பர்களும் ரசிகர்களும் உண்டு. ஆனால் நான் மட்டும் அவருடன் சதா சண்டை போடுவேன்.

'எனக்கு எம்.ஜி.ஆர்தான் பிடித்த ஹீரோ. நிஜத்திலும் அவர் ஹீரோவாக வாழ்ந்தவர்' என்பார். 'இல்லை இல்லை... ஷாருக்கான் மாதிரி ஓர் அசத்தல் ஹீரோவை வைத்துக்கொண்டு நீங்கள் இப்படிச் சொல்லக்கூடாது' என்று வேண்டுமென்றே விவாதிப்பேன். ஆனால் அவர் விட்டுக்கொடுக்க மாட்டார். அப்பாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய இரண்டு அற்புதங்கள் உண்டு. ஒன்று எளிமை. மற்றொன்று பகுத்தறிவு. அப்

"மனங்களைப் புரிந்து கொள்ளுங்கள்!"

இருப்பதையும் நேசிக்கிறேன். அவரது பகுத்தறிவு அணுகுமுறைதான் எனக்கு மனிதவளத் துறை மீது ஆர்வத்தை உண்டாக்கியது. வாழ்க்கை, சினிமா இரண்டிலும் சக மனிதர்களோடு அவர் நட்பு பாராட்டும் விதத்தில் மனிதநேயம் இருக்கும். தம்மை வைத்துப் படமெடுக்க வரும் தயாரிப்பாளர்கள், லாபமடைய வேண்டும் என்பதற்காகவே சம்பள விஷயத்தில் எப்போதும் அவர் கறாராக நடந்து கொண்டதில்லை. பணத்தைக் காட்டிலும் கொள்கையே முக்கியம் என்று வாழும் அப்பாவிடமிருந்துதான் கொள்கை பிடிப்பை கற்றுக் கொண்டேன். வயதில் மூத்தவர்கள், இளையவர் பாவின் படங்களில் ஏதாவதொன்று தோல்வியுறும்போது 'கடவுள் நம்பிக்கையில்லை! அதான் படம் ஓடவில்லை' என்று பலர் காதுபடச் சொல்வதைக் கேட்டு எனக்கு நானே சிரித்துக் கொள்வேன்.

அப்பாவைப் போல இறைவழிபாட்டில் எனக்கும் நம்பிக்கையில்லை. ஆனால் எங்கள் வீட்டில் விசாலமான பூஜையறை உண்டு. அது பாட்டியின் பூஜையறை. பாட்டியின் மீது மட்டுமல்ல, யரர் மீதும் தமது பகுத்தறிவுக் கொள்கைகளை அப்பா திணித்ததில்லை. நானும் அப்படித்தான்.

'அவனுக்குத்தான் புத்தி பிசகிப்

திவ்யா சத்யராஜ்



"எங்கள் வீட்டிலும் விசாலமான
பூஜை அறை உண்டு!"

போச்சு... நீங்களும் ஏன் கண்ணுங்களா இப்படிக் கெட்டுப் போறீங்க' என்று பாட்டி எங்களைச் செல்லமாகக் கடிந்து கொள்வார். பள்ளிப் பருவத்தில் பரதம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீராத ஆவல். சித்ரா விஸ்வேஸ்வரன்தான் என்னுடைய குரு. நடராஜர் சிலை முன்பு வணங்க வேண்டிய நிலை வரும்போதெல்லாம் எனது குருவுக்குச் செலுத்தும் குரு வணக்கமாகவே அதை எடுத்துக் கொள்வேன். என்னைப் பொறுத்தவரை மனம் தான் மனிதனுக்கு எல்லாமே. அதை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும். மற்றவர் மனத்தை மாசுபடுத்தும் விதமாக நடந்துகொள்வது மனித இனத்தில் பிறந்த யாருக்கும் அழகல்ல. மற்றவர் மனம் புண்படுகிற மாதிரியான விவாதங்களில் ஈடுபடுவதை நான் விரும்ப மாட்டேன். அதே நேரம் மடமை என்று நான் நினைக்கிற பல விஷயங்களைப் பற்றி பகிரங்கமாக விவாதிக்கத் தயங்கியதில்லை.

எனக்கு அரேன்ஜ்டு மேரேஜ் சிஸ்டத்தில் அறவே நம்பிக்கையில்லை. ஜாதகம் பொருந்தி, ஜாதி பொருந்தி, மதம் பொருந்தி செய்துகொள்கிற திருமணத்தில் மனப்பொருத்தம் என்பது கண்துடைப்பாகவே இருக்கிறது. முன்பின் அறிமுகமில்லாத ஒரு ஆண்மகனைக் காட்டி மாப்பிள்ளை என்பதும்... போகப் போகப் பிடித்துப் போய்விடும் என்று சொல்வதும் இன்னும் இந்தத் திருமணத்தில் மட்டுமே நிகழ்ந்து வரும் வேடிக்கை. காதலித்துத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அது எளிய திருமணமாக இருக்க வேண்டும் என்பதுதான் எனது இறுதியான முடிவு" என்று சொல்லும் இவ்யாவுக்கு சினிமா துறையிலிருந்து அழைப்பு வந்ததா?

''படிப்பை முடித்துவிட்டு ஈ.ஐ.டி. பாரி இந்தியா நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அச்சமயம் மாடலிங் உலகிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. மாடலிங் துறை மீது எனக்கு மரியாதை உண்டு. பெண்களுக்குத் தன்னம்பிக்கை தருகிற பல துறைகளில் மாடலிங் முக்கியமானது. ஆனால் நான் பார்த்து வந்த பணியின் காரணமாக பகுதி நேரமாகக் கூட மாடலிங் செய்ய முடியவில்லையே என்ற வருத்தம் எனக்குண்டு. நம் வீட்டில் அப்பாவும் அண்ணனும் நடிகர்களாக இருக்கிறார்கள். சினிமாவுக்கு அவர்கள் போதும். நாம் எதற்கு என்று விட்டுவிட்டேன். எனக்கும் நடிப்பதில் விருப்பம் இருந்து, நான் முன்வந்திருந்தால், அப்பா என்னைத் தடுத்திருக்க மாட்டார். சுதந்திரம் தருவதில் அவர் வள்ளல்.

நண்பர்களோடு ஒருமுறை டிஸ்கோ சென்றுவர விரும்பினேன். அதற்காக அப்பாவிடம் ஒரு வார்த்தை சொல்லி விடலாம் என்று அவர் முன்பு நின்றேன். அவர் தடையேதும் சொல்லவில்லை. 'உன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உன் நண்பர்கள் மீது உனக்கு நம்பிக்கை இருக்கிறது. பிறகு எதற்கு அனுமதி' என்று கேட்டார். பெற்றோரின் நம்பிக்கையை நாம் காப்பாற்ற வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு எப்போதுமே என்னிடம் உண்டு" என்று சொல்லும் இவ்யா, மனிதவள மேம்பாட்டில் தற்போது எம்ஃபில் படித்துக் கொண்டிருக்கிறார்.

"எக்காரணம் கொண்டும் எந்தப் பன்னாட்டு நிறுவனத்துக்கும் எனது மூளையைச் செலவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன். இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கும் ஒரு பெரிய உள்நாட்டு நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டு சமூக சேவையிலும் ஈடுபட வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்."



தொகுப்பு :
ஆர்.சி.ஜெயந்தன்



Om Sai Sri Sai Jai Jai sai

SHRI SAI CHARAN TRUST

140, First Floor, Seshan Complex, Anna Salai, Saidapet,
Chennai - 15. Ph : 55638612. Mobile : 9444376887
Email : sainov23@hotmail.com
http://saidarbarusa.org/saicharan

அன்புடனும், பக்தியுடனும் யாரொருவர் எனக்கு ஒரு இலை, ஒரு மலர், ஒரு பழம் அல்லது தண்ணீரை சமர்ப்பிக்கிறார்களோ அந்தத் தூய்மையான தன்னடக்கமுடையவருடைய அன்புக் காணிக்கையானது ஆர்வத்துடனும், தாமதமின்றியும் என்னால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், பகவத் கீதை

பேரன்புடைய சாயி பக்தர்களே,

பகவான் ஷீரடி சாயி பாபாவின் மகத்தான கருணையாலும் நல் ஆசியாலும், மேற்படி அறக்கட்டளையினால் ஷீரடி சாயி பாபாவின் ஆலயம் (உத்திர ஷீரடி) மற்றும் இலவச மருத்துவமனை ஒன்றையும் சென்னை திருச்சிராப்பள்ளி மார்க்கத்தில் (சென்னையிலிருந்து 89 கி.மீ. தொலைவில்) மதுராந்தகம் அருகில் உள்ள நேத்தப்பாக்கம் என்ற கிராமத்தில் கடந்த 02.02.2006 அன்று தொடங்கி கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

தனது மட்டற்ற அருளை மனித சமுதாயத்தின்பால் ஜாதி, மத, இன வேறுபாடின்றி வழங்கி வரும் பகவான் **ஸ்ரீ ஷீரடி சாயி பாபாவின்** ஆலயத் திருப்பணிக்கு சாயி பக்தர்களாகிய தாங்கள் தாரளமாக நன்கொடைகளை தர வேண்டுகிறோம். பணமாக உதவும் அன்பர்கள் தவிர, மேற்படி கட்டட நிர்மாணத்திற்கு பொருட்களாக தர விரும்புவர்கள் அவ்விவரத்தை அறக்கட்டளையினரிடம் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விதம் வழங்கப்படும் உதவிகளுக்கு [illegible] [illegible] வழங்கப்படும்.

நன்கொடைகள் "Account Payee" Crossed Cheque / Demand Draft-ஆக **"SHRI SAI CHARAN TRUST"** சென்னை என்ற பெயரில் எடுக்கப்பட்டு மேற்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

ஜெய் சாயிராம்

ஆபீஸிலிருந்து சீக்கிரம் கிளம்பினேன். அண்ணனைப் பார்க்க டாக்டரை அழைத்துப் போக வேண்டும். சம்பளத்தில் பாதி அவனுக்குச் செலவாகிறது. சகுந்தலாவுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. 'இப்படி ஒரு பைத்தியத்தை வைத்துப் பார்க் கணும்னு எனக்குத் தலையெழுத்து' என்று வெடிப்பாள். அவளையும் குற்றம் சொல்ல முடியாது. புத்திசுவாதீனம் இல்லாமல், வெறும் சிலையாய், சூன்யப் பார்வை பார்த்தபடி அவன் இருந்தபோது கவனித்துக் கொண்டாள். அடம் பிடிக்காமல் இருந்தபோது தொந்தரவும் இல்லை. ஆனால் இப்போதெல்லாம் கையில் கிடைத்ததைத் தூக்கி எறிகிறான். கூச்சல் போடுகிறான். தெருவுக்கு ஓடி விடுகிறான். நான் சொன்னால்தான் கொஞ்சமாவது கேட்கிறான். 'பைத் தியக்காரன் வீடு' என்றே எங்கள் வீட்டுக்குப் பெயர் வைத்துவிட்டார் கள் தெருவாசிகள். அனாதை மாதிரி மனநல மருத்துவமனையில் இவனைச் சேர்க்கவும் எனக்கு இஷ்டமில்லை.

எல்லோருக்கும் கிடைத்த மாதிரி எங்களுக்கு அண்ணன் கிடைக்க வில்லை. நான், இரு தங்கைகள், அண்ணன், அம்மா கொண்ட குடும் பம் எங்களுடையது. எங்களுக்கு விவரம் தெரியுமுன்பே அப்பா இறந்துவிட்டார். அம்மா இட்லிக் கடை வைத்தாள். அடுப்பும், இட்லிப் பானையுமே அவள் வாழ்வை ஆக்கிரமித்துக் கொண் டன. மூத்தவனான அண்ணன் தான் எங்களைக் கவனித்துக் கொண்டான். எஸ்.டி.டி. பூத்தில் இரவு வேலை பார்த்தான். ரைஸ் மில்லில் பார்ட் டைம் வேலை செய்தான். சம்பாதித்த காசை எங்கள் படிப்புக்குச் செலவழித்தான். எங்களுடன் சேர்ந்து தானும் படித்தான். நாங்கள் படித்து முடிக் கவும் அவனுக்கு நல்ல வேலையும் கிடைத்தது. புகை மூட்டத் திலேயே அம்மா இறந்து போனாள். வசதியுள்ள மாப்பிள்ளைகளாக பார்த்துத் தங்கைகளைக் கொடுத்த அண்ணன், எனக்கும் வேலை பார்த்துக் கொடுத்தான். என்னுடன் வேலை பார்த்த சகுந்தலாவை நான் விரும்பினேன். முன்னால் நின்று கல்யாணத்தை நடத்தி வைத்தான். தனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிவிட்டான். மணிப்பூரில் வேலைக்கு வருமாறு ஆர்டர் வந்தது. பெரிய வேலை, கை நிறைய சம்பளம். தடுத்தும் புறப்பட்டுப் போனான். இரண்டு கடிதம் போட்டான். அதன்பிறகு தகவலே இல்லை.

திடீரென்று கம்பெனியிலிருந்து உடனே வரும்படி கடிதம் வந்தது. அவசரமாய்ப் போனேன். சித்தபிரமை பிடித்த நிலையில் அண்ணனை ஒப்படைத்தார் கள். தீவிரவாதிகள் அவன் சம்பளப் பணத்தில் பாதியைக் கேட்டிருக்கிறார்கள். மறுக்கவே தாக்கிவிட்டு ஓடியிருக்கிறார் கள். ஊருக்கு அழைத்து வந்தேன். அவன் வேலை பார்த்த கம்பெனி நஷ்டஈடு தரும் என்றார்கள். தரவேயில்லை. என் கைப் பணம் கரைந்ததுதான் மிச்சம். அண்ணன் குணமாகவேயில்லை. சகுந்தலா அவனை வெறுக்க ஆரம்பித்தாள். "நமக்குக் கல் யாண வயசில் பெண் இருக்கா. அதை நினைச்சுப் பாருங்க" என்கிறாள். அண்ணன் பணத்தைப் பகிர்ந்துகொண்ட தங்கைகள் "அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடு. வீட்டில் வைத்துச் செல வழிக்க முடியாது" என்று அறிவுரை சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொண்டார்கள்.

அண்ணனை நினைக்கையில் ரத்தக் கண்ணீர் வடிகிறது. எப்படி எல்லாம் எங்களை வளர்த்தான்? அப்போதெல் லாம் என்னை கையைப் பிடித்து ஸ்கூலுக்கு அழைத்துப் போவான். எதிரே மரத்தடி பாட்டியிடம் சீனிக் கிழங்கு, சீனி



மிட்டாய் வாங்கிக் கொடுப்பான். சிவந்த நாக்கைத் துருத்தி அழகு பார்ப்பேன். என் பள்ளிப்பையை சுமந்து வருவான். என்

கும் தூக்கணாங்குருவிக் கூடுகளை காட்டுவான். சிவப்பாய் இருக்கும். பட்டுப்பூச்சிகள், பொன்வண்டுகள் எல்லாம் தீப்பெட்டியில் அடைத்து வைத்து விளையாடுவோம். மறக்க முடியாத நாட்கள் அவை. தனக்கென்று எதுவுமே செய்து கொண்டதில்லை அவன். நான் சம்பாதிக்

இதயம்!

அருள்மொழிவர்மன்

எழுத்து மாதிரியே தானும் எழுதி ஹோம் ஒர்க் முடித்துக் கொடுப்பான்.

மாரியம்மன் கோயில் தீமிதி விழாவில் தெருவில் திரை கட்டிப் படம் போடுவார்கள். தங்கைகளையும், என்னையும் இழுத்துக்கொண்டு ஓடுவான். உயரமான திண்ணை மீது ஏற்றி விடுவான். 'படம் தெரியுதா தெரியுதா?' என்று கேட்டுக் கொண்டேயிருப்பான். மரத்தில் தொங்

கும்வரை விதவிதமாய் டிரஸ் எடுத்துக் கொடுப்பான். "நீ எடுத்துக்கலையா அண்ணா?" என்பேன். "நீ போட்டிருக்றதைப் பாக்கறதே எனக்கு சந்தோஷமாயிருக்குடா" என்பான்.

என் மகள் ப்ரவீணாவை இன்றைக்குப் பெண் பார்க்க வருகிறார்கள். காலையிலிருந்தே அண்ணன் ரொம்ப ரகளை செய்கிறான். தூக்க மாத்திரை



"நீ பார்த்துட்டு வந்தது போலி டாக்டர்னு எப்படிச் சொல்ற?"

"எனக்கு மூல வியாதி அதிகமா இருக்குன்னு போனா, 'கவலையே படாம சந்தோஷமா போங்க. 'ஆண் மூலம் அரசாளும்'னு சொல்லி அனுப்பிட்டாரு."

- லட்சுமி நாராயணன்

கொடுத்து மாடி அறையில் பூட்டி வைத்தேன். மாப்பிள்ளை வீட்டாருக்குப் பலவித சந்தேகங்கள்.

"உங்க அண்ணனுக்கு புத்தி சுவாதீனம் இல்லையாமே? பரம்பரையா வருதா எப்படி? ஆஸ்பத்திரியில் சேர்க்கலாமே? எங்க பையன் நாளைக்கு வரப்போக இருக்க முடியுமா அவர் வீட்டோடு இருந்தா?" என்று விட்டுச் சென்றார்கள். அவர்கள் போனபின் சகுந்தலா பொருமித் தீர்த்தாள்.

"உங்க அண்ணன் நம் வீட்டில் இருக்கிற வரைக்கும் நம்ம பொண்ணுக்குக் கல்யாணம் ஆகப் போறதில்லை. அண்ணன் வளர்த்தாராம். இவரு நன்றிக் கடன் செலுத்துறாராம்". எனக்கு வேதனையாக இருந்தது.

அடுத்தடுத்து வந்த வரன்களெல்லாம் இதே காரணத்தால் தட்டிப் போயின. ஆஸ்பத்திரியில் சேர்த்தால் அதிகச் செலவு. தங்கைகள் தங்கள் வீட்டில் வைத்துக்கொள்ள மறுத்து விட்டார்கள்.

"பழசையெல்லாம் நினைச்சா நடக்குமா கதை? அனாதைன்னு சொல்லி ஆஸ்பத்திரியில் சேர்த்துடுங்க" என்றாள் சகுந்தலா.

தினம் தினம் இதே பிரச்னைதான். சண்டைதான். என்னதான் செய்யலாம்? கடைசியாய் சகுந்தலாவும், என் தங்கைகளும் முன்பே பேசி வைத்திருந்ததை சட்டென்று ஆரம்பித்தார்கள்.

"அண்ணாவை வடக்கே போற ரயில் எதிலாவது ஏத்தி விட்டுடுங்க. சட்டைப் பையில் கொஞ்சம் பணத்தையும் வச்சிடுங்க. அவ்வளவுதான் நம்மால் முடிஞ்சது. இது ஒண்ணும் புதுசு இல்லை. எல்லோரும் செய்யறதுதான். கன்னியாகுமரியில் போய்ப் பாருங்க. ஹிந்தியில் பேசிட்டு எத்தனை பைத்தியம் அலையுதுன்னு. எல்லாம் வடக்கே இருந்து தெற்கே வந்ததுதான்" பலவிதமாய்ப் பேசி என்னைச் சம்மதிக்க வைத்தார்கள். எனக்கும் வேறு வழி புலப்படவில்லை.

ரயில் நிலையத்தில் காத்திருந்தோம். ஷேவிங் செய்து நல்ல டிரஸ் போட்டு தோரணையாக இருந்தான் அண்ணன். அடிக்கடி சிரித்துக்கொண்டான். எனக்கு திக்திக்கென்று இருந்தது. ரயில் வரவும், கூட்டம் அதிகம் இல்லாத பெட்டியில் ஏறி உட்கார்ந்தோம். ரயில் புறப்பட்டது. ரொம்ப நேரம் கழித்து ஏதோ ஒரு ஸ்டேஷனில் நிற்க, அண்ணனைப் பார்த்தேன். அண்ணன் கண் மூடி உட்கார்ந்திருந்தான். அவனை விட்டுவிட்டு மெதுவாக எழுந்து வாசல் பக்கம் போனேன். இறங்க முயன்றபோது சட்டென்று எட்டிக் கையைப் பிடித்து விட்டான். பக்கென்றாகி விட்டது. ஆதரவாகச் சொன்னான். "மெதுவா இறங்கு தம்பி. கீழே விழுந்துடப் போறே." அவ்வளவுதான்... என்னால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. இறங்கத் தோன்றாமல் அவனைப் பிடித்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டேன். கண்கள் கரகரவென கண்ணீரைச் சொரிந்தன. ○


Our jewelry comes at a SMALL PRICE
NARAYANA™
pearls & gems
MAIN SHOW ROOMS
KASI ARCADE,
Next to GRT Hotel,
116 Thyagaraya Road,
T.Nagar, Chennai - 17,
Phone : 044 - 2815 3457 / 5624
PONDY BAZAAR
Fathima Plaza
T.Nagar,
Chennai -17
Phone: 044 - 2815 5094 / 3660
ADYAR
57, L.B. Road,
Chennai - 20
Phone: 044 - 2446 2592
(Opp. Ganapathi Ram Theatre)
VADAPALANI
Ist Floor, Raahat Plaza,
Arcot Road, Chennai - 26
Phone: 044 - 5514 5092
(Near Vadapalani Bus Terminus)
NUNGAMBAKKAM
Eldorado Building,
G9 - Groud Floor,
N.H.Road, Chennai - 34
Phone: 044 - 5218 1463





கோடம்பாக்கம்

சினிமா ஆசையில் கிராமத்திலிருந்து சென்னைக்கு வருகிறான் கதாநாயகன் நந்தா. பல வருஷ போராட்டங்களுக்குப் பிறகு அவன் இயக்கிய முதல் படம் ஒரு வெள்ளிக்கிழமையன்று ரிலீஸாகிறது. இந்த சந்தோஷத்தில் தலைகால் புரியாத நந்தாவின் தாய் கலைராணி, புரை விழுந்த தன் கண்ணை ஓடோடிச் சென்று சரி செய்துகொள்கிறாள். முதல் காட்சியன்றே தவறாமல் வந்து படம் பார்க்குமாறு ஊரையே வீடு வீடாகச் சென்று அழைக்கிறாள்.

ரசிகர்களின் இரண்டரை மணி நேர சந்தோஷத்துக்காக ஓடாய்த் தேயும் இயக்குனர்களின் கண்ணீர்ப் பக்கங்களை துடிக்கத் துடிக்க பதிவு செய்திருக்கிறார் டைரக்டர் ஜெகன்ஜி.

மணிவண்ணன் கதாபாத்திரம் தமிழ் சினிமாவுக்குப் புதிது. பொள்ளாச்சி ரைஸ் மில் ஓனரான அவர், சினிமா தயாரிக்க முயல்வதற்கு முன் தன் மில்லில் வேலை பார்ப்பவர்களிடம் கதை சொல்லச் சொல்லி சம்மதம் வாங்குவதும், ஒவ்வொரு நாளும் படப்பிடிப்பில் நடக்கும் கூத்துகளை பொள்ளாச்சியிலுள்ள தனது மனைவி பாப்பாத்தியிடம் தவறாமல் தொலைபேசியில் சொல்வதும் சுவாரஸ்யங்கள்.

படப்பிடிப்பு முடிந்தபின்பும் தமது படம் ரிலீஸாகத் தடுமாறுவதைக் கண்டு நொந்துபோகும் நந்தாவின் நடிப்பில் இயக்குனர்களின் வேதனைகள் மிளிர்கின்றன.

கிராமத்துக் காதலியாக பாவாடை, தாவணியில் வலம் வரும் இயாவின் கண்ணசைவுகளில் காதல் ஹைக்கூ. அல்டாப் வட இந்திய நடிகையாக படப்பிடிப்புத் தளத்தில் அராஜகம் பண்ணும் தேஜாஸ்ரீ, சமீபத்திய சர்ச்சையில் சிக்கிய நிலாவை ஞாபகப் படுத்துகிறார்.

விஷம் குடித்து உயிர் பிழைத்தபின் தேஜாஸ்ரீ தடாலடியாகத் திருந்துவது, நந்தாவின் படம் முதல் காட்சியிலிருந்தே சூப்பர் ஹிட் ஆவது என்று சினிமா பற்றிய படத்தில் சினிமாத்தனமான காட்சிகள்!

புரொடக்ஷன் மேனேஜரான ரமேஷ் கண்ணா, பிரச்னை எழும்போதெல்லாம் தன் சாமர்த்தியத்தால் சரிசெய்வது நெகிழ வைக்கின்றன. கஞ்சா கருப்புவின் நகைச்சுவை நாளுக்கு நாள் மெருகேறிக் கொண்டிருக்கிறது. அதேசமயம் முத்துக்காளையின் கலாட்டா அளவைக் குறைத்திருக்கலாம். செந்தில்குமாரின் ஒளிப்பதிவு யதார்த்தம்.

- லஜ்ஜாவதி

நடக்குமென்பார்; நடக்கும்!

26.2.2006 முதல் 4.3.2006 வரை

தஞ்சை பரத்வாஜ்



படம் : ஸ்ரீஹரி



மேஷம்: ராசிநாதன் செவ்வாய் ராசிக்கு 2-ல் சஞ்சாரம். பொறுமையும், நிதானமும் தேவைப்படும் வாரம். வாக்குவாதம் தவிர்க்கவும். நெருங்கியவர்களுடன் கருத்து வேற்றுமை வரலாம். பணப் பற்றாக்குறை வராது. உடல் ஆரோக்கியம் பாதிக்காது. தொழில் ஸ்தானத்தில் பல நெருக்கடிகளைச் சமாளிப்பீர்கள். கணவன் – மனைவி உறவு நற்பலனைத் தரும். புத்திரபாக்கியம் ஏற்படும். வீடு வாங்கும் யோகம் இருக்கிறது. சுபகாரியம் நடக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பலனைத் தரும். .

ரிஷபம்: பணவரவு ரெடி. எதிர்ப்பு, தொல்லை குறையும். உடல்நிலை பாதிப்பு நீங்கும். குழந்தைகள் பற்றின கவலை நீங்கும். சுபகாரியம் கைகூடும். நெருங்கிய உறவினர் / நண்பர் பிரிந்து செல்லும் சூழ்நிலை உருவாகும். மனத்தில் தைரியமும் தன்னம்பிக்கையும் ஏற்படும். மாணவ / மாணவியர் படிப்பில் அக்கறை செலுத்தவும். குரு / ராகு / கேதுவை வழிபட்டு வருதல் நற்பலனைத் தரும்.

மிதுனம்: ராசிநாதன் புதன் ராசிக்கு 9-ல் சூரியனுடன் சஞ்சாரம். நற்பலனைத் தரும் வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். சுபகாரியப் பேச்சு வார்த்தைகள் பலனைத் தரும். பண வசதி பெருகும். சுபச் செலவு ஏற்படும். வீடு, வாசல் வாங்க நல்ல நேரம். உடல்நிலை நன்றாக இருக்கும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். மனக்குழப்பம் இராது. புதிய வேலை கிடைக்கும். ராகு / கேதுவை வழிபட்டு வருதல் நலம் தரும்.

கடகம்: சுபநிகழ்ச்சி கைகூடும். மன சஞ்சலம் தீரும். கிரஹ ப்ராப்தம் ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் கிட்டும். மாணவ / மாணவியர் கல்வியில் மேன்மை பெறுவர். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. நீண்ட நாள் தடைபட்டு வந்த காரியங்கள் உடனே நடக்கும். குரு / சனி வழிபாடு நல்லது.

சிம்மம்: திட்டம் தீட்டி காரிய சாதனை பெறுவீர்கள். பணவரவு ரெடி. வீட்டைப் பார்க்க நேரம் இல்லாமல்

வேலைப்பளு வந்து சேரும். யாரிடமும் அளவுக்கு அதிகமாகப் பேசாமல் இருப்பது நல்லது. குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். கைப்பொருள் மீது கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது உஷார். சகாக்களால் தொல்லை வரலாம். தடை விலகித் திருமணம் கைகூடும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கன்னி: ராசி நாதன் புதன் ராசிக்கு 6-ல் சூரியனுடன் சம்பந்தம். எதிலும் முட்டுக்கட்டை ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் ஏற்படும். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. மனநிலையை ஒழுங்குபடுத்தி எந்த வேலையையும் செய்யவும். பணவரவு பாதிக்காது. தெய்வ பலம் இருக்கிறது. சகோதரர்களால் நற்பலன் ஏற்படும். வழக்கு வெற்றி பெறும். வாக்கு, தனம் மேலோங்கும். வீடு, வாசல் வாங்க நல்ல நேரம். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Chennai
2. Periodicity of Publication : Weekly
3. Name of Printer : Lakshmi Natarajan
   Nationality : Indian
   Address : Old No. 36, New No.12 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher : Lakshmi Natarajan
   Nationality : Indian
   Address : Old No. 36, New No.12 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor : Seetha Ravi
   Nationality : Indian
   Address : 'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total captial: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2006 Lakshmi Natarajan
Publisher

● என்னுடைய மகன் திருமணம் எப்போது நடக்கும்?

- வி.எஸ். நந்தகோபால், பெங்களூர்

உங்கள் பையனுக்கு 36வது வயதில் திருமணம் நடக்கும். படித்த, பண்புள்ள, வேலையிலுள்ள பெண் அமைவாள். பெண், உறவில் அமையது.

● எனது மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- ஆர். கலாரகு, சென்னை - 51

உங்கள் மகளுக்கு 24 வயதில் திருமணம் நடக்கும். நாகதோஷம் உள்ள வரனைப் பார்க்கவும்.

● என் மகனின் எதிர்காலம் எப்படி

துலாம்: பொருளாதாரம் பலப்படும். செல்வ நிலை உயரும். முடியாமல் இருந்து வந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். வழக்கு வெற்றிப் பாதையில் செல்லும். தன விருத்தி ஏற்படும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வீடு, வாசல் வாங்க நல்ல நேரம். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். செலவுகள் பயனுள்ளதாக இருக்கும். மாணவ / மாணவியர் படிப்பில் மேலோங்குவர். உடல்நிலை பாதிக்காது. தொழில் ஸ்தானத்தில் பிரச்னைகள் இருந்தாலும் சமாளிக்கலாம். குரு / சனியை வழிபட்டு வருதல் நலம் தரும்.

விருச்சிகம்: பொன், பொருள் சேரும். திடீர் பணவரவு காத்திருக்கிறது. வாக்கு வன்மை மேலோங்கும். குடும்பத்தில் சுபகாரியம் கைகூடும். நெருங்கிய உறவினர் / நண்பர்கள் விலகிப் போவார்கள். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சி ஏற்படும். கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். மகப்பேறு பாக்கியம் ஏற்படும். உல்லாச பிரயாணம் ஏற்படும். வேலையில் இடமாற்றம் ரெடி. சிலருக்கு வீடு வாங்க நல்ல நேரம். புதிய முயற்சி கைகூடும். வராத பணம் கைக்கு வந்து சேரும். ராகு / கேதுவை வழிபட்டு வருதல் நலம் தரும்.

இருக்கும்? எப்போது திருமணம் நடக்கும்?

- உஷா, சென்னை - 10

தங்கள் பையனுக்கு ராகு தசை நடைபெற்று வருகிறது. தொழில்நுட்பத் துறையில் படித்தால் நன்கு முன்னேற்றம் ஏற்படும். 26 வயதுக்கு மேல் திருமணம் நடக்கும். மனதுக்குப் பிடித்த இடத்தில் வேலை பார்ப்பான். ராகு ப்ரீதி செய்து வரவும். நாகதோஷம் இருக்கிறது.

● **நான் மூன்று நண்பர்களுடன் கூட்டுத் தொழில் செய்து வருகிறேன். நஷ்டத்தில் வியாபாரம் நடக்கிறது. வேறு தொழில் செய்யலாமா? எதிர்காலம் எப்படி இருக்கும்?**

- எம்.சுந்தரம், மதுரை

உங்கள் ஜாதகப்படி கூட்டுத்தொழில் செய்தால் நஷ்டம் ஏற்படும் என்பது விதி. கேது தசை உங்களுக்கு பாதிப்பைத் தராது. மனதுக்குப் பிடித்த, பழக்கப்பட்ட தொழிலைச் செய்தால் நஷ்டம் வராது. விநாயகப் பெருமானை வழிபட்டு வருதல் நலம் தரும்.

பரத்வாஜ் பதில்கள்!

தனுசு: புதிய முயற்சி கைகூடும். தொழில், நிலபுலன்கள் மூலம் ஆதாயம் கிட்டும். சுபச் செலவு ஏற்படும். எதிரிகள் சரணடைவார்கள். வாக்கு வன்மை மேலோங்கும். பணப் பற்றாக்குறை தீரும். தொழில் துறையில் இடமாற்றம் ஏற்படும். புதிய வேலை கிடைக்கும். நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். வழக்கு வெற்றி பெறும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். கணவன் – மனைவி உறவு நற்பலனைத் தரும். புத்திர பாக்கியம் ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு சிறந்தது.

மகரம்: ராசிநாதன் ராசிக்கு 7-ல் சஞ்சாரம். தனம், வாக்கு, கல்வி மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சுபகாரியம் கைகூடும். எண்ணிய காரியம் கைகூடும். குடும்பத்தில் சந்தோஷம் ஏற்படும். நண்பர் / உறவினர்கள் மூலம் நற்பலன் ஏற்படும். வீடு வாங்க நல்ல நேரம். உத்தியோகத்தில் உயர்வு, பதவி மாற்றம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் ஏற்படும். வியாபாரத்தில் நற்பலனை அடைவீர்கள். குரு / சனி வழிபாடு சிறந்தது.

கும்பம்: எதிரிகளை வெல்லும் திறமை ஏற்படும். போட்டி, பொறாமை விலகும். எடுத்த காரியம் வெற்றி அளிக்கும். வழக்கு வெற்றி பெறும். உடல்நிலையில் கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். சிலருக்குத் தொழில் மாற்றம் வரலாம். பணக் கஷ்டம் வராது. நண்பர் / உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். புதிய வீடு வாங்க நல்ல நேரம். முயற்சிக்கும் காரியம் வெற்றி அளிக்கும். கடன் தொல்லை நீங்கும். பத்திரிகைகளில் பெயர் வரும். வாகனத்தில் செல்லும் போது உஷார். உணவுக் கட்டுப்பாடு அவசியம். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. ராகு / கேது வழிபாடு சிறந்தது.

மீனம்: வேலையில் மாற்றம், பதவி உயர்வு கிட்டும். தடைகள் விலகும். பத்திரிகைகளில் பெயர் வரும். இருக்கும் இடம், வீடு, தொழில் ஸ்தானத்தில் இருந்து வந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். வீடு வாங்க நல்ல தருணம். எதிரிகளால் தொல்லை இருக்காது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் ஏற்படும். நண்பர் / உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நல்லது.

அலட்சியம் வேண்டாம்!

மரபின்மைந்தன்
முத்தையா



தொண்ணூறு வயதான கிழவர் ஒருவர் 'கிளுகிளு'வென சிரித்துக் கொண்டு ஒரே இடத்தில் கால்மாற்றி மாற்றி நின்று கொண்டிருந்தார். நெருங்கிக் கேட்ட போது ஊன்றுகோலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே பொக்கை வாயைக் காட்டிச் சொன்னாராம், "பூமிக்குள்ளே இருந்து யாரோ கிச்சு கிச்சு பண்றாங்க". குனிந்து பார்த்த போதுதான் தெரிந்தது, பாவி மனிதர் நெளிகிற பாம்பின் மீது நின்று கொண்டிருப்பது!

'ஓடுகிற பாம்பை மிதிக்கிற வயசு' என்பது இளைஞர்களுக்கு மட்டுமல்ல... கிழவர்களுக்கும் பொருந்தும். இது ஆக்கபூர்வமான மனிதர்களுக்குப் பொருந்துகிற பழமொழியல்ல. அவசரக்காரர்களுக்குப் பொருந்துவது.

விவரமான வேகத்திற்குத்தான் விவேகம் என்று பெயர். இதில் 'வி' இனிஷியல். பாதையில் என்ன கிடக்கிறதென்று தெரியாமலேயே பயணம் போவது விவேகம் ஆகாது.

பொங்கிப் பெருகுகிற ஆர்வமும் செய்துகாட்ட வேண்டும் என்கிற வேகமும் சில நேரம் கைகொடுக்கும். பல நேரம் கண் மறைக்கும். ஒன்றை ஊன்றிக் கவனிக்கிற நிதானம் இருக்கிற போதுதான் பதற்றமில்லாமல் செயல்பட முடியும்.

பல வீடுகளில் மின்சாரம் அணைந்தவுடன் மெழுகுவத்தியைத் தேடுவார்கள். எங்கேயோ மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிகுண்டைத் தேடுவது மாதிரி வீட்டையே கலைத்துப் போட்டுத் தேடுவார்கள். அநேகமாக மின்சாரம் வந்து பத்து நிமிடங்களுக்குப் பிறகு மெழுகுவத்தி கிடைக்கும்.

எது எங்கே இருக்கிறது என்பதற்கொரு மனக்கணக்கு அவசியம். இது வீட்டுக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும் பொருந்தும்.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அகாஸின் என்ற புகழ்பெற்ற இயற்கையியல் அறிஞர் ஒருவர் இருந்தார். தன்னிடம் வந்து சேர்ந்த மாணவரின் கையில், ஒரு குடுவைக்குள் நீந்துகிற மீனைக் கொடுத்தார். அரைமணி நேரம் அந்த மீனை நன்கு கவனித்துவிட்டு, பிறகு தன்னிடம் அதனை விரிவாக வர்ணிக்குமாறு பணித்தார். மாணவனின் பத்து நிமிட வர்ணனையைக் கேட்ட பிறகு சொன்னார், "நீ இன்னும் மீனைச் சரியாகக் கவனிக்கவில்லை.

இன்னும் நன்றாகப் பார்த்துச் சொல்'' என்று. ஒன்றை முழுமையாக உள்வாங்கும் கலையை அந்த மாணவன் பழகிக் கொள்ளும் வரையில் இந்தப் பயிற்சி தொடர்ந்தது.

வாய்ப்புகள் என்பவை என்ன தெரியுமா? சிதறிக் கிடக்கிற சின்னச் சின்ன விஷயங்கள். அவற்றைக் கண்டறிந்து ஒன்று சேர்ப்பதில்தான் கவனித்துப்



பார்க்கும் கலை வெளிப்படுகிறது. வெற்றி தருகிறது.

தன்னுடைய எதிர்காலம் என்ன? என்று தெரியாத இளைஞன், ஒரு கிராமத்தில் இருந்த முனிவரைத் தேடிப்போய் முறையிட்டான். ''இந்தக் கிராமத்தில் இருக்கிற கடைவீதிக்குப் போ! உன் எதிர்காலம் உனக்குத் தெரியும்'' என்றார் முனிவர். அந்தக் கிராமத்தில் மூன்று கடைகள் அவன் கண்களில் பட்டன. ஒன்று, உலோகங்களை விற்கிற கடை. இன்னொன்று மரக்கடை. மூன்றாவது, மெல்லிய வயர்களை விற்கிற கடை. உலோகம், மரம், மெல்லிய வயர்கள் மூன்றையும் தனித்தனியாகப் பார்த்த இளைஞன் குழம்பிப் போனான்.

ஏதும் புரியாமல் அந்தக் கிராமத்திலேயே அலைந்து திரிந்தான். இரவு நேரமாகிவிட்டது. எங்கிருந்தோ இனிய இசை வந்து அவன் செவிகளை வருடியது. இசை வந்த திசை நோக்கி நடந்தான். ஒரு மனிதர் சிதார் வாசித்துக் கொண்டிருந்தார். பௌர்ணமி வெளிச்சத்தில் அந்த சிதாரையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான் இளைஞன். திடீரென்று பரவசமானான். அந்த சிதாரின் சேர்மானங்கள், உலோகம், மரம், வயர். அந்த சிதார் கலைஞரிடம் சீடனாகச் சேர்ந்தான். புகழ் பெற்ற சிதார் கலைஞனாக வளர்ந்து பொருளும் புக



''சலூன் கடையில தலைவர் என்ன கலாட்டா பண்ணினாரு?''

''துண்டு போர்த்தினதோட சோடாவும் தரணும்ங்கிறாரு!''

- ராம் ஆதிநாராயணன்

ழும் ஈட்டினான்.

சிதறிக் கிடக்கிற விஷயங்களின் சேர்க்கை தான் சிதார் என்பது புரிந்த பிறகு வாய்ப்புக்கு வாசல் திறந்தது. சின்ன விஷயங்களின் சேர்க்கைதான் வாழ்க்கை.

சின்ன விஷயங்களை நாம் பெரும்பாலும் கோட்டை விடுவதற்கு அடிப்படையே அலட்சியம்தான். சீறிப் பாயும் இரு சக்கர வாகனங்களுக்கு 'சிக்னல்' சின்ன விஷயமாகத் தெரிகிறது. அந்த அலட்சியமே ஆபத்தை ஏற்படுத்துகிறது.

பெரிய பெரிய விபத்துகளின் பின்புலத்தில் எல்லாம் ஒரு விநாடி அலட்சியம் தான் காரணமாய் இருக்கிறது.

இந்தக் கவனத்தைத்தான் 'விழிப்புணர்வு' என்கிறார்கள். உண்மையில் சொல்லப் போனால் விழிப்புணர்வுக்கும் விழிகளுக்கும்கூட சம்பந்தமில்லை. பார்வையில்லாதவர்களைப் பாருங்கள், தங்கள் இயல்பு வாழ்க்கையை அவ்வளவு நம்பிக்கையோடு நகர்த்துவார்கள்.

சில நேரங்களில், சாலையைக் கடக்க மட்டும்தான் அவர்களுக்கு உதவி தேவைப்படும். மற்றபடி, வீட்டிலிருந்து புறப்பட்டுப் பேருந்து நிலையம், பேருந்தில் இருந்து இறங்கி அலுவலகம் அனைத்திற்கும் துல்லியமாகச் சென்று வருவார்கள். அடிக்கணக்கோ, சுதிபிசகாத உள்ளுணர்வோ அவர்களை வழி நடத்துகின்றன.

பார்வையிழந்தவர்களிலேயே தம்பதிகளாய் வாழ்பவர்களும் உண்டு. அவர்கள் வீட்டுக்கு விருந்தினராய்ப் போனால் உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கும். இயல்பாகச் சமையலறைக்குப் போய் காபி போடுவார்கள். சமைப்பார்கள். கூடச் சுடப் பரிமாறுவார்கள். விருந்தாளிகள் என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்வார்கள். ஒரேயொரு விஷயத்தில் மட்டும் கடும் கோபம் வரும்.

அவர்கள் வைத்திருக்கும் மேசையையோ, நாற்காலியையோ ஓரங்குலம் நகர்த்தி வைத்தால் கூடக் கோபம் வந்துவிடும். ஏன் தெரியுமா? எது, எங்கே இருக்கிறது என்கிற விஷயம் அவர்கள் மூளையில் மிகத் துல்லியமாய்ப் பதிவாகியிருக்கிறது. ஒரு சிறிய இடமாற்றம்கூட பெரிய குழப்பங்களை ஏற்படுத்தி விடுகிறது.

அவர்களுக்கு விழியில்லாமல் இருக்கலாம். விழிப்புணர்வு இருக்கிறது. எல்லாவற்றையும் மிகத் துல்லியமாக உள் வாங்கிக் கொள்கிறபோது அந்த விழிப்புணர்வு கூர்மையடைகிறது.

ஊனமுற்றவர்களையே எடுத்துக் கொள்ளுங்கள். கண் பார்வை தங்களுக்கு இல்லை என்கிற விழிப்புணர்வு, மற்ற புலன்களை மேலும் கூர்மையாக்குகிறது. காதால் கேட்பது, தொடுவது, நுகர்வது அனைத்தும் மூளையில் பதிவாகின்றன.

தவம் புரியும் முனிவர்கள் கண்மூடிக் கொள்வதே கவனத்தைக் கூர்மை செய்யத்தான். வாழ்க்கையை வெற்றிகரமாய் அமைத்துக்கொள்ள கவியரசு கண்ணதாசன் ஒரு யோசனை சொன்னார்:

''மூன்று மணி நேரம் முடமாய் இருங்கள். சில மணி நேரம் செவிடாய் இருங்கள். கூடுமானவரை குருடாய் இருங்கள்'' என்று. இருக்கிற விழிப்புணர்வை கூர்மைப்படுத்தும்போது வாழ்க்கையை வெல்வது எளிதாகிறது. வாழ்க்கை என்பதே இனிதாகிறது.

(தொடரும்)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்













மும்பையைச் சேர்ந்த மனநல மருத்துவர் ராஜேஷ் பரேக். இவரது மனைவி மகப்பேறு மருத்துவர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நிறைய தடவை காஷ்மீருக்குத் தொழில்ரீதியாக மனைவி பயணம் செய்ய, கூடவே ஒரு போட்டோகிராபராக பயணம் செய்வது ராஜேஷின் வழக்கம். குழந்தைப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு மனைவி மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்க, ராஜேஷ், கேமராவில் காஷ்மீரத்து இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகளை, சுட்டுத் தள்ளிக் கொண்டிருப்பார்.

இப்படி கடந்த கால் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட காஷ்மீரத்துக் காட்சிகளின் புகைப்படங்களை வைத்து சென்னையில் ஒரு கண்காட்சி நடத்தினார் ராஜேஷ். துவக்கி வைத்தவர் கமல்.

“புகைப்பட விற்பனை மூலம் கிடைக்கும் நிதியை நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட காஷ்மீர் மக்களின் நிவாரணத்துக்கு அளிப்பதே எனது நோக்கம்” என்று கூறும் ராஜேஷின் படங்களில் சில இங்கே பார்வைக்கு...

- மௌலி

காஷ்மீர் காதலன்



* ராஜேஷ் பரேக்



ஆறாவது குழந்தை!

இன்று நமது சமூகத்தில் சமையல் சௌகரியத்திற்காகவே பலர் கலியாணம் செய்து கொள்கிறார்கள். "எத்தனை நாள் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு திண்டாடுவது?" என்பதற்காகக் கலியாணம் செய்துகொண்டவர்கள் சிலரை எனக்குத் தெரியும்.

ஒரு மனைவி இறந்த பின், இரண்டாந்தாரம் கலியாணம் செய்து கொள்ளுவோர் பலர் இந்தக் காரணத்தைக் கூசாமல் சொல்வார்கள். நாற்பது நாற்பத்தைந்து வயதுக்கு மேல் ஆன பிறகும், பன்னிரண்டு, பதின்மூன்று வயதுப் பெண்களை இரண்டாந்தாரமாக மணப்பவர்கள் நம் நாட்டில் எத்தனையோ பேர். இத்தகைய இரண்டாந்தாரக்காரர்களைப் பரிகாசம் செய்யும் கதை ஒன்று உண்டு.

மூன்று மனிதர்களுடைய ஆவிகள் ஒரே சமயத்தில் யமனுடைய சந்நிதானத்தை அடைந்தன. முதல் ஆவி பூலோகத்தில் பிரம்மசாரியாகவே இருந்து இறந்தவனுடையது. அவனைப் பற்றிய விவரம் சித்திரகுப்தன் அறிவித்ததும் யமன், "இவன் பூலோகத்தில் கஷ்டமே அனுபவியாதவன்; ஆகையால் இவனை இங்கே நரகத்தில் போடு" என்றான். அடுத்த ஆவி ஒரு கிரஹஸ்தனுடையது. "ஐயோ, பாவம்! உலகத்திலே கலியாணம் செய்துகொண்டு வெகு கஷ்டப்பட்டிருக்கிறான். இங்கேயாவது சுகமாயிருக்கட்டும், சொர்க்கத்திற்கு அனுப்பு" என்றான் யமன். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மூன்றாவது ஆவி, "யமதர்மராஜனே! நான் பூலோகத்தில் இரண்டு தடவை கலியாணம் செய்து கொண்டு ரொம்பக் கஷ்டங்களை அனுபவித்தவன்" என்று முறையிட்டது. உடனே யமன் வெகு கோபத்துடன், "அடே முட்டாள்! ஒரு தடவை கலியாணம் செய்துகொண்டு கஷ்டப்பட்டபின், இரண்டாம் தடவையும் கலியாணம் செய்து கொண்டாயா? இப்படிப்பட்ட மூடனுக்குச் சொர்க்கத்தில் இடம் ஏது? போடு இவனைக் கொடிய நரகத்தில்!" என்று கட்டளையிட்டான்.

ஆனால் இந்தக் கதை, பரிகாசம் ஒன்றுக்கும் இரண்டாந்தாரக்காரர்கள் பயப்படுவதில்லை. "என்ன செய்கிறது ஸார்! வீட்டிலே சமையலுக்கு ஒருத்தருமில்லை. எத்தனை நாள் சாப்பாட்டுக்குத் திண்டாடுகிறது?' என்று கூசாமல் பதில் சொல்வார்கள். மூத்த தாரத்தின் குழந்தைகள் இருந்தால் அவர்கள் மேல் பழியைப் போடுவார்கள்.

இதற்கு விலக்காக நடந்துகொண்ட ஒருவரை எனக்குத் தெரியும். அவர் நல்ல வருமானமுள்ள பெரிய பதவியில் இருந்தவர். அவருக்குச் சுமார் நாற்பது வயதானபோது அவருடைய மனைவியார் ஐந்து குழந்தைகளை விட்டு விட்டுக் காலஞ்சென்றார். உடனே, அவருடைய இஷ்டமித்திரர்கள் அவருடைய கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யத் தொடங்கினார்கள். அவர் அதை ஆட்சேபித்தபோது, "ஐந்து குழந்தைகள் உனக்கு இருக்கின்றனவே! அவற்றை யார் பார்த்துக் கொள்கிறது?" என்று கேட்டார்கள். ஆனால் "ஐந்து குழந்தைகள் போதாதென்று ஆறாவது குழந்தை ஒன்றையும் என் கழுத்தில் கட்டவல்லவா பார்க்கிறீர்கள்?" என்று மேற்படி





பிரமுகர் பதில் சொல்லவே, அவர்கள் வாயை மூடிக்கொள்ள வேண்டியதாயிற்று.

இவரைப்போல் நடந்துகொள்கிறவர்கள் நம் தேசத்தில் ஆயிரத்தில் ஒருவர்தான். முதல் மனைவி இறந்து ஒரு மாதத்திற்குள்ளாக இரண்டாவது கலியாணம் செய்து கொண்டவர்கள் சிலரை எனக்குத் தெரியும். இதற்கு சமூகத் தடையோ, சாஸ்திரத் தடையோ அணுவளவும் கிடையாது. ஆனால், இதே விஷயத்தில் மனைவியின் நிலை எப்படி இருக்கிறது? கழுத்தில் தாலி ஏறிவிட்டால் தீர்ந்தது. எட்டு வயதில் ஒரு பெண் விதவையானாலும், ஆயுள் பரியந்தம் அவள் விதவைதான். தனக்கு அறிவு வருவதற்கு முன்பே இறந்து போன, முகம் கூட ஞாபகம் இராத புருஷனை நினைத்து அவள் விரதம் இருக்க வேண்டும்!

இது விஷயத்தில் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஒத்த உரிமைகள் வேண்டுமென்றே நான் கருதுகிறேன். சாதாரணமாய், ஒரு தடவை இல்வாழ்க்கை சுகத்தை அனுபவித்தவர்கள், அத்துடன் திருப்தியடைந்திருப்பதுதான் நல்லது. முக்கியமாக, குழந்தைகள் இருந்தால், புருஷனாகட்டும் ஸ்திரீயாகட்டும், அவர்களைப் பேணி வளர்ப்பதையே இலட்சியமாகக் கொண்டு, மறு விவாகத்தைப் பற்றி நினையாமலிருப்பதுதான் உசிதம். ஆனால், மிகவும் பால்யத்தில் புருஷனையோ மனைவியையோ இழப்பவர்கள் புனர் விவாகம் செய்துகொள்ள உரிமை இருக்கவேண்டும். வயதானவர்களும் காதல் ததும்பிப் போய்க் கலியாணம் செய்து கொள்வதாய் இருந்தால், செய்து கொள்ளட்டும். ஆனால், வீட்டில் சமையலுக்கு ஆள் இல்லை என்று, வயதான புருஷர்கள் இளம் பெண்களைக் கலியாணம் செய்து கொள்வதைக் கட்டாயம் தடுக்க வேண்டும். அப்படிப் பட்டவர்கள் சமையல் பரீட்சையில் தேறிய பரிசாரகர்களைக் கலியாணம் செய்து கொள்வது உசிதமே தவிர, இளம் குழந்தைகளின் வாழ்க்கையைப் பாழ் செய்வது மகா பாதகம்.

- 'பெண் தெய்வங்கள்'
நூலிலிருந்து வானதி பதிப்பகம்.

நான் யாருக்காக?

‘நேர்மையான அரசியல்’ என்றால் இன்றைக்கு ‘கிலோ என்ன விலை?’ என்று கேட்கிறார்கள். அத்தனை பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. நமது முன்னோர்கள் பலர் நேர்மையையே உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட்டதை பலர் இன்று மறந்துவிட்டார்கள்.

பக்தவத்சலம் முதல்வராக இருந்தபோது, தமது டிரைவருக்கான சம்பளத்தைத் தமது சம்பளத்திலிருந்துதான் கொடுத்தாராம். முதல்வரான அவரைப் பார்க்க வரும் பெரிய மனிதர்கள் உட்கார நாற்காலி, சோபா எல்லாவற்றையும் தமது செலவிலேயே வாங்கிப் போட்டிருந்தாராம்...

காமராஜர் முதல்வராக ஆட்சி செய்த காலம் முழுவதும் சென்னையில் கூட அரசு வாகனத்தை உபயோகிக்கவில்லை. அதேபோல சென்னையில் தங்குவதற்கு அரசுக் கட்டடத்தை உபயோகிக்கவில்லை. வாடகை வீட்டிலேயே தங்கியிருந்தார்.

மக்களுக்காக உழைத்த கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம், சென்னை தாம்பரம் பகுதியில் ஒரு பழைய பிய்ந்துபோன குடிசையில் குடியிருந்தார்.



இப்படி மக்களுக்காகச் சிந்தித்த அரசியல் தலைவர்கள் அன்றைக்கு இருந்தார்கள். இன்றைக்கு... பெருமூச்சுதான் வருகிறது.

ஒரு எம்.பியின் மாதச் சம்பளம் ரூ.12000/- அவரது அலுவலகச் செலவுக்காக மாதம் ரூ.14000/- தொகுதிப் படி மாதம் ரூ.10000/- நாடாளுமன்றம் கூடும் சமயத்தில் தினப்படியாக ரூ.500/- தினமும் பயணப்படி கிலோமீட்டருக்கு ரூ.8/- (இவ்வளவு தூரம் என்ற கட்டுப்பாடு கிடையாது), இந்தியாவுக்குள் எங்கு வேண்டுமானாலும் வருடத்திற்கு 40 முறை விமானத்தில் இலவச பயணம் (உடன் ஒருவரை அழைத்துச் செல்லலாம்), தலைநகர் டெல்லியில் மாதம் ரூ.2000/- வாடகையில் அரசு சொகுசு பங்களா, ஆண்டுக்கு 50 ஆயிரம் யூனிட் இலவச மின்சாரம், இலவச குடிநீர் எம்.பி. பங்களாவில் ஏ.சி., டி.வி. என அனைத்து வசதிகள், மூன்று தொலைபேசிகள், அரசுமுறைப் பயணமாக வெளிநாடு சென்றால் இலவச விமான டிக்கெட், தொகுதி மேம்பாட்டு நிதியாக ஆண்டொன்றுக்கு ரூ. 2 கோடி, எம்.பி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் மாதம் ரூ. 3000 ஓய்வூதியம்... அதிக காலம் பணியாற்றிய எம்.பிக்களுக்கு அதைப் பொறுத்துத் தொகை கூடும்...

இப்படி இத்தனை சலுகைகளை எம்.பிக்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்கிறார்கள். இவ்வளவு கிடைத்தும், கேள்வி கேட்க லஞ்சம் கேட்கும் எம்.பிக்களை நினைத்தால் வெட்கமும் வேதனையும் தான் அதிகமாகிறது.

தீவிரவாதிகளை மறைமுகமாக ஊக்குவிக்கும் நிலை இன்றைக்கு உருவாகி விட்டது. அதேபோல் இங்கு சில அரசியல்வாதிகள் தங்கள் வசதிக்காக சில ஜாதி சங்கங்களை வளர்க்கிறார்கள். ஒரே ஜாதியில் இரண்டு சங்கம், நான்கு சங்கம் என்று பிரிந்து செயல்படுகிறார்கள். ஏதோ ஒரு காரணத்துக்காக வளர்க்கப்பட்ட ஜாதி சங்கங்கள் இன்று விஸ்வரூபம் எடுத்துப் பயமுறுத்துகின்றன.

வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் சுதந்திரம் இல்லாமல் இருந்தது. ஆனால் ஒழுங்கு இருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் வேலைக்கு வரவேண்டும், குறிப்பிட்ட வேலையை, குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடிக்க வேண்டும் என்ற ஒரு வரைமுறை இருந்தது. இப்போது அப்படி இல்லை. நாட்டில் லஞ்சம் பெருகிவிட்டது. மக்களும் தங்கள் வேலை சீக்கிரமாக முடிய வேண்டும் என்பதற்காக அதிகாரிகள் முதல் பியூன் வரை லஞ்சம் கொடுத்துக் காரியத்தைச் சாதிக்க முயற்சி செய்கிறார்கள்.


ஒரு சில இடங்களில் போலீஸை மக்கள் நேருக்கு நேர் எதிர்க்கிறார்கள், அதற்குக் காரணம் அந்த போலீஸ் லஞ்சம் பெறுவது மக்களுக்குத் தெரிகிறது. அதனால் போலீஸால் மக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போகிறது. போலீஸ் துறையில் உள்ளவர்கள் லஞ்சம் வாங்காமல் தங்கள் மனச்சாட்சிபடி வேலை செய்தால் மக்கள் அவர்களைப் பார்த்து மரியாதை செய்வார்கள். போலீஸ் தொழில் மிகவும் புனிதமானது. இரவு பகல் என்று பார்க்காமல் 24 மணி நேரமும் உழைப்பவர்கள். அவர்களின் நேர்மையைப் பொறுத்தே மதிப்பு கூடும். இந்தக் கருத்தை நான் 'வல்லரசு' படத்திலேயே சொல்லியிருக்கிறேன்.

எத்தனையோ ஊழல் சமாசாரங்களை நான் பார்த்திருக்கிறேன். கேள்விப்பட்டிருக்கிறேன். என் படங்களில் கூட அதைத் தட்டிக் கேட்கிற மாதிரி காட்சிகளை வைத்திருக்கிறேன்.

நான் நடிப்புத் தொழில் மூலமாக தேவையான அளவுக்கு ஏற்கெனவே சம்பாதித்து விட்டேன். அதனால் அரசியலை வைத்துச் சம்பாதிக்கணும் என்ற அவசியம் எனக்கு இல்லை. மக்களும், மக்கள் நலனும் தான் எனக்கு முக்கியம். இனிமேல் அவர்களைப் பற்றித்தான் யோசிப்பேன். அவர்களுக்காகத்தான் பாடுபடுவேன்.

(அடுத்த இதழில் முடிக்கிறேன்)





உ

ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி-609 501.
✆ :04366 273900

நூதன ஸ்ரீ நடராஜமூர்த்தி ப்ரதிஷ்டை, லட்சார்ச்சனை, ஸ்ரீ ருத்ராபிஷேகம், ஸம்வத்ஸராபிஷேகம் மற்றும் திருக்கல்யாண உற்சவம்

பார்த்திப வருடம் பங்குனி மாதம் 2 ஆம் தேதி வியாழன் முதல் 5ஆம் தேதி ஞாயிறு முடிய (16.3.2006 - 19.3.2006)

அன்புடையீர்,

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா பல நற்பணிகளை ஆற்றி வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாக நிகழும் பார்த்திப வருடம் பங்குனி மாதம் 2ஆம் தேதி வியாழன் துவங்கி 5ஆம் தேதி ஞாயிறு முடிய (16.03.2006 - 19.03.2006) **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வர பெருமான் திருக்கோயிலில்** ஸ்ரீ நடராஜ மூர்த்தி ப்ரதிஷ்டா வைபவமும், ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழாவும் நடைபெற இருக்கின்றன. அது சமயம் உலக நலனை முன்னிட்டு பல விசேஷ ஹோமங்கள், லக்ஷார்ச்சனை, ஸ்ரீ ருத்ராபிஷேகம், திருக்கல்யாண உற்சவம் மற்றும் ஸம்வத்ஸராபிஷேகம் முதலியன நடத்தப்படுகின்றன. இவை சிறப்பாக நடைபெற அனைவரும் தங்களால் இயன்ற ஹோமம், பாராயண, ஜப, அர்ச்சனைகளுக்கான கட்டணங்களையோ அல்லது நன்கொடைகளையோ ஸபாவின் பெயருக்கு மணியார்டராகவோ, காசோலையாகவோ அல்லது வரைவுக் காசோலையாகவோ அனுப்பக் கோருகிறோம். அல்லது கீழ்கண்ட முகவரியில் யாரிடமாவது செலுத்தலாம்.

ஸ்ரீ சிவ ஸஹஸ்ர நாமத்தினாலும், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தினாலும் நடைபெறுகிற லட்சார்ச்சனைகளுக்கு விருப்பப்படுகிறவர்கள், இரண்டுக்குமாக சேர்த்து ரூ.200/- செலுத்தலாம்.

என்றும் இறைபணியில்

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435-2423297 மற்றும் **கிராமவாசிகள்**

பொன். சிவசங்கரன் M.A. நிர்வாக அதிகாரி

எண்	நிகழ்ச்சி	கட்டணம்
1.	ஸ்ரீமஹா கணபதி ஹோமம்	ரூ. 100/-
2.	ஸ்ரீ நவக்ரஹ ஹோமம்	ரூ. 100/-
3.	சிறப்பு சூர்ணாபிஷேகம் (மஞ்சள் பொடி)	ரூ. 100/-
4.	சிறப்பு குஸும நாளிகேராபிஷேகம் (இளநீருடன் குங்குமப்பூ கலந்து)	ரூ. 100/-
5.	சிறப்பு அபிஷேகம்	ரூ. 200/-
6.	ஸ்வாமி, அம்பாள் லட்சார்ச்சனை	ரூ. 200/-
7.	வஸ்த்ரதானம் (ஒரு ரித்விக்கிற்கு)-20	ரூ. 400/-
8.	அன்னதானம் (ஒருவேளை)	ரூ. 500/-
9.	புஷ்ப கைங்கர்யம் (ஒருவேளை)	ரூ. 500/-
10.	தம்பதி பூஜை (ஒரு தம்பதிக்கு)	ரூ.1000/-
11.	ஸ்ரீருத்ர ஜப, ஹோம ஸங்கல்பம்	ரூ.1000/-
12.	ஸ்வாமி, அம்பாளுக்கு வேஷ்டி, புடவை (9x5-9 கஜம்)	ரூ.1000/-
13.	ஸந்தர்ப்பணை (ஒருநாள்)	ரூ.2500/-
14.	திருக்கல்யாண உற்சவம்	ரூ.2500/-

மார்ச் 16, 17, 18 ஆகிய மூன்று நாட்களிலும் மாலை 6.00 மணிக்கு மேல் சிறப்பு சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

குறிப்பு: நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றிற்கான கட்டணத்தை "ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா"விற்கு மணியார்டர் அல்லது வரைவுக் காசோலை (D.D) அல்லது பொருளாகவோ அனுப்பலாம். அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பவும்.

G. குஞ்சிதபாதம், FCA.,
டபீர் மேலத்தெரு, கும்பகோணம்-612 001
போன்: 0435 2420047

V.L. நாராயண சாஸ்திரிகள்,
25/1 கப்பாரெட்டித் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
போன்: 044-24897125

G. கண்ணன், D/127-A, ராஜமன்னார் சாலை,
கே.கே.நகர், சென்னை -78.
போன்: 044-24836495

R. வைத்தியநாதன், மேலாளர்,
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4, கதவு எண் 12, 29வது தெரு,
தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361

குடந்தை - பூந்தோட்டம் நெடுஞ்சாலையில் குடந்தையிலிருந்து 21 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அருள்மிகு ஸற்குணேஸ்வரர் ஆலயம்.

அருள்வாக்கு

நல்லதும் கெட்டதும்...

நாம் வாழுகிற இந்த லோகத்துக்கு 'மிச்ரலோகம்' என்று பெயர். அப்படியென்றால் 'கலப்பு உலகம்'. என்ன கலப்பு என்றால் நல்லதும் கெட்டதும் கலந்து இருப்பதுதான். தேவ லோகத்தில் எல்லாம் நல்லதே. அஸுர லோகத்தில் எல்லாம் கெட்டதே. மனுஷ்யர்களான நம்முடைய இந்த லோகத்திலோ இரண்டும் கலந்து மிச்ரமாயிருக்கும். அப்படித்தான் ஈச்வர நியதி. பூர்வ யுகங்களிலுங்கூட நல்லதோடு கெட்டதும் இருந்தாலும் க்ருத, த்ரேதா, த்வாபர யுகங்களில் முறையே, நல்லதே ரொம்ப ஜாஸ்தி, 'ரொம்ப' என்று சொல்ல முடியாவிட்டாலும் ஜாஸ்தி, ஜாஸ்தி என்று சொல்ல முடியாவிட்டாலும் ஸமம் என்று மூன்று விதமாக இருந்திருக்கிறது. கலியில் நிலைமை மாறி, கெட்டது ஜாஸ்தியாயிருக்கும் என்றும் சாஸ்த்ரங்கள் சொல்கின்றன. அப்படிச் சொன்னதால் இங்கே முழுக்கக் கெடுதலே வியாபித்து, நல்லது எடுபட்டே போய்விடும் என்று அர்த்தமில்லை. ஏனென்றால் அப்போது 'கலப்பு லோகம்' என்ற இதன் பேரே பொய்யாகி, இது அஸுர லோகமாக அல்லவா ஆகிவிடும்? அதோடு கூட, கலியின் கொடுமைக்கும் அதே சாஸ்திரங்களில் பரிஹாரம் - நிவாரணம் சொல்லியிருப்பதால், இங்கே இந்த யுகத்திலும் நல்லதற்குப் பாதியளவு இடமில்லாவிட்டாலும், நாற்பது சதவிகிதமாவது இடமுண்டு என்று காட்டுவதாகவே ஏற்படுகிறது. தற்காலத்தில் ஆகியிருப்பதுபோல் அந்த அளவுக்கும் கீழே நல்லது போய்விடுவதற்கு நாம் இடம் தரப்படாது. லோகம் பூராவும் இப்போது காணப்படுகிற மாதிரி கெட்டதிலேயே மேலும் மேலும் போய் விழுந்து மீட்சியே இல்லாமலாகிவிடக் கூடாது. அதற்கு நல்லதை விருத்தி செய்து, கெட்டதைக் குறைக்க வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



கலகல மைக் டெஸ்டிங்

இது தேர்தல் நேரம். இனி எங்கெங்கு காணினும் கூட்டங்கள்தான். கூட்டத்தைக் கவர பேச்சாளர்கள் பிரயத்தனப்படுவது பெரும்பாடு. பார்வையாளர்களைச் சுண்டி இழுக்கும் வண்ணம் அவர்கள் பேசுவதற்கு, இதோ நம்மால் முடிந்த சில டிப்ஸ்...

டிப்ஸ் 1: டீ கொண்டு வரும் ஆட்களைத் தவிர மேடையில் இருக்கும் அனைவருக்கும் தனித்தனியே முழும் நீளத்திற்கு மைக் வழங்கப்பட வேண்டும். ரொம்ப சுருக்கமாக இரண்டு அல்லது மூன்று மணி



நேரத்திற்குள்ளாக பேச்சை முடித்துக் கொள்ளும் ஆட்களை மேடைப் பக்கம் சேர்க்கக் கூடாது. நீட்டி முழக்கி விஸ்தீரணமாகப் பேச வேண்டும். உதாரணத்துக்கு, 'எனக்கு இவரைக் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தெரியும்' என்று மட்டும் சொல்லி பாராட்டுரையை நிறுத்திக்கொள்ளக் கூடாது. முடிந்தால் முப்பது வருட வரலாற்றைச் சுருக்கமாக ஆறு மணி நேரத்துக்குச் சொல்ல வேண்டும். தெரியாதவர்கள் 'தவமாய் தவமிருந்து' பார்க்கலாம்!



டிப்ஸ் 2: நடுநிசி ஆனாலும் சரி, கோட்டான் கூவினாலும் சரி... சொல்ல வந்த கருத்துகளைச் சொல்லாமல் மேடையை விட்டு கால் இன்ச்கூட நகரக்கூடாது. பேசுவதற்கு உருப்படியாக எந்தச் சங்கதியும் இல்லையே என்று அப்பாவித்தனமாகக் கேட்கக்கூடாது. ஆத்திச்சூடி, டைம்டேபிள்ஸ், ஹம்டி-டம்டி என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயங்களைக் கூட 'உலகத் தொலைக்காட்சிகளில் முதன் முறையாக' விவரிக்கலாம்.

டிப்ஸ் 3: மேடை நாயகருக்கு (அல்லது நாயகர்களுக்கு) சால்வை அணிவிக்கும் இலாகா தனியொரு நபரிடம் ஒப்படைக்கப்படுகிறது. இது தவறு. இந்த 'பெரும் இலாகாவை' சிறுசிறு இலாகாக்களாக வகுத்து ஆளுக்கொன்றாக சண்டை போடாமல் பிரித்துக் கொடுக்க வேண்டும்.



எடுத்துக்காட்டுக்கு சால்வையை மேடையிலேயே இஸ்திரி போடுவதற்காக ஒரு நபரை நியமிக்கலாம். இவர் இஸ்திரியாளர். மற்றொருவர் சால்வை சூடாகும் பொழுதெல்லாம் தண்ணீர் தெளிப்பார். இவர் தெளிப்பாளர். பிறகு இஸ்திரியை ஒருவர் தடவிப் பார்த்து சுருக்கங்கள் போய் விட்டதா என்று ஆராய்வார். இவர் சுருக்

காய்வானர். இஸ்திரி செய்யப்பட்ட சால்வையை தூசு தும்பு, பூச்சி, பொட்டு இல்லாமல் ஒருவர் உதறுவார். இவர் உதறலாளர். பிறகு மற்றொருவர் சால்வையைப் போர்த்துவார். இவர் போர்த்தலாளர். இப்படி தினுசு தினுசாக நிறைய பேரை மேடையில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.



டிப்ஸ் 4: பேப்பரில் டைப் அடித்துக் கொண்டு அதைப் பார்த்துப் பார்த்து பேசுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். முடிந்தால் பைண்டிங் செய்த பெரிய சைஸ் புத்தகங்களைக் கையோடு வாரிச் சென்று அப்படி இப்படி புரட்டி, அதிலிருந்து கொஞ்சம், இதிலிருந்து கொஞ்சம் என்று பிய்த்துப் பிய்த்து பேச வேண்டும். அவசரத்துக்கு புத்தகம் கிடைக்கவில்லையென்றால் டெலிபோன் டைரக்டரி, 1978ஆம் ஆண்டு ஐந்தாண்டு திட்ட அறிக்கை, சட்ட மசோதா, கால்நடை பராமரிப்பு களஞ்சியம் என்று எதையாவது ஒன்றைப் பிரித்து கடகடவென்று மூச்சுவிடாமல் படிக்கலாம்.



1...2...3...

டிப்ஸ் 5: பேசினால் மட்டும் போதாது. உணர்ச்சிப் பிழம்பாக மாறிவிட வேண்டும். இருபது நிமிடங்களுக்கு ஒருமுறை ஏதாவது ஒரு வித்தை காட்ட வேண்டும். முடிந்தால் அந்நியன் மாதிரி குரலை மாற்றி மாற்றிப் பேசலாம். முடியைச் சிலுப்பி விட்டுக் கொள்ளலாம். திடீரென்று கேவிக் கேவி அழலாம். புரண்டு புரண்டு சிரிக்கலாம். பாசத்துடன் மைக்கை கட்டிப்பிடிக்கலாம். டார்ஜான் மாதிரி மார்பைத் தட்டிக் கொண்டு கத்தலாம்.

டிப்ஸ் 6: பேச்சை முடித்துக் கொள்வதற்கு முன்பு மறக்காமல் யாருக்காவது ஏதாவதொரு பட்டம் வழங்கிவிட வேண்டும். ஷேக்ஸ்பியர், பாரதிதாசன், நெப்போலியன், ஐன்ஸ்டீன் என்று யாருக்கு வேண்டுமானாலும் எந்தப் பட்டத்தை வேண்டுமானாலும் தயங்காமல் அளிக்கலாம். 'சிறப்பாகப் பல நாடகங்களை எழுதிய பாசமிகு அண்ணன் ஷேக்ஸ்பியருக்கு டாக்டர் பட்டம் அளிக்கிறேன்' என்றோ 'பல முன்னணி கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய அருமைத் தம்பி ஐன்ஸ்டீனுக்கு வித்தக விஞ்ஞானி எனும் பட்டத்தை வழங்குகிறேன்' என்றோ அறிவிக்கலாம். டாக்டரேட் தருவதோடு நிறுத்திக் கொள்ளாமல், எம்.பி.ஏ, எம்.ஃபில், ஐ.சி.டபிள்யூ.ஏ. போன்றவற்றையும் அவரவர் திறமைக்கேற்ப வழங்கலாம். பெரிதாக ஒன்றும் சாதிக்கவில்லையென்றால் நைன்த் ஸ்டாண்டர்ட், ப்ளஸ்டு என்று நிறுத்திக் கொள்ளலாம்.

- மருதன்



மறுமலர்ச்சி!

அந்தத் துயரமான சம்பவம் நடந்து ஆறேழு மாதங்களுக்கு மேலாகிவிட்டது.... பாசத்தையும் நேசத்தையும் ஊட்டி வளர்த்த ஒரு ஜீவனின் அகால மரணம் அவ்வளவு எளிதில் மறந்துவிடக் கூடியதா என்ன...?

என் சிநேகிதன் ரங்கநாதனின் ஒரே மகள் கல்யாணி... ஆசையுடன் வளர்த்த தனது செல்ல மகளுக்குக் காலா காலத்தில், நாள் நட்சத்திரம் பார்த்துத்தான் கல்யாணமும் பண்ணி வைத்தான். வாயும் வயிறுமாகப் பிரசவத்துக்கு வந்தவளை வாரிப் போடும்படியாகிவிட்டது! எதிர்பாராத விபத்தில் கல்யாணி இறந்து போனாள்!

குழந்தையாக, ஒரு குழந்தையை வயிற்றில் சுமக்கும் தாயாக... இப்படி கல்யாணியைப் பல நிலைகளில் பார்த்துப் பாசம் காட்டியவன் நான். அவளது அகால மரணம், என் மனத்தில் ஒரு பெரிய ரணத்தையே ஏற்படுத்திவிட்டது!



எனக்கு இந்த தெய்வம்... தேவாதிகள் மீது துளியும் நம்பிக்கை கிடையாது... இருந்தாலும் எனது நண்பனின் நிலைமையை நினைத்தபோது, அவன் நம்பிக்கையோடு வழிபட்ட அந்த தெய்வத்தின் மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது...!

பாவம் ரங்கநாதன்... அப்பாவி... யாருக்கும் எந்தக் கெடுதலும் நினைக்கத் தெரியாதவன். சுந்தர வரதப்பெருமாள் கோயில் அர்ச்சகன்... நித்ய பூஜை நின்று விடக் கூடாது என்பதற்காக, வெளியூர் என்று அவன் எங்கும் சென்றது கிடையாது... காரணம் கேட்டால் பெருமாளைப் பட்டினி போடக் கூடாது என்பான்... அப்படிப்பட்ட அப்பாவி பக்தனுக்கா இப்படியொரு வேதனை...?

மகளைப் பறிகொடுத்த வேதனையில் அவன் வீட்டில் வெறுமனே முடங்கிக் கிடப்பான்... கோயிலுக்கும் போயிருக்க மாட்டான்... ஆறுதலாக நாலு வார்த்தை பேசிவிட்டு, தேவைப்பட்டால் அவனை வெளியே எங்கேயாவது அழைத்துச் செல்லலாம்... அவனுக்கு மாற்றம் நிச்சயம் தேவை என்று நினைத்து, அவனைப் பார்க்க அவனது ஊருக்குச் சென்றேன்.

நான் அவன் வீட்டுக்குள் சென்ற சமயம், அவனது மனைவி மட்டுமே இருந்தாள். என்னைப் பார்த்ததும் கண் கலங்க ஆரம்பித்தாள். நான் ஆறுதல் சொன்னேன். கூடவே ரங்கநாதனைப் பற்றிக் கேட்டேன். அதற்கு, அவன் மனைவி சொன்ன பதில் எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது!

"என்ன சொல்றீங்க...?" என்றேன் நம்ப முடியாமல்...

"ஆமாம்... அவர் கோயிலுக்குத்தான்



போயிருக்கார். வர்ற நேரம் தான்...'' என்றான் மீண்டும்.

'ச்சே... என்ன மனுஷன் இவன்...? அந்தக் கல்லைப் பார்த்துப் பார்த்து இவன் மனசும் கல்லாகி விட்டதா..?' அவன் கோயிலிலிருந்து திரும்பி வரும்வரை காத்திருக்கும் பொறுமை எனக்கில்லை. அதனால் கோயிலுக்கே சென்று, நேருக்கு நேர், அவனைப் பார்த்து நாலு வார்த்தை ஆத்திரம் தீர கேட்க வேண்டும் என்ற வெறி எனக்குள் ஏற்பட்டது...! ஆறுதல் சொல்ல வந்த நான், ஆத்திரத்துடன் கோயிலை நோக்கி விரைந்தேன்.

உச்சி வேளையாகிவிட்டதால் கோயிலில் யாரும் இல்லை... ரங்கனாதனும் வீட்டுக்குப் புறப்படும் சமயம்...நான் கருவறையருகே அவன் முன்னால் போய் நின்றேன்...!

''வாடா மாதவா... ஆச்சரியமாயிருக்கே... நீ கோயிலுக்கு வந்திருக்கே..!'' என்றான்.

''எனக்கும் இது ஆச்சரியம்தான்... உன்னை இங்கே இப்படிப் பார்ப்பது... எப்படி உன்னால இவ்வளவு சீக்கிரம் மாறிட முடிஞ்சுது... எவ்வளவு பெரிய இழப்பு அது.. இப்ப நெனைச்சாலும் துக்கம் தொண்டையை அடைக்குது... இதை இவ்வளவு சீக்கிரம் மறந்துட்டு எப்படி இங்கே வந்து காரியம் பார்க்கறே? இன்னும் நீ மாறாமல் இந்த தெய்வத்தை எப்படி நம்பறே..?''

ஒருகணம் அமைதியாக என்னையே பார்த்த ரங்கனாதன், பேச ஆரம்பித்தான்.

''எனக்கேற்பட்ட சோகம் உனக்கு நன்னாத் தெரியும்... அதை யார்கிட்டே யாவது தினம் தினம் சொல்லி அழணும் எனக்கு... யார்கிட்டே சொல்வேன்...? முதல்நாள் என் துக்கத்தைக் கேட்டவர்கள், பொறுமையாக என்னுடன் சேர்ந்து அவர்களும் துக்கப்படுவார்கள்... மறுநாள் எனக்கு ஆறுதல் சொல்வார்கள்... அடுத்தநாள் என் வாய் திறப்பதற்கு முன்பே, பேச்சை மாற்ற முயற்சிப்பார்கள். அதற்கும் அடுத்த நாள்..? என் சோகம் அவர்களுக்குச் சலிப்பைத்தான் தரும். என்னைப் பார்ப்பதை தவிர்க்க விரும்புவார்கள். ஆனா... நான் இந்த மூணு நாலு மாசமா, தினமும் ஒரு மணி நேரமாவது, என் துக்கத்தை இந்த தெய்வத்திடம் சொல்லி அழறேன்... அதோ அவன் முகத்தைப் பார்... அந்த முகத்தில் துளியாவது அலுப்பு சலிப்பு தெரிகிறதா பார்... இன்னும் இதேபோல எத்தனை நாளுக்கு என் துக்கத்தைச் சொல்லி அழுதாலும், சலிப்புக் காட்டாமல் கேட்பான். அவன் முகம்தான் எனது நம்பிக்கை... என் வேதனைக்கான வடிகால்...'' என்றான்.

நான் ரங்கனாதனையும், அவனது அந்த பெருமாளையும் மாறி மாறிப் பார்த்தேன்.

இவன் முகத்தில் சோகம்...! அவன் முகத்தில் என்றென்றும் மாறாத மந்தகாசப் புன்னகை...!

அந்த மலர்ச்சி, என் நண்பன் முகத்திலும் ஏற்படும் என்பதுதான் அந்த புன்னகைக்கான அர்த்தமோ..? நம்ப முடியாமல் நம்பினேன்...!

அனல் பறக்கும் ஆலந்தூர்!

ஆலந்தூர், சென்னை மாநகரை முத்தமிட்டபடி இருக்கும் புறநகர் சட்டமன்ற தொகுதி. இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய தொகுதியான இந்தத் தொகுதிக்குள் ஆலந்தூர், பல்லாவரம் நகராட்சிகள், மூவரசன்பேட்டை, திரிசூலம், மீனம்பாக்கம், நந்தம்பாக்கம் பஞ்சாயத்துகள், கத்திப்பாரா அருகே உள்ள கன்டோன்மென்ட் பகுதி மற்றும் சென்னை மாநகராட்சியின் 129, 130, 131 வார்டுகள் ஆகியன அடங்குகின்றன. வெள்ள நிவாரணம் வாங்குவதில் ஏற்பட்ட நெரிசலால் 42 பேரை பலிவாங்கிய எம்.ஜி.ஆர்.நகர், இந்த ஆலந்தூர் சட்டமன்ற தொகுதியில்தான் வருகிறது.



தொகுதி எப்படி?

ஏறக்குறைய ஐந்து லட்சம் வாக்காளர்களைக் கொண்ட இந்தத் தொகுதியில் பிராமணர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் கணிசமான அளவில் இருக்கின்றனர். ஊரகத் தொழில்துறை அமைச்சர் வளர்மதி வசம் இருக்கும் இந்தத் தொகுதியில் நடந்த கடைசி ஐந்து சட்டமன்ற தேர்தல்களில் மூன்று முறை தி.மு.கவும், இரண்டு முறை அ.தி.மு.கவும் வெற்றி பெற்றுள்ளன. 1991-ல் அ.தி.மு.க. வென்றபோது ராஜீவ் அனுதாப அலை வீசியதையும், 2001-ல் வென்றபோது தி.மு.க. ஆதரவு சுயேட்சை வேட்பாளராக ஆர்.எம். வீரப்பன் (எம்.ஜி.ஆர். கழகம்) டீவி சின்னத்தில் போட்டியிட்டதையும் நினைவு கூர்கின்றனர் உடன்பிறப்புகள்.



• சண்முகம்



• ராஜேந்திரன்

செல்வாக்கு அதிகரிப்பு!

அமைச்சர் தொகுதி என்பதால் அ.தி.மு.கவின் மாவட்டச் செயலாளர் சிட்லபாக்கம் ராஜேந்திரனிடம் பேசினோம்.

"பொதுவா இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை எல்லாத் தொகுதியிலும் அம்மா ஆட்சியில் பணிகள் நன்றாகவே நடந்துள்ளன. குறிப்பாக அமைச்சர் வளர்மதி தொகுதியில் அவருடைய உழைப்பால் பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, மக்கள் மத்தியில் அ.தி.மு.கவின் செல்வாக்கு அதிகப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பல்லாவரம் பாதாள சாக்கடைத் திட்டம், எம்.ஐ.டி மேம்பாலம், பல்லாவரம் பேருந்து நிலையம், ஆலந்தூர் மின் தகன மேடை, ஆலந்தூர் சாலைப் பணிகள் ஆகியன நிறைவேறியுள்ளன. ஆகவே எத்தனை கட்சி கூட்டணி வந்தாலும் அம்மாவின் துணையோடு ஆலந்தூரில் அ.தி.மு.க ஜெயிக்கும்."

குற்றப்பத்திரிகை!

"பாதாள சாக்கடைத் திட்டம் நகராட்சி சார்பாக நாங்கள் கொண்டு வந்தது. ஆனால் அதைத் தடுத்து நிறுத்தித் தாமதப்படுத்தியவர் அமைச்சர் வளர்மதி. அதேபோல தில்லை கங்கா நகர் சுரங்கப்பாதை, பரங்கி

மலை சுரங்கப்பாதை ஆகியன எங்களின் முயற்சியால் வந்தவை. இவர் சமூக நலத் துறை அமைச்சராக இருந்தபோது ஒரு கான்க்ரீட் சத்துணவுக் கூடத்தைக் கூட இந்தத் தொகுதியில் கொண்டுவர வில்லை. இப்போது ஊரகத் தொழில் துறை அமைச்சரான பிறகும் கூட ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவர வில்லை'' என்று குற்றப்பத்திரிகை வாசிக்கிறார் ஆலந்தூர் நகராட்சித் தலைவரான தி.மு.கவைச் சேர்ந்த

• எம்.ஐ.டி.பாலம்...



ஆர்.எஸ்.பாரதி.

ஒண்ணுமே நடக்கல!

தொகுதியின் காங்கிரஸ் பிரமுகர் சத்திப் பாரா ஜெனார்த்தனத்திடம் பேசியபோது, ''பாலாறு தண்ணீர் நிறுத்தப்பட்டது, பாதாள சாக்கடைத் திட்டம் தோல்விய டைந்தது, எம்.ஜி.ஆர் நகர் சம்பவம் ஆகிய வற்றால் தொகுதி மக்கள் கடுமையான அதி ருப்தியில் உள்ளனர். அசோஸியேஷன் சார்பாக பெரிய மனிதர்கள், படித்தவர்கள் வந்து சொன்னால் காரியம் நடக்கிறதே



• ஆர்.எஸ். பாரதி



• பா. வளர்மதி

தவிர, சாதாரண குடிசை வாழ் மக்களுக்கு எதுவும் நடப்பதில்லை'' என்றார் கோபமாக.

நல்ல அமைச்சர்!

''குடிநீர் மற்றும் சாலை விஷயத்தில் மிகவும் ஆர்வமாகச் செயல்பட்டு தொகுதி மக்களைத் திருப்திபடுத்தியுள்ளார். குறிப் பாக இருபது வருடங்களுக்கு மேல் இழுத் துக்கொண்டே இருந்த வீட்டு மனைப் பட்டா பிரச்னை தீர அமைச்சர் கடுமை யான முயற்சிகளை எடுத்து, பட்டா கிடைக்க ஏற்பாடு செய்துள்ளார்'' என்கிறார் தொகுதிவாசியான பிரேமா என்கிற குடும் பத் தலைவி.

வயித்துவலிக்கு சிவப்பு மருந்து!

''எம்.ஜி.ஆர். நகர் மரண சம்பவத்துக்குக் காரணம் அரசின் தவறான அணுகுமுறை தான் என்பது மக்களுக்கு நன்றாகவே புரிந் துள்ளது. 'வயித்து வலி இருந்தாலும் இல் லைன்னாலும் சிவப்பு கலர் மருந்து சாப்பிடுங்க' என்ற ரீதியில் பாதிப்பு இருந் தாலும், இல்லாவிட்டாலும் நிவாரணத் தொகை உண்டு என்ற அரசின் முடிவுதான் இதற்குக் காரணம். இது தொடர்பாக மக்கள் மத்தியில் மௌனப்புரட்சி நடந்து கொண்டி ருக்கிறது. அதன் விளைவாக ஆலந்தூரில் சூரியன் உதிப்பது உறுதி''- இப்படிச் சொல் கிறார் தொகுதியின் முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏவான கன்டோன்மென்ட் சண் முகம்.

மறந்து போச்சு!

''42 பேர் செத்துப் போனதை நினைக்க

• ஜெனார்த்தனம்



• பாஸ்கர்





• மேரி



• பிரேமா

மக்கள் வருத்தப்படாம இருக்க, அம்மா நிவாரணத் தொகை கொடுத்துட்டாங்க. அதனால மக்கள் அந்தச் சோகத்தை மறந்துட்டாங்க. அதனால இங்க இரட்டை இலைதான் ஜெயிக்கும்" என்கிறார் ஏரியா கவுன்சிலரான பாஸ்கர்.


'வெயிட்' வேட்பாளர்!

"தி.மு.க. சார்பா நல்ல வெயிட்டான வேட்பாளரைப் போடலைன்னா திரும்பவும் வளர்மதியே தொகுதியைத் தட்டிக்கிட்டுப் போயிடுவாங்கன்னு தோணுது"- இது தொகுதிவாசியான பகவதிராஜின் கருத்து.

ரெண்டு அம்மாவுமே நல்லவங்க!

"எங்களுக்கு யாரு நல்லது செய்றாங்களோ அவங்களுக்குத்தான் வோட்டுப் போடுவோம். இந்தத் தடவை அம்மாவும் சரி... வளர்மதி அம்மாவும் சரி... நிறைய நல்லது செய்திருக்காங்க. ஏன்னா ரெண்டு பேருமே நல்லவங்க. அதனால அவங்களுக்குத்தான் வோட்டுப் போடுவோம்" என்றார் மேரி என்கிற குடும்பத்தலைவி.

• பகவதிராஜ்



பந்தயக் குதிரைகள்!

இந்தமுறை அ.தி.மு.க. சார்பாக வளர்மதியே நிற்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டதால், அவர் தவிர மற்ற அ.தி.மு.க.வினர் சிலர் ஜெயலலிதா பெயரில் பணம் கட்டியுள்ளனர். தி.மு.க. சார்பாக கன்டோன்மெண்ட் சண்முகம், ஆர்.எஸ். பாரதி ஆகியோரும், காங்கிரஸ் சார்பாக கத்திப்பாரா ஜனார்த்தனமும் களமிறங்கத் தயாராக உள்ளனர். தி.மு.க. அணியில் கூட்டணிக் கட்சி எதற்காவது இந்தத் தொகுதி ஒதுக்கப்பட்டால் தோல்வி உறுதி.

வெற்றி வாய்ப்பு!

தேர்தல் அனல் பறக்கும் ஆலந்தூரில் கடந்த காலங்களில் தி.மு.க. வென்றபோதெல்லாம் ஆட்சிக் கட்டிலில் தி.மு.க.வும், அ.தி.மு.க வென்றபோதெல்லாம் அ.தி.மு.கவும் ஆட்சியில் அமர்ந்துள்ளன. ஆகவே 'சென்டிமெண்ட்' தொகுதியான இங்கு தற்போதைய நிலவரப்படி இரு கழகங்களுக்கும் இடையே (மட்டுமே) கடுமையான போட்டி இருக்கிறது... கூட்டணிக் கணக்குகள் மாறினால் நிலைமை இங்கும் மாறும்.

- இரா.முத்துக்குமார்

படங்கள் : **ராஜன்**

ஒரு பிஸியான நேரத்தில் தொகுதியில் வைத்து அமைச்சர் வளர்மதியைச் சந்தித்துப் பேசினோம்:

"ஆலந்தூர் தொகுதி ரொம்பப் பெரிய தொகுதி. ஆனாலும் சரியா நேரம் ஒதுக்கி, நேரடியா தொகுதி மக்களைச் சந்தித்து, குறைகளைக் கேட்டு சரிபண்றது என் வழக்கம். அதுமட்டுமில்லாம தொகுதிக்குள்ளேயே என் வீடு இருக்கறதால காலை - மதியம் - மாலைன்னு எப்போ வேணும்னாலும் மக்கள் வந்து என்னைச் சந்திப்பாங்க. என்னோட தொகுதிக்கு அம்மா ஆட்சியில ஏறக்குறைய அறுபது கோடிக்கு மேல நிதி ஒதுக்கி, பல நல்ல பணிகள் செய்யப்பட்டிருக்கு. பாலாறு தண்ணீருக்குப் பதிலா சென்னைக் குடிநீர் இணைப்பைக் கொண்டு வந்தோம். மீனம்பாக்கம் சுரங்கப்பாதை பணி முடியாம இருக்கறதுக்கு மத்திய அரசுதான் காரணமே தவிர, நாங்க இல்ல. நீங்க என்கூட வந்தா, எம்.ஐ.டி மேம்பாலத்தைக் காட்டுவேன். அம்மா ஆட்சியில இந்தத் தொகுதிக்குள்ள வந்திருக்கும் இந்தப் பாலம் மூலமா தொகுதிக்கு எவ்வளவோ நல்லது, தொலைநோக்குப் பார்வையோட நடந்திருக்குன்னு தெரியும். அடுத்து வீட்டு மனைப்பட்டா... கிட்டத்தட்ட இருபது வருஷமா கிடைக்காம தள்ளிப் போயிட்டே இருந்தது. அது அம்மா ஆட்சியிலதான் ஆலந்தூர் தொகுதி மக்களுக்குக் கிடைக்க ஆரம்பிச்சிருக்கு... இன்னும் நிறைய பணிகள் தொகுதிக்கு வரப்போகிறது" என்றார் அமைச்சர் வளர்மதி.

எட்டாம் பாகம் 8

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

வித்யா கர்வம் கூடாது என்பதை மனு ஸ்ம்ருதி வெகு அழுத்தமாகச் சொல்கிறது.

குருவை – தனக்கு வித்யை கற்றுக் கொடுத்த ஆசார்யனை – அது, இது என்று ஏக வசனத்திலே பேசுகிறவன்; குருவிடம் எல்லாவற்றையும் கற்றுக்கொண்ட பிற்பாடு, 'அவர் எனக்கு என்ன கற்றுக் கொடுத்தார்? எங்கள் வம்சமே பண்டித வம்சமாக்கும்; அதனால் பலது தெரிந்து கொண்டேன்' என்று அவரை மட்டமாகச் சொல்கிறவன் ஒருத்தன் இருக்கிறான்.

இன்னொருத்தனோ, 'ஆஹா அவர் பெரிய கனபாடியோ! அவருக்கு என்ன தெரியும்?' என்று ஒரு பண்டிதரைப் பரீக்ஷை பண்ண ஆரம்பிக்கிறான்.

– இப்படிப்பட்டவர்களெல்லாம் அடுத்த ஜன்மாவிலே ஸ்மசானத்திலே பட்டமரமாகத் தோன்றுவார்களாம்.

காக்கை, காடை போன்ற பிணங்கொத்திப் பறவைகளெல்லாம் அந்தப் பட்ட மரத்திலே உட்கார்ந்து கொண்டு மூக்கைத் தீட்டும் என்கிறது மனு ஸ்ம்ருதி.

இதைக் கேட்டுக்கொண்டே இருந்த ஒருத்தர்,

"இது என்ன சிக்ஷை (தண்டனை) மனு ஸ்ம்ருதியிலே சொல்லியிருக்கிற தண்டனை? மனுஷனாக ஆறறிவு படைத்து, இவ்வளவு சக்தி - சாமர்த்தியங்கள் இருக்கிறபோதே அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. மரமாகப் போன பிற்பாடு அவன் கோயிலில் இருந்தால் என்ன? ஸ்மசானத்திலே இருந்தால் என்ன? அவன் மீது கருடன் உட்கார்ந்தால் என்ன? பிணங்கொத்தி உட்கார்ந்திருந்தால் என்ன?" என்று கேட்டான்!

"அதுதான் இல்லை!" என்று அவனுடைய ஆசார்யர் அவனுக்கு விளக்கினார். "மரமாக இருந்தாலும் மரத்துக்குள்ளே அந்த ஆத்மா இருந்து அவஸ்தைபடுகிறது. எதைக் கூடாது என்று சாஸ்திரம் சொல்கிறதோ, அதைத் தவிர்ப்பதே உத்தமம்" என்றார்.


இதே மனு ஸ்ம்ருதியிலே, காலை வெயிலில் அதிக நேரம் நிற்கவேண்டாம் என்று சொல்லியிருக்கிறது. அது கெடுதல். அந்த சூர்ய ஒளி விகாரங்களை ஏற்படுத்தும். அதனால் அதிக நேரம் பிராத: கால வெயிலில் நிற்கலாகாது.

அதே மாதிரி, ஸ்மசானத்திலிருந்து வருகிற காற்றைச் சுவாசிக்கலாகாது.

'உடைந்துபோன ஆசனத்தில் உட்கார்ந்து ஜபம் பண்ணாதே' என்கிறது சாஸ்திரம்.

சின்னதாக இருந்தாலும், பூஜைக்கு அமரும் பலகை ஒரே மரத்தில் செய்ததாக இருக்க வேண்டும். இரு பலகைகளை இணைத்துச் செய்தால் நடுவிலே ஒரு கோடு இருக்கும். அந்த மாதிரி ஆசனத்தில் உட்கார்ந்துவிட்டு, "எனக்கு மந்திரம் சித்திக்கமாட்டேனென்கிறது உட்கார்ந்தால் ஏதோ யோசனையெல்லாம் வருகிறது; யாரோ ஒருத்தர் வந்துவிடுகிறார். ஜபம் பண்ணவே முடியவில்லை..." என்று சொல்லிப் பயனில்லை.

இப்படியெல்லாம் யாராவது சொன்னால், அவர் உட்கார்ந்திருக்கிற ஆசனத்தை எடுத்துப் பார்க்க வேண்டும். அவர் போட்டுக் கொண்டிருக்கிற ஆசனம் சரியாக இருக்கிறதா? அதன்



மேலே இவர் எப்படி உட்கார்ந்திருக்கிறார் என்று எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். இதெல்லாம் ரொம்ப முக்கியம். இவையெல்லாம் சரியாக இருந்தால் தான் மந்திரமானது நல்ல முறையிலே ஓடும். இல்லையென்றால் பல தடங்கல்கள் ஏற்படும்.

உடைந்துபோன மணையிலே உட்காரக் கூடாது என்று மனு ஸ்ம்ருதியிலே அழகாகச் சொல்லியிருக்கிறது.

அதே மாதிரி, ஸ்மசானப் புகையை சுவாசிக்கவே கூடாது என்றும் சொல்கிறது. ஆனால், குருவை நிந்தனை செய்பவனோ ஸ்மசானத்திலே பட்டமரமாகத் தோன்றி, எந்தப் புகையை சுவாசிக்கவே கூடாதோ அதை சுவாசித்துக்கொண்டே நிற்கக்கூடிய நிலை ஏற்படுகிறது.

மனிதப் பிறவியிலே கை தட்டி ஒருத்தரைக் கூப்பிடணுமானால் கை இருக்கிறது. கூப்பிட வாக்கு இருக்கிறது. ஆனால், ஸ்மசானத்திலே மரமாகப் போன பிற்பாடு கை தட்ட முடியாது. இன்னொருத்தரைக் கூப்பிட முடியாது. அவஸ்தையை அனுபவித்துக் கொண்டேயிருக்க வேண்டியதுதான்.

இப்படியெல்லாம் சாஸ்திரத்திலே சொல்லப்பட்டிருந்தாலும் ஆக்கி ஆழ்வானுக்கு வினாச காலே விபரீத புத்தி ஏற்பட்டது. எல்லாரையும் வீணே வாதுக்கு அழைத்தான்.

அவருடைய குரு ஒரு குருகுலத்திலே வாஸம் பண்ணிக் கொண்டிருந்தார். ராஜா பல்லக்கை அனுப்பி ஊரிலிருக்கும்

ஆசார்யர்களையெல்லாம் வாதுக்கு அழைத்தான். சேவகர்களெல்லாம் இந்த குருகுலத்துக்கு வந்து, "பெரிய சபை நடக்கிறது; ஆக்கி ஆழ்வான் என்கிற வித்வானோடு வாக்குவாதம் பண்ண வேண்டும்" என்று அழைக்கிறார்கள்: "ராஜா அழைத்துக்கொண்டு வரச் சொன்னான்" என்று கூறுகிறார்கள்.

அப்போது அந்த குருகுலத்திலே ஆசார்யர் இல்லை. வெளியே போயிருந்தார். அங்கே குருகுலத்தில் ஒரு சின்னப் பையன். "ஆசார்யர் அளவுக்கு எதற்கு? நானே வருகிறேன்" என்றான் சேவகர்களைப் பார்த்து!

அங்கேயிருந்து சேவகர்கள் போய் ராஜாவினிடத்திலே கேட்டார்கள். 'இந்த மாதிரி ஒரு சின்னப் பிள்ளைதான் வரேனென்கிறான். அழைத்துக்கொண்டு வரலாமா?' என்று கேட்டார்கள்.

வயது நிர்ணயம் கிடையாது. யார் வேண்டுமானாலும் வரலாம் என்றவுடனே, அந்தச் சின்னப் பிள்ளை யாமுனேயனை பல்லக்கிலே உட்கார வைத்து அழைத்துப் போகிறார்கள்.

உப்பரிகையிலே ராஜா நின்றுகொண்டிருக்கிறான். ராணியும் நின்றுகொண்டிருக்கிறாள்.

ராணி சொல்கிறாள்: "இந்தக் குழந்தைதான் ஜெயிக்கும்."

ராஜா சொல்கிறான்: "இந்தக் குழந்தை ஜெயிக்கிறதாவது? எப்பேர்ப்பட்ட வித்வான் ஆக்கி ஆழ்வான்? அவரை ஜெயிக்க முடியுமா?"

"இந்தக் குழந்தை ஜெயிக்கவில்லையானால் நான் ராணி என்கிற ஸ்தானத்தை விட்டு விடுகிறேன்" என்றாள் அவள்!

"இந்தக் குழந்தை ஜெயித்ததானால் பாதி ராஜ்யத்தைக் கொடுத்து விடுகிறேன்" என்றான் ராஜா!

அப்போது அந்தக் குழந்தை வீதி வழியே வந்தபடி ஒரு சுலோகம் சொல்கிறது. அந்த சுலோகத்தின் பொருள்:

"நாங்கள் வெறும் கவிகள் அல்ல; புஸ்தகப் புழுக்கள் அல்ல... அனைத்தையும் அப்படியே மனப்பாடம் பண்ணி ஒப்பிப்பதற்கு. நாங்கள் யார்...? எதிர்த்து வரக்கூடிய பிரதிவாதி என்கிற யானையின் மஸ்தகத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு அதன் மஸ்தகத்தைப் பிளக்கக்கூடிய சிம்ஹங்கள் நாங்கள்!"

குழந்தை வித்வான் ஆக்கியாழ்வானோடு வாதிடுவதைக் காண சபை கூட்டப்பட்டது. 'ஜெய விஜயீ பவ!' என்று சிஷ்யர்கள் புடை சூழ்ந்து கோஷமிட, சபையிலே வந்தமர்ந்தார் ஆக்கி ஆழ்வார்.


ராஜாவைப் பார்த்து, "இன்றைக்கு என்னோடு வியாக்யார்த்தம் பண்ணுவதற்கு - தர்க்கம் பேசுவதற்கு - யார் வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

"இவர்தான்!" என்று ஒரு சின்னப் பையனைக் காண்பித்தார் ராஜா.

"இவனென்ன அல்ப முயல்குட்டி! நானோ ஒரு சிம்ஹம். என் எதிரிலே இப்படியொரு அல்ப முயல் குட்டியா? இது என்ன பேசும்?" என்று கர்ஜித்தான் ஆக்கி ஆழ்வான்.

"என்ன பேசும் என்று எனக்குத் தெரியாது. நீங்களே பேசலாமே!" என்றான் ராஜா.

உடனே அந்த வித்வான் அந்தக் குழந்தையைப் பார்த்து, "எந்த சாஸ்திரத்தில்



"என் குடும்பம் கோயில் மாதிரி!"

"கேட்கவே சந்தோஷமாயிருக்கு!"

"நீங்க வேற. எனக்கு தினமும் அர்ச்சனை நடக்கும்!"

- லீலாஜி

பிரவேசம்? என்ன பேசப் போகிறாய் நீ?" என்றார்.

அதற்கு அந்தக் குழந்தை, "எல்லா சாஸ்திரமும் எனக்குத் தெரியும்" என்றது.

"அப்படியானால், நீ சின்னக் குழந்தையானதனாலே உனக்கே முதல் அவகாசம் தந்தேன்" என்றார் ஆக்கி ஆழ்வார். 'என்னை என்ன கேட்கப் போகிறாய்?" என்றார்.

அந்தக் குழந்தை சொன்னான், "நான் என்னவெல்லாம் இருக்கிறது என்று சொல்கிறேனோ, அதையெல்லாம் தேவரீர் 'இல்லை' என்று சொல்ல வேண்டும். எது எதுவெல்லாம் இல்லை என்று நான் சொல்கிறேனோ, அதையெல்லாம் இருக்கிறது என்று தாங்கள் ஸ்தாபனம் பண்ண வேண்டும். நீங்கள் சொல்லுவதை எல்லோரும் சாஸ்திர ரீதியாக ஒப்புக் கொள்ளும்படியாக இருக்க வேண்டும். அவ்வாறு பதில் சொல்ல முடியாது போனால், தோற்றவராவீர்கள்; பதில் சொன்னால் ஜெயித்தவர் ஆவீர்கள்" என்றது குழந்தை.

"கேளு!" என்றார் ஆக்கி ஆழ்வார்.

அவரைப் பார்த்து முதல் கேள்வியே பிரும்மாண்ட கேள்வியாகக் கேட்கிறது குழந்தை.

"உன் அம்மா மலடி அல்ல!" என்கிறது!

இதற்கு என்ன பதில் சொல்ல வேண்டும். அவர்...?

"எங்கம்மா மலடிதான்" என்று சொல்ல வேண்டும். எப்படிச் சொல்வார் அவர்!

"அடுத்த கேள்வி கேட்கட்டுமா?" என்கிறான் குழந்தை. "இதற்குப் பதில் சொல்ல முடியாவிட்டால் அடுத்ததைப் பார்ப்போம்" என்றான்.

அப்படியே நடுநடுங்கிப் போய்விட்டார் ஆக்கி ஆழ்வார். முதல் கேள்வியே பிரும்மாஸ்திரமாக அல்லவா இருக்கிறது. அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. அடுத்த கேள்வி எப்படி இருக்குமோ?

அந்தக் குழந்தை அடுத்தபடியாகக் கேட்கிறது...

(வளரும்)



என்னுடன் படித்த நந்தினிக்கு நிச்சயதார்த்தம். அவளின் அண்ணன் ப்ரசன்னா எனக்கு நெருங்கிய நண்பன். சத்திரத்திற்குள் நுழைந்தேன். மேடையருகே யாரோ ஒரு பெண்மணியிடம் பேசிக்கொண்டிருந்தான். அவனை நோக்கி நடந்தேன். அவனிடம் பேசிக்கொண்டிருந்த பெண்மணியை எங்கேயோ பார்த்தாற் போலிருந்தது. மூளையின் நினைவேடுகளைப் புரட்டியபடியே சென்றேன். அதற்குள் அந்தப் பெண்மணி மாடியேறிப் போய் விட்டார்.

“டேய், ஏண்டா இவ்ளோ லேட்?” என்று என் முதுகில் தட்டினான் ப்ரசன்னா.

“இது லேட்டா? நான்தான் முதல்ல வந்திருக்கேன்னு நெனைக்கறேன்” என்று சொல்லிக் கொண்டே அங்கேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தேன்.

“எங்க உக்காந்துட்ட? எழுந்திரு... உனக்கு ஒரு சின்ன வேலை இருக்கு...” என்று இழுத்துக் கொண்டே மாடிப்படியேறினான்.

ஜெயந்தி சங்கர்

குளிரூட்டப்பட்ட அறைக்குள் நுழைந்தால், அதே பெண்மணி அங்கே உட்கார்ந்திருந்தார். தேங்காய், பூ, பழத்தை பாலிதீன் கவரில் போட்டுக் கொண்டிருந்தார். “ஆன்ட்டி, இது பாஸ்கர். உங்களுக்கு ஹெல்ப் பண்ணுவான். டேய், இது எங்க ஃபேமிலி ஃப்ரெண்ட், அனு ஆன்ட்டி. இண்டஸ்ட்ரியலிஸ்ட்” என்றுவிட்டு ப்ரசன்னா போய் விட்டான். அவர் பெயரைக் கேட்டு மின்னலாய் நினைவுக்கு வந்து, இன்னார் என்று புரிந்த அதிர்ச்சியில் அப்படியே நின்றிருந்தேன்.

எனக்கு ஏழெட்டு வயதிருக்கும் அப்போது. அடிக்கடி அப்பாவுடன் வீட்டுக்கு வருவார். அப்பாவுடன் ஆபீஸில் வேலை பார்ப்பதாகச் சொல்லிக் கொண்டார். “அனு அத்தைடா” என்று சொல்லிக் கொடுத்த அப்பாவே சில மாதங்களில், “விஜய், அனு ஆன்ட்டின்னு சொல்லு” என்று சொல்லிக் கொடுத்தபோது அப்படியே பின்பற்றத் தெரிந்ததே தவிர, என்னால் அதன் பின்னணியில் இருக்கக்கூடிய அர்த்தத்தை உணரவோ, யோசிக்கவோ முடியவில்லை.

அதன்பிறகு, அம்மா, அப்பாவுடன் சண்டை போட்ட நாட்களே அதிகமென்ற நிலை வந்தது. சண்டைக்கான காரணமே ஆரம்பத்தில் எனக்குப் புரியவில்லை. ‘அனு ஆன்ட்டி’ என்ற பெயரைச் சொன்னாலே அம்மா கோபத்தில் பத்ரகாளியானாள்.

கோர்ட், கேஸ், மணவிலக்கு என்று பலவிதமான புது அனுபவங்கள் அம்மாவைத் திக்குமுக்காட வைத்தன. நிரந்தரமில்லாமல் இருந்த தன் கணக்கர் உத்தியோகத்தைக் காட்டித் தன் மகனைத் தன்னிட



அப்பாவின் மனைவி!

மிருந்து பிரித்து கணவனிடம் கொடுத்து விடுவார்களோ என்ற கவலையில் தவித்துத் தவித்து அம்மாவின் இயல்பே மாறிப் போயிருந்தது. யாரிடமும் ஓரே மாதிரியான அவநம்பிக்கை. பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் 'புருஷனை கட்டுக்குள்ள வச்சிருக்கக்கூடத் தெரியாத அசடு' ஆனாள். "இங்க பாருடா, இனிமே உனக்கு அப்பா கெடையாது. அவரு அனுவக் கல்யாணம் கட்டிக்கப் போறாராம்" என்று சொன்னார். அப்பா குடும்பத்தையும் எங்களையும் விட்டுப் போகிறார். அதற்குக் காரணம் 'அனு ஆன்ட்டி' என்று மனத்துக்குள் பதிந்து போனது. அன்றிலிருந்து அடிக்கடி, "விஜய், எல்லாத்தையும் மறந்துட்டு நீ நல்லாப் படி" என்று ஒரு நாளைக்கு ஒரு முறையாவது சொல்லி வந்தாள்.

அதுவரை 'அனு ஆன்ட்டி'யாக இருந்தவர், அன்றிலிருந்து என் வாழ்க்கையில் அப்பா இல்லாமல் ஆக்கியவரானார். அவரிடம் நான் கொண்டிருந்த விகல்பமில்லாத நட்பும் அன்பும் முற்றிலும் வெறுப்பாக உருக்கொண்டது.

இப்படி ஒரு நாள் சந்திக்கக் கூடுமென்று யார் தான் நினைத்திருப்பார்கள்.

"ம்... எப்படியிருக்காரு மிஸ்டர். திவாகர்?" என்று கேட்டே விட்டேன் பொறுக்காமல். ஏராளமான கேள்விகளை முகத்தில் ஏந்தியபடி என்னையே உற்றுப் பார்த்தார். "நீ... நீ விஜயபாஸ்கரா?" என்று கேட்பதற்குள் அவருக்குத் தொண்டை அடைத்து, கண்கள் அகன்று, குளமாகக் கண்ணீர் சேர்ந்து விட்டது. ஆமென்று தலையை மட்டும் ஆட்டினேன். "எங்கல்லாம் தேடினேன். கடைசில நீ இங்கதான் இருந்திருக்க" என்று பெருமூச்சுடன் சொல்லிக் கொண்டார். "உங்கப்பா மூணு வருஷத்துக்கு முன்னாடியே தவறிட்டாரு" என்று சொல்லிக்கொண்டே அமைதியில் ஆழ்ந்துவிட்டார்.

அப்பா உயிரோடு இல்லை என்ற வருத்தம் சின்னதாக என்னுள் கவிந்தது. அம்மா அதை எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறாள் என்று யோசித்தேன். எனக்கு ஏற்பட்ட அந்தச் சிறிதளவு வருத்தம்கூட அவளுக்கு ஏற்படுமா என்ற சந்தேகம் எழுந்தது.

"விஜய், உங்கம்மாவ விட்டுட்டு திவாகர் என்னைய கல்யாணம் பண்ணிக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சியா இருந்தேன் தெரியுமா?

உங்கம்மாவ நெனச்சு வருந்தியிருக்கேன். ஆனா, உங்கப்பாவோட பழகினதுல அவர் மேல எனக்கு ஏற்பட்ட ஈர்ப்புல அப்போ அந்த வருத்தம் பெருசா தெரியல. அன்னிக்கி என்னோட வந்தவர், பிற்காலத்துல வேற ஒருத்தியோட போயிடுவாருன்னு நெனச்சிருப்பேனா? ம்ஹூம். உன்னையும் எங்களோட யு எஸ் கூட்டிட்டுப் போயிடணும்னுதான் உங்கப்பாவுக்கு ரொம்ப ஆசை. 'கேட்டுப் பாக்கறேன்'னாரு உங்கம்மாகிட்ட. ஆனா நான்தான் உன்ன உங்கம்மாகிட்டயிருந்து பிரிக்கறது பிடிக்காம தடுத்தேன். அது ஏனோ என் மனசுக்குப் பிடிக்கல. உங்கம்மாவுக்கு செய்யக்கூடிய பெரிய அநியாயமாத்தான் நெனச்சேன். அன்னிக்கி உங்கப்பாவும் புரிஞ்சுகிட்டாப்லதான் பேசினாரு."

பல நாளாய்க் காத்திருந்து மனத்தில் சேர்த்து வைத்ததையெல்லாம் கொட்டுவதைப் போலப் பேசிக் கொண்டிருந்தார்.

"பாஸ்டன் போனதிலிருந்தே பிஸினஸ் சரசரவென்று ஏறுமுகம்தான். பணம் சேரச்சேர நிம்மதி கொஞ்சம் கொஞ்சமா விலகிப்போச்சு. ஒரு கொழந்த பெத்துத்தர முடியல என்னாலன்ற காரணத்தைக் காண்பிச்சாரு. அது அவருக்கு ஒரு காரணம்தானே தவிர, என்னை விட்டுப் பிரிய முடிவு செஞ்சதுக்கு அது மட்டுமே காரணமில்ல. அப்புறம்தான் அவருக்கு என் தோழி வாணியப் பிடிச்சுப்போயி, 'அவளோட போறேன்'னாரு ஒரு நாள். நானும் சரின்னு தனியா போகச் சொல்லிட்டேன்."

கண்ணீர் விட்டு அழுதார். அவரின் அழுகை எரிச்சலை ஏற்படுத்தியது. நான் பார்ப்பதைப் பார்த்துவிட்டு, சட்டென்று துடைத்துக்கொண்டு, "ஆமா, நீ என்ன வேலை பாக்கற? அம்மா எப்படியிருக்காங்க?" என்றார்.

"மேல படிக்கத்தான் ரொம்ப ஆசைப்பட்டேன் ஆனா, அம்மாவால முடியல. அதான் ஒரு வேலைல சேரவேண்டிய நிர்ப்பந்தம். ஒரு சோப்பு கம்பெனியில சேல்ஸ் ரெப்பா இருக்கேன். அம்மாவுக்கு அடிக்கடி ஆஸ்துமா தொந்தரவு" என்று சொல்லிக்கொண்டே, என்னை நினைத்து எனக்கே வியப்பு. காலம்தான் என் மனப் புண்ணை ஆற்றியதோ, இல்லை வயது தான் மனமுதிர்ச்சியைக் கொடுத்ததோ என்று புரியாமல் இடறென்று அசௌகரியமாக உணர்ந்தேன். அங்கே உட்காரப் பிடிக்கவில்லை. விவரமாகப் பதில் சொன்னதை மன்னித்ததாக நினைத்துக் கொண்டு விடுவாரோ என்று பயந்தேன். உடனே, மன்னிக்க நான் யார் என்றும் தோன்றியது.

"உங்கப்பா எங்களுக்கு மணவிலக்கு கிடைக்கறதுக்குள்ளயே ஹார்ட் அட்டாக்குல போயிட்டாரு. அதனால சட்டப்படி எனக்கே எல்லா சொத்தும் வந்து சேர்ந்துடுச்சி. அப்ப வாணி கர்ப்பமா இருந்தா. மாரடைப்பு வரும்னு தெரிஞ்சிருந்தா ஒருவேளை, திவாகர் அவளுக்கு எல்லாத்தையுமே கூட எழுதி வச்சிருப்பாரோ என்னவோ. ஆனா, மணவிலக்கு வாங்கறதுலயே மும்முரமா இருந்திட்டாரு. வாணியும் நல்லவதான். எனக்கு அவளோட நிலைமை ரொம்ப நல்லாப் புரிஞ்சுது. அவளுக்கும் அவ மகளுக்கும் அங்கேயே ஒரு வீட்டையும் கணிசமான ரொக்கத்



"இந்தக் கல்யாணத்தை நடத்தறதுக்கு வரன் வீட்லயும், பொண்ணு வீட்லயும் ரொம்பச் சிரமப்பட்டுட்டாங்க போல!"

"அப்படியா?"

" ஆமா, இன்விடேஷன்ல 'இரு வீட்டார் களைப்பு'னு போட்டிருக்காங்களே!"

- அம்பை தேவா

தையும் எழுதி வச்சிட்டு மிச்சத்தை யெல்லாம் மொத்தமா 'வைண்ட் அப்' பண்ணிட்டு வந்துட்டேன் இந்தி யாவுக்கே. முதல் வேலையா நீங்க குடி யிருந்த கோடம்பாக்கம் அஜீஸ் நகருக்குப் போனேன். உன்னோட ஸ்கூல்ல, அக்கம் பக்கம் எல்லார்கிட்டயும் விசாரிச்சேன். நீங்க மதுரைக்குப் போனது தெரிஞ்சுது. ஆனா வேற விவரம் ஒண்ணுமே தெரி யல. ஒரு வருஷம் இதே வேலையா தேடி னேன். எனக்கு எப்பவுமே உன்னைப் பத்தின அக்கறைதான் இருந்திட்டே இருந்துச்சி. உன்கிட்டயிருந்து உங்கப் பாவப் பிரிச்ச பாவத்துக்குத்தான் எனக் குன்னு ஒரு கொழந்தையே இல்லாமப் பண்ணிட்டானோ ஆண்டவன்னு எப் பவுமே நெனச்சுப்பேன். அப்படி நெனச்சுக்கிட்டு அழுத நாட்களும் உண்டு. ஆனா, இப்பல்லாம் எனக்கு நீ ஒரு மகன், வாணியோட பொண்ணு ஷ்ரேயா ஒரு மகள்னுதான் நெனச்சிக் கிறேன். போன மாசம்தான் வாணி கொழந்தையோட வந்துட்டுப் போனா" ளமாகச் சொல்லிக்கொண்டே போனார். அவரின் மனநிலை குறித்து, என் மனம் நெகிழ்வதை என்னால் உணர முடிந்தது. என் தவிப்புகள் எனக்கே புதிதாகவும் விநோதமாகவும் தோன்றின.

திடீரென்று, "விஜய், அம்மாவுக்கு நாம ஏன் அக்குபங்சர் ட்ரீட்மெண்ட் கொடுக்கக்கூடாது? எனக்கு ஒரு டாக்டரத் தெரியும். கெட்டிக்காரர். நாலே வாரத்துல குணமாக்கிடறாரு. நான் நாளைக்கே கூட்டிட்டுப் போறேன். நீயும் வா. போர்டு மீட்டிங்கெல்லாம் நாளான்னிக்கிதான்னு சொல்லிடறேன்" என்று சொன்னதைக் கேட்டதுமே எனக்கு என்ன சொல்வதென்று தெரிய வில்லை.

"என்ன விஜய், ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கற. நம்ம கம்பெனிய பார்த் துக்க சரியான ஆளு இல்லாம தவிச்சுக் கிட்டிருந்தேன் தெரியுமா? அது இனிமே உன் கம்பெனி. இனிமே நீயே பார்த் துக்கோ. என்ன?" என்று மீண்டும் கேட் டதும், "அம்மாவுக்கு இதெல்லாம் பிடிக் குமான்னு.." என்று இழுத்தேன்.

"அம்மாவுக்குக் கோபம் வரும். நியா யம்தானே. வரட்டும். அதுக்காக நான் கம்மா விட்டுட முடியுமா? இதச் செய்

ஆர்த்தியின் அறை முழுக்க...



● 'சூப்பர்டென்' ஆர்த்திக்கு பொம்மைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அவருடைய அறை முழுக்க கலர் கலர் பொம்மைகள் கண்ணைப் பறிக்கின்றன.

● "காற்றில்... எந்தன் கீதம்...''- இதுதான் 'கோலங்கள்' திருச்செல்வத்தின் செல்போன் ரிங்டோன்.

● டி.வி வில்லன் நடிகரான தமிழ்க்குமரன், இந்தத் தேர்தலில் தி.மு.க. சார்பாக போட்டியிட மனுக்கொடுத்துள்ளார்.

● ராஜ் டி.வியில் முன்பு வந்த 'ராஜ் மேடை' போன்று வேறொரு பெயரில் அரசியல் பேட்டிகள் ஒளிபரப்பாக உள்ளன.

- முராரி

யத்தானே காத்துக்கிட்டிருந்தேன் இத்தனை நாளா...'' சொல்லி முடிக்குமுன் விசும்பி அழ ஆரம்பித்தார். தர்மசங்கடமாகி விட்டது எனக்கு. சற்றைக்கெல்லாம் ப்ரசன்னா மாடிக்கு வந்தான். அவனிடம் 'என் மகன் விஜய்' என்று சொன்னார். அவன் 'அப்படியாடா' என்று ஆச்சர்யமாய்க் கேட்டான். தொடர்ந்து அவரே,

"ப்ரசன்னா, ஃபங்ஷன் முடிஞ்சதுமே சீக்கிரம் கிளம்பிடுவோம். நெறைய பேச வேண்டியிருக்கு விஜய்கூட. அவன் பொறுப்பையெல்லாம் எடுத்துக்கிட்டான்னா, எனக்கு பிபிகூட கொறஞ்சுடும்'' என்று சொல்லிக்கொண்டே போனார்.

அம்மா என்ன சொல்லப் போகிறாளோ என்று இலேசான பயம் வந்தது. எப்படியாவது இவரைக் கழற்றி விட்டு விட்டுக் கிளம்பிவிட வேண்டும் என்று யோசிக்கத் தலைப்பட்டேன். அம்மாவுக்குத் திடீரென்று அதிர்ச்சியைக் கொடுக்கக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது.

"டேய் நீ எம்.பி.ஏ. படிக்கணும்னு ஆசப்பட்டியேடா. பேசாம மொதல்ல படியேன். அப்புறமா மிச்சத்தையெல்லாம் பார்த்துக்கலாம்'' என்றான் ப்ரசன்னா என்னைப் பார்த்து. என் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொள்ளவில்லையே இவன் என்றிருந்தது எனக்கு.

''ம், படிக்கலாம். நிர்வாகம் பண்ணிக்கிட்டே படிக்கட்டுமே'' என்று ஒரு தீர்மானத்துடன் 'அனு ஆன்ட்டி' சொன்னதுமே மீண்டும் என்னுடைய சிந்தனை சிறகு விரித்துப் பறந்தது. சிலவற்றைச் சொல்லிக்கொண்டே போனார். என்னைப் பார்க்கவே காத்திருந்தார் என்பது தெரிந்தது. அதில் என்னால் நேர்மையான அக்கறையைப் பார்க்க முடிந்தது.

திருமணம் முடிந்து, சாப்பிட்டு முடிக்கும்போது, "நாம வேணா நாளைக்கி அம்மாவோட பேசுவோமா..?'' என்று நான் மெதுவாகச் சொன்னதுமே, "நோ, நோ இந்த நாளுக்காகத்தான் நான் மூணு வருஷமா காத்திருந்தேன். உனக்கு எதுக்கு இவ்வளவு பயம்? அம்மா புரிஞ்சுப்பாங்க. வா நம்ம கார்லயே போயிடுவோம். நீ டிரைவ் பண்ணுவியோ'' என்று கேட்டுக் கொண்டே கையைக் கழுவினார்.

வாசலை நோக்கி விரைந்து நடந்தபடி, கைத்தொலைபேசியில் மானேஜருக்கு போன் செய்து, 'போர்டு மீட்டிங்'கை இரண்டு நாட்கள் தள்ளி வைத்துவிடச் சொன்னார். நடந்துகொண்டே மீண்டும் அழுத்தினார் எண்களை. "லாயர் சார், சௌக்கியமா? நீங்க நாளைக்கு ஃப்ரீயா? ம்.. சரி, காலைல சொல்றேன். ஆமா, அர்ஜென்ட்தான். விஜயபாஸ்கர் பேருக்கும் வில் எழுதி ரெடி பண்ணியிருந்தோம் இல்லையா, அதையும் எடுத்துக்கிட்டு வாங்க, ஓ.கே. பை'' என்று சொல்லிக்கொண்டே ஓட்டுநர் இருக்கையில் ஏறினார் அனு ஆன்ட்டி! ○

கு.ஞானசம்பந்தன்

சினிமாவுக்குப் போகலாம் வாங்க!



8



"ஈயம் பித்தளைக்கு பேரீச்சம்பழம் வாங்கறதோய்!"

"டேய் நல்லாப் பாருங்கடா... ஃபிலிமை தலைகீழாத்தான் ஓட்டுவாங்க... அதுக்கு முன்ன கண்ணாடி லென்ஸ். இதுனால திரையில படம் நேராத் தெரியும், புரியுதா? இங்க பார், இது என்ன?" என்று அரை அடி நீளமுள்ள பளபளப்பான தாமிரக் குச்சிகள் இரண்டைக் காட்டினான் நம்ம சினிமாமணி.

"தெரியலை" நாங்கள் பயத்தோடு சொன்னோம்.

"இதுதாண்டா கார்பன், ஃபிலிமுக்குப் பின்னாடி இத ஒண்ணுக்கு ஒண்ணு நேரா வச்சு கனெக்ஷன் குடுத்தா வெளிச்சம் வரும்... பாத்தியா வெளிச்சம் வருதா? இது ஃபிலிம்ல பட்டவுடன் சினிமா 'பளிச்சுனு' தெரியும்."

"படத்தில் பாட்டெல்லாம் வருதே... அது ரேடியோவுல போடுவாங்களா?" கூட வந்தவன் கேட்க,

"அட அதச் சொல்ல மறந்துட்டேனே... சார், அந்த வெட்டின ஃபிலிமைக் குடுங்க.... இந்தா பாருடா, இந்த ஃபிலிம் ஓரத்தில் கோடு மாதிரி இருக்கா... இதுலயே பேச்சு, பாட்டு எல்லாம் இருக்கும். ஒரு சின்ன ஊசி மாதிரி இதுல பட்டவுடன், கிராமபோன் ரிக்கார்டுல சத்தம் வர்ற மாதிரி டியேட்டருக்குள்ள



''தினமும் ஒரு டீஸ்பூன் கெரசின் குடிக்கச் சொல்றீங்களே ஏன் டாக்டர்?''

''ஆபரேஷனப்போ உன் வயித்துல மறந்து விட்டுட்ட கத்தி துருப் பிடிக்காம இருக்கத்தான்!''

– வீ. விஷ்ணுகுமார்

சத்தம் வரும்... சரி வாங்க படம் போடப் போறாங்க, தேங்க்ஸ் சார்!''

நாங்கள் அனைவரும் ஓரிரு வார்த்தை இங்கிலீஷ் பேசியதைக் கேட்டு அந்த ஆபரேட்டர் அப்படி மகிழ்ந்து போனார்.

''நம்ம பிஸிக்ஸ் வாத்தியாரும் இருக்காரே, ஒரு நாளைக்காவது நமக்கு இப்படிச் சொல்லிக் குடுத்திருப்பாரா?'' நான் கேட்டேன்.

''போடாப் போடா, 'சார், லென்ஸ்னு சொல்றாங்களே அப்படின்னா என்ன?'ன்னு கேட்டேன்... உங்கப்பாவைக் கூட்டிட்டு வாடான்னு சொல்லிட்டாரு. அதுல இருந்து நான் எந்தக் கேள்வியும் கேக்கிறதில்லை'' என்றான் மற்றவன்.

''இதச் சொல்ற... முந்தா நாளு 'எய்த் ஏ' கிளாஸ்ல அய்யாசாமி வாத்தியாரு உள்ள புகுந்து முப்பது பேரையும் அடிச்சுருக்காரு. கடைசிப்பய அடிவாங்கறப்பதான் 'சார், இது உங்க வகுப்பு இல்ல... உங்க வகுப்பு இல்ல'ன்னு கத்தியிருக்கான். பிறகுதான் அவரு 'மறந்துட்டு வந்துட்டண்டா'ன்னு சொல்லிட்டு அடுத்த கிளாஸ்ல புகுந்து அடிக்கப் போனாராம்'' என்றான் சிவனாண்டி.

''வாங்க, வாங்க... இந்தப் படத்திலே எழுத்துப் போடுறதே நல்லா இருக்கும்; பொதுவா மாடர்ன் தியேட்டர்ஸ் படத்துக்கு எப்பவுமே தனி மவுசு உண்டு'' என்று சொல்லிக்கொண்டே மணி வேகமாகப் போனான்.

நாங்கள் வசதியான இடத்தில் உட்கார்ந்துகொள்ள, திரை உயிர் பெற்றது. சிலந்திக்கூடு போல வட்டங்கள் சுற்ற, யாரோ ஒருவன் துப்பாக்கியால் 'டுமீல்' என்று சுட, 'வல்லவன் ஒருவன்' ஆரம்பித்தது.

படம் முடிந்து நாங்கள் வெளியே வந்த போது இரவு மணி இரண்டு. இனிமேல் பத்து கி.மீ. தூரம் சைக்கிளை மிதித்துக் கொண்டு போக வேண்டும். வழித்துணைக்கு பாதி தேய்ந்துபோன நிலாவும், போனமாதம் செத்துப்போய் பேயாய் அலையும் சில உருவங்களும்தான் உண்டு.

''டேய், பேசாம தியேட்டர்லயே படுத்திரலாம். காலையில விடியவும் வீட்டுக்குப் போயிரலாம். நான் உங்களுக்கு 'மெக்கானஸ் கோல்டு' கதை சொல்றேன்'' என்றான் சினிமாமணி.

நான், வழிநடைப் பேய்களுக்குப் பயந்து 'சரி' என்று சொல்லுமுன், ''வேணாம்டா, எங்கப்பா காலையில நாலு மணிக்கு பால் கறக்கப் போற சைக்கிளைத்தான் நான் ஏமாத்தி எடுத்துட்டு வந்தேன். விடிஞ்சு போனா, எருமைய அடிக்கிறாப்பல என்னைப் போட்டு அடிப்பாங்கடா'' என்று சிவனாண்டி கெஞ்சவே, வேறு வழியில்லாமல் கிளம்பினோம்.

''டேய் மணி... மணி...'' என்று நான் கத்த... ''ஏண்டா கத்தறே, நான்தான் கூட வர்றன்ல'' என்று மணி சொல்ல...

''இல்லடா, இங்க பாருடா'' என்று காட்டினேன். நாங்கள் எடுத்து வந்த வண்டியில் சைக்கிள் பெல் கிண்ணத்தை எவனோ சுயம் பித்தனைக்குப் பேரீச்சம்பழம் வாங்க கழற்றிக்கொண்டு போயிருப்பது தெரிந்தது.

''நல்லவேளை மூணு சைக்கிள்லேயும் சேர்த்துத்தான் எடுத்திருக்கான்'' என்று நான் ஆறுதலடைந்தேன். சினிமாமணி சைக்கிள், ஆபரேட்டர் ரூமுக்கு அருகில் இருந்ததால் தப்பித்திருந்தது.

''டேய், எல்லாரும் நின்னு நிறுத்திப் போங்கடா... கடைசியா வர்றவனுக்கு ஒண்ணு சொல்றேன். உம்பின்னாடி எவன் கூப்டாலும் திரும்பாதே, சொல்லிட்டேன்'' என்று சொல்லிவிட்டு மணி கிளம்ப, நாங்களும் தொடர்ந்தோம்.

இரண்டுபுறமும் நீர் நிறைந்த ஏரி. ஆகா

யத்தில் பின்னிரவு நிலா, ஆட்களைக் கீழே தள்ளி விடும் எதிர்காற்று... நாங்கள் இவற்றை அனுபவித்தபடி போகத் தொடங்கினோம்.

'ஏரிக்கரையின் மேலே... போறவளே பெண் மயிலே... நில்லு கொஞ்சம் நானும் வாரேன்... சேர்ந்து பேசிப் போவோம் பெண்ணே... அன்னம்போல நடை நடந்து-சென்றிடும் மயிலே...'' என்று மணி பாட்டைத் தொடங்கினான்.

''டேய் இந்தப் பாட்டு என்ன ராகம் தெரியுமா?'' பாடியபடியே எங்களிடம் கேட்டான்.

''காப்பி ராகம்'' என்றான் சிவனாண்டி.

''அது உங்க அப்பா ஊத்தற பால்ல சேர்த்துக் காலையில குடிக்கிறது... காப்பி'' என்றான் செவத்தக்காளை.

''போச்சுடா, நேரம் ஆச்சு மிதிங்கடா. எங்கப்பா சைக்கிள்டா, பாலுடா'' என்று கத்த ஆரம்பித்தான் சிவனாண்டி.

''கத்தாதடா, இந்தப் பாட்டு 'முதலாளி'ங்கிற படத்துல டி.எம்.சௌந்தர்ராஜன் பாடுற பாட்டுடா... ஆரபி ராகத்துல கே.வி.மகாதேவன் இசையில அவர் பாட, நம்ம எஸ்.எஸ். ராஜேந்திரன், கதாநாயகி தேவிகாவைப் பார்த்து பாடுற மாதிரி வரும். அந்தப் படம் ஓடுனதுக்கே காரணம் அந்தப் பாட்டுன்னு கூடச் சொல்லுவாங்க... அந்தப் பாட்டுல ஒரு அதிசயம் பாருங்கடா... பாட்டுத் தொடங்கறது 'அன்னம்போல நடை நடந்து'ங்கற பல்லவிலதான். சரணம் தான் ஹைபிட்ச்.''- மணி கனவுலகத்தில் சஞ்சரிப்பவன் போல பேசிக்கொண்டே போக, நான் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்துக்கொண்டே வந்தேன்.

சினிமாமணியின் இத்தனை ஞானத்திற்கும் அவனது குடும்பச் சூழலும் ஒரு காரணம் என்று நினைத்துக் கொள்வேன். ஓரளவு வசதியான குடும்பம். அப்பா உள்ளூர் ரயில் நிலையத்தில் ஸ்டேஷன் மாஸ்டர். அம்மா அருமையான சங்கீதப் பாடகி. சகோதரிகள் பரதநாட்டியம் ஆடும் போது ஊரே மகிழ்ச்சியாய் நின்று பார்க்கும். அவன் அப்பா சிறந்த சினிமா ரசிகர், இசைப் பிரியர். அவர்கள் குடும்பத்தோடு சினிமாவுக்குப் போகிறபோது எங்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியாது. இந்தக் காலத்தில் (அதாவது அந்தக் காலத்தில்) இப்படி ஒரு அப்பாவா!

(ரீல் சுற்றும்)

சின்ன ஜோக்; பெரிய பரிசு!


வாரம் ஒரு ஜோக் போட்டி!

போட்டி - 8

எழுதுங்க... தேர்தல் ஜோக்ஸ்!

பளீர் ஜோக்குக்கு...

பிரஷர் குக்கர்!



வழங்குபவர்கள்:

சௌம்யா நம்பர் ஒன்
மேட்ரிமோனியல் சென்டர்

37/55, சிவில் ஏவியேஷன் காலனி, குபேர கணபதி கோயில் அருகில், நங்கநல்லூர், சென்னை - 600 061. தொலைபேசி: 55484072 / 30994072 / 9382136869. இமெயில்: admin@sowmiyamatrimonial.com www.sowmiyamatrimonial.com இந்த அறிவிப்பை கொண்டு வருபவருக்கு இலவச ஜாதகப் பலன் கூறப்படும்.

* 'தேர்தல் ஜோக்ஸ்'னு குறிப்பிட்டு அஞ்சலட்டையில் மட்டுமே எழுதி, கல்கி முகவரிக்கே அனுப்புங்க.
* முகவரியோடு உங்க தொடர்பு எண்ணையும் எழுதுங்க.
* ஓர் அட்டையில் ஒரு ஜோக் மட்டுமே எழுதவும்.
* ஆசிரியர் தீர்ப்பே இறுதி. * கடைசி தேதி : 6.3.2006

“நான் காதல் மனைவி!”



கேரளத்து ஆரணங்குகள் ஆதிக்கம் செலுத்தி வரும் தமிழ் சினிமாவை, கொஞ்சம் அசைத்துப் பார்க்க ஆசைப்படுகிறார்கள் வங்கத்து மங்கைகள். காணாமல் போன பூமிகா கலர்ஃபுல்லாய்த் திரும்பி வந்திருக்கிறார். இப்போது புத்தம் புதிய வரவாக ‘வேட்டை யாடு விளையாடு’ கமலினி முகர்ஜி. சர்வ லட்சணங்களும் பொருந்திய அம்மன் மாதிரி ஜொலித்தவரிடம், முதல் படத்திலேயே கமலுக்கு ஜோடியாக பம்பர் பரிசு அடித் திருப்பதிலிருந்து அடக்க மாய் சாட்டிங்கை ஆரம் பித்தோம்.

“பாலிவுட்டை விட நான் தென்னிந்திய சினிமாவைத் தான் ரொம்ப நேசிக்கிறேன். ஒரு வார்த்தைகூட தெலுங்கோ, தமிழோ தெரியாமல் வர்ற வட இந்தியப் பெண்களுக்கு, இங்கே கிடைக்கிற மாதிரி அங்கீகாரம் எங்கேயும் கிடைக்கல. கவர்ச்சிக்கு எவ்வளவு முக்கியத்துவம் தர்றாங்களோ, அதே அளவு திறமைக்கும் முக்கியத்துவம் தர்றாங்க. ஹிந்தியில் கூட எனக்கு ஓர் அடையாளம் கொடுத்தது உங்க ரேவதிதான் தெரியுமா?” என்று இடைவெளிவிட்டுப் பேச ஆரம் பித்த கமலினி, வங்காள நவீன நாடகங்களில் நடித்த அனுபவத் தோடு மாடல் உலகில் பிஸியாக வலம் வந்தவர். ஆயுஷ் ஷாம்பூ விளம்பரத்தில் அழகுக் கூந்தலோடு படபடத்த இந்தக் குடும்ப விளக்கு, நடிகை ரேவதி இயக்கிய ‘திர்மிலேங்கே’ ஹிந்திப் படத்தில் அறிமுகமானவர்.

“ரொம்ப ஹோம்லியா இருக்கீங்க! கிளாமரா நடிக்காதீங்கன்னு எல்லோரும் அட்வைஸ் பண்றாங்க. ஆனால் ஹோம்லி மட்டுமில்லே, கிளாமர் உடற்கூறும் எனக்கு ப்ளஸ் பாய்ண்ட். இது இரண் டையும் மனசுல வெச்சு யாராவது கேரக் டர் தரமாட்டாங்களான்னு ஃபீல் பண்ணினேன். என்னை தெலுங்கு ‘ஸ்டைல்’ படத்தில் பார்த்த டைரக்டர் கௌதம், ‘நான் நினைச்ச மாதிரியே கிடைச்ச ஹோம்லி கிளாமர் நீங்க’ன்னு பாராட்டினார். அவர் கதை சொல்ற அழகே முதல் தரமா இருக்கும். அவர் சொன்னதுக்கும் அதைப் படமா எடுக் கறதுக்கும் இடையில் இடைவெளியே இல்லை. ‘வேட்டையாடு விளையாடு’ல கமலோட காதல் மனைவி கயல்விழியா நடிச்சிருக்கேன். கணவன்–மனைவிக் குள்ளே இவ்ளோ அழகா ஒரு காதலைக்

காட்ட முடியுமான்னு தெரியலை. கௌதம் ஒரு ஸ்டைலிஷ் டைரக்டர். அவர் மட்டும் ஓகே சொன்னா, அவர்கிட்டே உதவி இயக்குனரா சேர்ந்துடலாம்" என்று கௌதமுக்கு ஜீரோ டிகிரி குளிர் எடுக்கிற மாதிரி புகழ்ந்துவிட்டு கமல் முதுகுக்குத் தாவினார்.

"கமல் ஒரு ஃபிலிம் ஸ்கூல். அவர் பேச்சு, அவர் பாடி லாங்குவேஜ், அவர் சிரிப்பு வாவ்..! ஆல் தட் டைம், ஐ வாச்டு கமல்! ஐ லேர்ன்டு கமல்!'' என்றவரின் இப்போதைய லட்சியம் தமிழ்,





தெலுங்கு இரண்டு மொழிகளிலும் வலுவாகக் காலூன்ற வேண்டும். பிற்கால லட்சியம் தாய்மொழியில் அர்த்தமுள்ள சினிமாக்களை இயக்க வேண்டும்.

எங்கே போனாலும் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க முடியாத நமது சுபாவம் கமலினிக்கு மட்டும் சலுகை காட்டுமா என்ன? 'தெலுங்கு ஹீரோ சுமன்த் மூலம் உங்கள் லேட்டஸ்ட் போட்டோ செஷன் ஆல்பத்தை எல்லா தயாரிப்பாளர்களிடமும் அனுப்புகிறீர்களாமே... சுமன்த்துடன் காதலா, நட்பா?' என்று கேட்டுவிட்டு பதிலுக்காக இரண்டடி தள்ளி நின்று அமைதி காத்தோம்.

"இது மாதிரிக் கேள்வியை எல்லாம் கடைசியாகத்தான் கேட்பீர்களா...?!'' என்று முறைத்துவிட்டு "கிரேஸி கொஸ்டீன்'' என்றார். கடந்த ஆண்டு தெலுங்கில் தாம் அறிமுகமான 'ஆனந்த்'தில் ஏற்று நடித்த பாத்திரத்துக்காக நந்தி விருதை அள்ளியிருக்கிறார் கமலினி முகர்ஜி.

- ஜெய்

படங்கள் உதவி : நிகில்

-கமலினி முகர்ஜி

நீங்கள் கேட்டவை -தராசு

● ஆர்.சாலமன், ஆலங்குளம்

? இந்திய கிரிக்கெட் அணியின் செயல்பாடுகள் திருப்தியளிக்கின்றனவா?

! கடைசி ஒன்டே மேட்சிலும் விட்டுக் கொடுக்காமல் டோனி - யுவராஜ் ஜோடி பின்னி எடுத்தது. அணியிடம் முழுமையான நம்பிக்கையை வளர்க்கிறது. சீனியர்களுடன் இளம் குருத்துக்களையும் சேர்த்து ஒரு ஊக்கம்மிக்க டீமை அமைத்த கிரெக் சாபல்; தட்டிக் கொடுத்து சாதனை வளர்க்கும் டிராவிட் பாராட்டுக்குரியவர்கள். யுவராஜின் காலில் ஏற்பட்டுள்ள தசை நார் காயம் கவலை தருகிறது.



• ஃபார்வர்டு பிளாக்



• அ.தி.மு.க



சினிமா நடிகர்களால் செல்வாக்கு சேருமா?

● ஜெ. துரைராஜ், சென்னை-116

? பறவைக் காய்ச்சல் நோய் மஹாராஷ்டிரா மாநிலத்தை மிகவும் பாதித்துவிட்டதே?

! கொடிது கொடிது செயற்கையாக வளர்க்கப்படும் கோழிகள்; அதனினும் கொடிது அவற்றை கோர நோய்ப் பிடியிலிருந்து காக்க முடியாமல் போவது; கொடிதினும் கொடிது நோய்கண்ட கோழிகளைக் குப்பல் குப்பலாகக் கொன்று குவிப்பதுவே!

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'என்னால்தான் வாசனின் காங்கிரஸ் தலைவர் பதவி பறிக்கப்பட்டது' என்று திண்டிவனம் ராமமூர்த்தி கூறுவது சரியா?

! பின்னே, 'என்னால் தான் வாசனுக்கு அமைச்சர் பதவி கிடைத்தது' என்றா அவர் சொல்ல முடியும்!

● எஸ்.பாலாஜி, வேலப்பாடி

? தி.மு.க. கவுன்சிலர் தனசேகரை, குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்தது செல்லாது என்று உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது ஜெ.வுக்கு மைனஸ் பாயிண்ட்தானே தராசு?

! இது ஒன்றுதானா?... கடவுளே! கடவுளே!

● பெ.பொன்ராஜ்பாண்டி, மதுரை-16

? நான் முதல்வர் ஆனால் அரசு ஊழியர் குழந்தைகளை அரசுப் பள்ளியிலே படிக்க வைப்பேன் என்கிறாரே விஜயகாந்த்?

! அரசு ஊழியர்களின் வோட்டு வேண்டாமென்று முடிவு செய்துவிட்டார் போலும்.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? மான்களை வேட்டையாடிய குற்றத்துக்காக சல்மான்கானுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை + ஐயாயிரம் அபராதம்..?

! மேல்முறையீடு செய்வார் என்றபோதிலும் தீர்ப்பு சரியே. மான் வேகத்தில் வராமல் ஆமை வேகத்தில் அது வந்தது தான் குறை!

● வி.எஸ். விஜயமாறன், நெய்வாசல் ●

? தேர்தலுக்கு ஒரு வருடத்துக்கு முன்பே அரசு சலுகைகள் அறிவிப்பதை நிறுத்த வேண்டும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தால் என்ன..?

! தேர்தல் கமிஷனும் சட்டத்துக்கு உட்பட்டுத்தான் செயல்பட முடியும். தேர்தல் சட்டங்களில் சீர்திருத்தம் தேவை. அதைவிட முக்கியமாக, சட்டத்தின் ஓட்டைகளில்

புகுந்து புறப்படாமல் தார்மிக நெறிகளைக் கடைப் பிடிக்கும் தலைவர்கள் தேவை.

● கே.வி.ராமன், சென்னை - 73

? ஈரானின் அணு சக்தி உற்பத்தி மையங்களை அமெரிக்கா குண்டு போட்டு அழிக்கப் போவதாக மிரட்டலாமா?

! ஒஸாமா பின்லேடன் இல்லாத இடத்தில் குண்டு மழை பொழிந்து நேச நாடான பாகிஸ்தானின் பிரஜை களையே கொன்று குவித்தார் ஜார்ஜ் புஷ். இதுவும் செய் வார், இன்னமும் செய்வார், எதுவும் செய்வார்! அவருக் குத்தான் ஆண்டவன் கட்டளையிடுகிறாராமே!

● விமலா. வரதராஜன், ஹைதராபாத் - 47

? அனைத்து திருமணங்களும் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் உத் தரவு பற்றி?

! குழந்தைத் திருமணங்கள், இருதார மணம் போன்ற சில சமூகக் குற்றங்களுக்குத் தடைக்கல்லாகக் கூடிய நல்ல உத்தரவு. தம்பதியின் புகைப்படத்துடன் பதிவாகி இரு வருக்கும் தனித்தனியே சான்றிதழ் வழங்கப்படுதல் எதிர் காலத்துக்கு மிகப் பெரிய பாதுகாப்பு.

● ச.தமிழ்ச் செல்வி, பாண்டிச்சேரி-5 ❒

? தமிழகம் - பாண்டிச்சேரிக்குத் தேர்தல் வருவதை மனத்தில் வைத்து அரசுப் பணியாளர்கள் வேலை நிறுத் தம், போராட்டம் போன்றவற்றில் ஈடுபடுவது பிளாக் மெயில் தானே...?

! கஜானாவில் பணம் இருக்கிறதா என்று யோசித்துப் பாராமல், பலவித சலுகைகளை வாரி இறைத்துக் கொண்டிருக்கும்போது, அரசு ஊழியர்களுக்கும் தங்கள் பங்கிற்குக் கேட்கத்தானே தோன்றும்!



• தே.மு.தி.க



• தி.மு.க

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை

? சினிமா நடிகர்கள் சேர்வதால் கட்சிக்குச் செல்வாக்கு அதிகரிக்குமா?

! அதிகரிக்கும்; அதிகரிக்காது - இரண்டுக்குமே தமிழக அரசியலில் முன்னுதாரணங்கள் உண்டு. யாரை எடைபோட்டாலும் தமிழக வாக்காளர்களை எடைபோட முடியாது! அவங்க எப்ப, எதனால், எந்தப் பக்கம் சாய்வாங்கன்னு சொல்லவே முடியாது!

● ஆர்.ரத்தினம், பசுபதிபாளையம்

? பா.ஜ.க தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடும் என்று அதன் தலைவர் ராஜா கூறியுள்ளாரே?

! வீண் விரய முயற்சி. பத்து - பன்னிரண்டு தொகுதிகள் தேர்ந்தெடுத்து அவற்றில் மட்டும் கடுமையாய் உழைத்து ஜெயித்தால் சட்ட மன்றத்தில் கௌரவமான இடம் கிடைக்குமே.

● ஜெயலட்சுமி இராமசந்திரன்,
சென்னை - 11

? வெளிநாட்டினரும் இந்தியா வந்து சிகிச்சை மேற்கொள்ளும் அளவுக்குக் குறைந்த கட்டணத்துக்குக் காரணம் என்ன?

! இந்திய ரூபாயின் மதிப்புதான். டாலர் பவுண்டுடன் ஒப்பு நோக்க, ரூபாயின் மதிப்பு மிகவும் குறைவுதானே. ஆகவேதான் நமக்கு பயங்கரமாகத் தோன்றும் கட்டணம், அயல் நாட்டவர்க்குச் சல்லிசாகத் தோன்றுகிறது. ○

❒ ரூ.100/- பரிசு பெறுபவர்:

ச. தமிழ்ச் செல்வி,
பிளாட் எண் 178,
இரண்டாவது குறுக்குத் தெரு,
ஜவஹர் நகர், பூமியான்பேட்டை,
பாண்டிச்சேரி - 5

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:

வி.எஸ்.விஜயமாறன்,
கீழத்தெரு, நெய்வாசல் அஞ்சல்,
வடுவூர் - 614 019
தஞ்சை மாவட்டம்

சக்சஸ் ஸ்டோரி

மூவாயிரத்து நானூற்று தொண்ணூற்று இரண்டு கோடி மதிப்பீட்டில், வரும் 2010-ம் ஆண்டுக்குள் கல்பாக்கத்தில் அமையவிருக்கும் அதிவேக அணு உலைக்கு, சேஃப்டி வெஸல் எனும் முக்கிய பாகத்தை வெற்றிகரமாகத் தயாரித்துக் கொடுத்திருக்கிறது, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் இயங்கிவரும் ஒரு சிறு தொழில் நிறுவனம். இரும்பு ஆலைகளுக்கான உருக்கு உலைகளை வடிவமைத்துக் கொடுப்பதில் பயணத்தை ஆரம்பித்து, தேசத்தின் மிகப்பெரிய அணு உலைத் திட்டத்தில் பங்காற்றி இருக்கும் அந்த நிறுவனம் கே.ஆர்.ஆர். இன்ஜினியரிங். அதன் தலைவரும் நிர்வாக இயக்குனருமான கே.ஆர். ராமசாமி, தம் நினைவுகள் வழியே வெற்றிப் பாதையைத் திரும்பிப் பார்க்கிறார்.



• கே.ஆர்.ராமசாமி

“எனக்குச் சொந்த ஊர் கோபிச்செட்டிப்பாளையம். அப்பா பொற்கொல்லர். குடும்பத்தின் பொருளாதார நிலையைப் பற்றி அவர் கவலைப்படாமல் கோவையின் கௌரவம் என்று கருதப்படும் பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் என்னை மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படிக்க வைத்தார். பத்து சிறந்த மாணவர்களை டிரைனியாகத் தேர்ந்தெடுத்து, அந்தக் கல்லூரியின் டூல் ரூமில் இரண்டு வருடம் பயிற்சி தருவார்கள். தென்னிந்தியாவின் முதல்தரமான டூல் ரூம் அது. அதிர்ஷ்டவசமாக அங்கே பயிற்சி முடித்து வெளியே வரும்போது, புதிதாக எதையாவது செய்ய வேண்டும் என்ற துறுதுறுப்போடு மூளை ஃபிரஷ்ஷாக இருந்தது.

கோவையில் எவரெஸ்ட் இன்ஜினியரிங் என்ற ஃபேப்ரிகேஷன் நிறுவனத்தில் ஃபோர்மேனாக வேலைக்குச் சேர்ந்தேன். அங்கே மீண்டும் திருப்புமுனை. கேரளத்தின் பாரம்பரியம்மிக்க டெக்ஸ்டைல் நிறுவனம் திருவிதாங்கூர் ரேயான்ஸ். இயந்திரச் செலவைக் கட்டுப்படுத்த உள்நாட்டிலேயே ஒரு டைஜஸ்டரைத் தயாரித்து வாங்கிப் பொருத்தியிருக்கிறார்கள். ஆனால் அது ஓடவில்லை. எங்கள் நிறுவனத்தை அணுகி, 'இதைச் சரிசெய்ய முடியுமா?' என்று கேட்டபோது, அதைச் சவாலாக ஏற்றேன்.

ராட்சஸ கியர்வீல் இயந்திரங்களின் பல் சக்கரங்களின் முரண்பட்ட அளவுகளைக் கண்டறிந்து பதினைந்து நாட்களில் அந்த டைஜஸ்டரை வெற்றிகரமாக ஓட வைத்தேன். எனக்கு மிகப்பெரிய தன்னம்பிக்கை கிடைத்தது. யோசிக்காமல் வேலையை ராஜினாமா செய்துவிட்டு நூற்று ஐம்பது ரூபாயுடன் சென்னை வந்து இறங்கினேன். ஆரம்பத்தில் பத்துத் தொழிலாளர்களை வைத்துக்கொண்டு, சப்-

உருக்கு உலை to அணு உலை!

காண்ட்ராக்ட் அடிப்படையில், சவாலான பொறியியல் பணிகளைச் செய்துகொடுப்பதை மட்டும் செய்ய ஆரம்பித்தேன். பிறகு சிறுகச் சிறுக பணம் சேர்த்து மிகச் சிறிய முதலீட்டில் 1974-ல் அம்பத்தூர் தொழிற்பேட்டை வளாகத்தில் வாடகை இடத்தில் எனது தொழிற்சாலையை ஆரம்பித்தேன். ஏதேனும் ஒரு துறை மட்டும் சார்ந்து இயங்கக்கூடாது என்பதில் பிடிவாதமாகவே இருந்தேன்'' என்று சொல்லும் கே.ஆர். ராமசாமி, ஆரம்பகட்டத்தில் பழைய இயந்திரங்களை பழுது நீக்கி, அவற்றையே அடிப்படை வசதியாகக் கொண்டு முன்னேறி இருக்கிறார். பத்துத் தொழிலாளர்கள், மிகக் குறைவான வசதிகள் இவற்றோடு, வாடிக்கையாளர் தரும் மிகத் துல்லியமான அளவுகளில் (அக்யூரசி) எந்திரங்களைத் தயாரித்துத் தர ஆரம்பித்ததைத்

கே.ஆர்.ஆர். நிறுவனம் தயாரித்த சேஃப்டி வெஸல்



தொடர்ந்து முன்னணி நிறுவனங்களே தேடி வர ஆரம்பித்திருக்கின்றன.

பெல்லாரியில் உள்ள ஜிண்டால் தொழிற்சாலைக்கு நானூறு டன் இரும்பு உருக்கும் உலைக்கான கன்வர்ட்டர், தமிழ்நாடு பெட்ரோ புராடெக்ட் நிறுவனத்துக்கு நாக்பூரில் உள்ள மத்திய வெடிபொருள் கண்காணிப்பகத்தின் தரக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நூற்றுஆறு டன் எடையுள்ள புரோப்பல்லைன் புல்லட், தூத்துக்குடி ஸ்டெரிலைட் தொழிற்சாலைக்கு ஆறு மெகா தாமிர உருக்கு உலைகள் என்று கே.ஆர்.ஆர். நிறுவனத்தின் சாதனைப் பட்டியல் நீண்டதைக் கண்ட எல் & டி நிறுவனம், கல்பாக்கம் அதிவேக அணு உலையின் முக்கிய பாகமான சேஃப்டி வெஸல் எனப்படும் பகாசுர பாதுகாப்புத் தாழியைச் செய்து தரும் சப்-காண்ட்ராக்டை பெற்றுக் கொடுத்திருக்கிறது.

மத்திய அணுசக்தித் துறை, இந்திரா காந்தி அணு ஆய்வு மையம், தேசிய அணு உலைகளை நிர்மாணித்து நிர்வகிக்கும் 'பாவினி' நிறுவனம் போன்றவற்றின் கடுமையான தரக்கட்டுப்பாட்டு விதிகளைப் பின்பற்றி, தமது சொந்தத் தொழில் நுட்பத்திலேயே வெற்றிகரமாக டைகளை உருவாக்கி பாதுகாப்பு வெஸலைத் தயாரித்து ஒப்படைத்திருக்கிறது.

“1999-ல் சோதனையான காலகட்டம். ஒரு சில தொழிலாளர்களின் தூண்டுதல் காரணமாக, என்னால் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளோடு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வங்கிக் கடனை அடைக்க முடியாமல் சொத்துகளை விற்றுத் தொழிலாளர்களுக்குரிய இழப்பீட்டைக் கொடுத்து தொழிற்சாலையை மூட வேண்டி வந்தது. ஆனாலும் நான் மனம் உடைந்து விடவில்லை. தொழில் மீது எனக்கிருந்த பக்தியும் மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தியின் அருளும் கைகொடுக்க, மறுபடியும் சவாலான வேலைகளையே கையிலெடுத்தேன்'' என்று சொல்லும் ராமசாமியின் கே.ஆர்.ஆர். நிறுவனத்துக்கு அணு உலைக்கான மெயின் வெஸல் செய்து தரும் ஆர்டரையும் 'பாவினி' நிறுவனம், எல் & டி வழியே வழங்கியிருக்கிறது.

- ஜெய்

படம் : புதூர் சரவணன்

அன்புக்கொரு ஏ.ஓ.எல்!

பிப்ரவரி 19. பெங்களூரிலிருந்து சென்னை திரும்பும் இரயிலில் அமர்ந்த ஓர் அம்மணி, தம் நண்பரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார். "இது மனித முயற்சியினால் முடிகிற காரியமா? சந்தேகம்தான்" ஸ்ரீஸ்ரீரவிசங்கரின் வாழும் கலை பயிற்சியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தைப் பற்றித்தான் இந்த விமர்சனம். பிப்ரவரி 17, 18, 19 தேதிகளில் நடந்த இந்தக் கோலாகலம் உலகத்தையே நிமிரச் செய்த காரணம், மனித முயற்சி மட்டுமல்ல... அந்த மனித முயற்சிக்கு ஓர் எல்லையே இல்லாமல் செய்யும் 'அன்பு' என்னும் ஆயுதம்தான்.

'வாழும் கலை' என்பது பூஜ்ய குரு ஸ்ரீஸ்ரீரவிசங்கர் வகுத்து, உலகெங்கும் பரப்பி வரும் பிராணாயாமம் மற்றும் தியானத்தை உள்ளடக்கிய தினசரி பயிற்சி முறை. உலகெங்கும் பிரபலமாகி வரும் இந்த வாழும் கலை பயிற்சி, ஆங்கிலத்தில் சுருக்கமாக ஏ.ஓ.எல். என்று அழைக்கப்படுகிறது. மன அமைதியின் திறவுகோலாக, அன்பின் ஊற்றுக் கண்ணாக இன்று அனேகம் நாட்டு மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. இப்பயிற்சி முறையின் வெள்ளிவிழாவைக் கொண்டாட எத்தனை பிரும்மாண்டமான ஏற்பாடுகள்!

இருபது நாட்களுக்கு முன் ஜக்கூர் விமான தளம் வழியாகச் சென்றபோது, பல கிலோமீட்டருக்கு ரோடு போட்டுக் கொண்டிருந்தனர். இன்னும் இருபதே நாட்களில் இருபது லட்சம் மக்கள், உலகத் தலைவர்கள், ஆன்மிக சிகரங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான இசைக் கலைஞர்கள் இந்த இடத்திற்கு ஒன்றாக வரப் போகிறார்கள் என்று உழைத்துத் தயார் செய்துவிட்டார்கள். பத்து நாட்களாக பெங்களூரில் எந்தத் திக்கு சென்றாலும் இந்த விழாவுக்கு அழைக்கும் பேனர்கள், போஸ்டர் மற்றும் கட் அவுட்கள். ஒரு தெரு பாக்கி இல்லை. கொடிக் கம்பம், சுவர் - எதையும் விட்டு வைக்கவில்லை. கூடவே அரசியல்வாதிகளும் தங்கள் பங்குக்கு 'நாங்களும் உங்களை வரவேற்கிறோம்' என்ற போஸ்டர், பேனர் அறிவிப்புகள் ஒட்டிவிட்டார்கள்! ரயில்வே ஸ்டேஷனில் ஸ்பெஷல் கவுன்ட்டர், கூடுதல் பஸ்கள் என்று பெங்களூர் புதிய பொலிவு அடைய, அத்தனை அலுவலகங்களும் ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுத்தன : "டிராஃபிக் ஜாம் ஜாக்கிரதை"!

டிராஃபிக் ஜாம் என்னவோ தவிர்க்கக் கஷ்டம்தான். ஆனால் ஜாம் போல் எல்லோருடைய மனமும் கனிந்து குழைந்து இழைந்து காணப்பட்டது. ஜக்கூர் மைதானத்தின் 400 ஏக்கர் பரப்பில். ஒவ்வொருவருடைய





• ஸ்ரீஸ்ரீரவிசங்கர்

நலனையும் கண்காணிக்கும் வகையில் மைதானம் மாநிலம் மாநிலமாகப் பிரிக்கப்பட்டு, வாழும்கலை பயிற்சியாளர்கள் பொறுப்பில் இயங்கியது. மூச்சுப் பயிற்சி மற்றும் க்ரியாவில் லட்சோப லட்சம் மக்கள் இணைய, இதை ஸ்ரீஸ்ரீயே முன்நின்று நடத்தினார்.

"இவ்வளவு கூட்டமும் அன்பும் இதிலே தான் சார் உருவாச்சு. இந்தப் பயிற்சி எடுத்துக் கொண்டவர்கள் குட்டை

சொன்னவர்கள் - கோபத்துக்கும் ரோகத்துக்கும்...''

- தலையில் அடித்து சத்தியம் செய்கிறார் கோவை ஜய் குருதேவ் டிராவல்ஸ் கிருஷ்ணமூர்த்தி. ''நிதானமாகவும் தெளிவாகவும் சிந்திக்கிறேன். தெம்பாக இருக்கிறேன்'' என்கிறார். கோவையிலிருந்து வெள்ளி விழாவுக்கு வந்திருக்கும் மூவாயிரம் பேரில் ஒருவர் கிருஷ்ணமூர்த்தி. மூன்று வருடங்களாகச் செய்யும் ஏஓஎல் மற்றும் DSN (திவ்ய ஸமாஜ் கா நிர்மாண்) என்ற மேம்பட்ட பயிற்சி அனைத்தும் செய்து பயனடைந்தவர். புன்முறுவலுடன்



அங்கும் இங்கும் பறக்கிறார்.

இரண்டே இரண்டு மாதம் பயிற்சி செய்து உள்அன்பில் தழைக்கும் சிக்கிம் மாநிலத்து பன்னிரண்டாம் வகுப்பு மாணவன் திபின் ப்ரதான், ஜனவரியில் இந்த விழாவைப் பற்றிக் கேள்விப்பட்டு, உடனே டிக்கெட் ரிஸர்வ் செய்து நாற்பது நண்பர்களுடன் வந்து சேர்ந்திருந்தார். ஹைதராபாதில் வசிக்கும் திருச்சிக்காரர் ரவியும் இவ்வண்ணமே துறுதுறுவென்று நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இரவு பஸ்ஸில் ஹைதராபாத் செல்கிறார்.

முக்கிய விருந்தினர் என்ற மாபெரும் பட்டியலில் இடம்பெற்ற நமது குடியரசுத் தலைவர், அமைதி பலூன்களைக் காற்றில் பறக்கவிட்டு சமாதான குரல் எழுப்பினார். நமது குடியரசுத் தலைவர் குழந்தைப் பிரியர் என்பது தெரியும். பலூன் விடுவதிலும் தம் குழந்தை உள்ளத்தைப் பிரகடனப்படுத்தினார். அவர் அருகில் நின்ற ஸ்ரீஸ்ரீரவிசங்கர் முகத்திலும் குழந்தையின் கள்ளங்கபடமற்ற சிரிப்பைப் பார்த்த பொழுது நமக்கும் ஒரு முப்பது வயது குறைந்து விட்டது.

'ஸாமஜவரகமனா', 'எந்தரோ மஹானுபாவுலு' என்று மூன்று தினமும் 3800 பேர் அடங்கிய கர்நாடக இசைக் கலைஞர்களின் குழு எப்படி அய்யா இந்தத் திறந்தவெளியில் சுருதி சுத்தமாக இசைத்தது? திருவையாற்றில் ஒரு முறையாவது இப்படி நிகழக்கூடாதா?

அரை கிலோமீட்டர் நீளத்தில் கோட்டைபோல் அமைந்த மேடையில், இருபுறமும் சூழ இசைக் கலைஞர்கள் அமர்ந்து இசைத்த காட்சி... அதைப் பார்ப்பதற்கு ஆயிரம்... ஸாரி, மூவாயிரத்து எண்ணூறு கண்கள் தேவை!

இவ்வளவு ஜனங்கள் எப்படி வந்தார்கள், எங்கு தங்கினார்கள் எப்படி உணவு உண்டார்கள்? பொறுப்புகளெல்லாம் சர்வ சாதாரணமாக நிர்வகிக்கப்பட்டன. நிறைய ரயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட்டன. ஹோட்டல்களிலும், பள்ளிகள் மற்றும் கல்யாண மண்டபங்களிலும் தங்கும் வசதி, உணவு அளிக்க மெகா கிச்சன் மற்றும் பஸ் வசதி.

வெள்ளி விழா, ஸ்ரீஸ்ரீரவிசங்கரின் பொன்விழா பிறந்தநாள் - இதற்கே இப்படி என்றால், தங்க விழா-ரவிசங்கரின் 75 வயது கொண்டாட்டம்? எல்லாம் அமோகமாக நடக்கட்டும். அதற்கு முன்பு அன்பில், துன்பங்கள் தொலைக்க நாம் முற்படுவோம். வீட்டிலாவது சண்டையில்லாமல் அன்போடு வாழ முயற்சி செய்வோமே... சங்கரா! ரவிசங்கரா!

- ஜான்னவி

'நான்...
ரூபங்களில் விஸ்வம்!
அண்டங்களில் அணு!
பிண்டங்களில் ஜீவன்!'
- ஸ்ரீகிருஷ்ணன்

கண்ணனின் துணிப்பையை எடுத்துத் திறந்தாள் அனுராதா.

"என்ன மேடம்... அந்த கண்ணன் பையை மறந்து விட்டுட்டுப் போய்ட்டாரா?" என்றான் சம்பத்.

"அப்படி நான் நினைக்கல... " பதிலோடு அனுராதா உள்ளிருந்து அந்த ஏட்டுக்கட்டுகளை கையிலெடுத்தாள். இந்த ஏடுகளிலும் சமஸ்கிருத எழுத்துக்கள்தான்.... பாடல்களா...? மந்திர வரிகளா? இல்லை ஏதாவது செய்தியா என்பது அவளுக்குப் புலப்படவில்லை.

ஆனால் அந்த கையெழுத்தும் வடிவமைப்பும், தற்சமயம் கணேசனிடம் உள்ள ஏட்டுக்கட்டுகளுடன் ஒத்துப்போனதுதான் ஆச்சரியம். அனுராதாவின் கண்களிரெண்டும் அலைபாய்ந்தன.

"மைகாட்... மிஸ்டர் கணேஷ்! உங்க கிட்டே இப்ப இருக்கற ஏடுகளோட இது



ஒத்துப்போகுது... அனேகமா அதுவும் இதுவும் ஒரு செட்டா இருக்கணும். இதைக் கவனமா படிச்சா ஒரு பெரிய செய்தி நமக்குக் கிடைக்கலாம்..." என்றாள் அனுராதா... கூடவே அந்த ஏடுகளோடு ஒரு குட்டி புல்லாங்குழலும் இருந்தது.

"புல்லாங்குழல்! எனக்குச் சந்தேகமேயில்லை... வந்திருக்கிறது அந்த கண்ணனேதான்! ஏன்னா ஒரு மனிதனால எவ்வளவு தூரம் சாதிக்க முடியும்னு எனக்குத் தெரியும். இது கண்ணன்தான்... கண்ணனேதான்!" அனுராதாவிடம் உணர்வுகள் பால் போல பொங்கி வழியத் தொடங்கின.

"மேடம் என்ன சொல்றீங்க நீங்க...? நான் இங்க வர்றதுக்கு முந்தி இங்க ஏதாவது நடந்ததா?" சம்பத் தனது வினாவைத் தொடங்கினான்.

"என்ன சார் அப்படிக் கேட்டுட்டீங்க... கண்ணன்னு ஒருத்தர் வந்து இங்க என்னவெல்லாம் அற்புதங்கள் நடந்தது தெரியுமா?"

"யூ மீன்..."

"கண்ணன் சார்... சாட்சாத் அந்த கிருஷ்ண பரமாத்மா..."

"வாட்..." வாயைப் பிளந்துவிட்டான் சம்பத். அதே வேகத்தில் வாயை மூடிக் கொண்டவன் "நோ... நான் இனி எதையும் சந்தேகப்பட மாட்டேன். ஹரித்வார்ல அந்த மகரிஷி சொன்னதை என்னால மறக்க முடியாது. அவரோட ஒவ்வொரு சொல்லும் மாணிக்கம். அதேபோல சமீபகாலமா எங்கள் வரைல நடக்கற எல்லா சம்பவங்களுமே நாங்க நினைச்சுப் பார்த்திராத அதிசயங்கள். அந்த நாடி ஜோசியமும் ஓர் அற்புதம்..." என்றான் நெகிழ்வாக.

"சம்பத் சார்... உங்களோட நாடி ஜோதிட ஏட்டுக் குறிப்பு இப்ப எங்க சார்?" அனு வேகமாகக் கேட்டாள்.

"அது இப்ப ஹரித்வார்ல என் மனைவி சாருகிட்ட இருக்கு. எதுக்குக் கேக்கறீங்க?"

"அதைப் படிச்சுப் பார்க்கத்தான். அதுல இன்னும் என்னவெல்லாம் சொல்லப்பட்டிருந்தது?"

"இந்தப் பூமிக்கு அந்த கிருஷ்ண பரமாத்மா வரப்போறது பத்தித்தான் அதுல குறிப்புகள் இருந்ததா ஞாபகம். துல்லியமா வரிகள் ஞாபகம் இல்லை. 'வெள்ளியெழும் வேளைக்குள்ளே, வியாழன் நிற்கும் நேரமதில், பள்ளியெழுந்தே பாலன் வேடமிட்டு கண்ணனாய் முன்னே வருவான்'னு ஒரு வரி... அதேபோலவும் நடந்தது. அப்புறம் 'வள்ளி மணாளன் சோதரன் நாமம் கொண்டவன் முன் வெள்ளெருக்கு போல, வேத கண்ணன்



பின் வருவான்னும் இருந்தது."

"வள்ளிமணாளன்னா முருகன்... முருகனோட சகோதரன் பிள்ளையார்... ஐ மீன் கணபதி, கணேஷ்..! வாவ்... மிஸ்டர் கணேஷ் உங்க பேர்தான். உங்க பேரேதான்..."

அனுராதா முகத்தில் காணாத ஒன்றைக் கண்டறிந்துவிட்ட பூரிப்பு.

"ஓ... இப்பத்தான் எனக்கே அந்த வரிக்குப் பொருள் தெரியுது. மேடம் நீங்க சொல்றது சரிதான். இங்க உங்களோட பேசிப் பழகின கண்ணன், அந்த பாரதத்து கண்ணனேதான். ஐ ஹேவ் நோ டவுட்" சம்பத்திடமும் ஒரு பௌர்ணமிப் பிரகாசம்.

ஆனால் கணேஷ் முகம் சோபையிழந்து பெரும் குழப்பத்தில் தத்தளித்தபடி இருந்தது. அதை அனுராதாவும் கவனித்தாள். "என்ன கணேஷ் சார்... இன்னுமா உங்களுக்கு நம்பிக்கை வரலை?" என்றாள்.

அவனும் அவளை பதிலுக்கு வெறித்தான். அதேசமயம் அவனுக்குள் எவ்வளவோ கேள்விகள்.

'அனுராதா விளங்கிக்கொள்ளும் விதத்தில் துளியும் பழுது இருப்பதாகவே தெரியவில்லை. எல்லாமே ஓர் அசாதாரண சம்பவம் நடந்திருப்பதைத்தான் சுசுப்படுத்துகிறது. ஆனால் பரந்த இந்தப் பிரபஞ்சத்தில் இப்படி ஒரு சிலரிடையே அந்த கண்ணன்

இந்திரா சௌந்தர்ராஜன்

தன்னை மறைத்துக்கொண்டு வந்து போக வேண்டிய அவசியம்தான் என்ன என்று கேட்டுக்கொள்ளும்போது இடிக்கிறதே...? தான் வந்து போவதே தெரியக் கூடாது என்று அவன் நினைத்த மாதிரியும் தெரியவில்லை. இல்லாவிட்டால் இந்த மாதிரி ஏடுகள் - அதில் பாடல்கள் - அதுக்குள்ளே கடிதம் போட்டுத் தகவல் சொல்வதுபோல தகவல்கள் இருந்து அவை எல்லாமும் தெரிய வருமா?

சரி... எதற்கு இப்படி எல்லாம் நடக்கிறது? உலகில் கடவுளை நேரில் கண்டவர்கள் கிடையாது என்று ஒரு கருத்து நிலவிக்கொண்டிருக்கும்போது, உலகில் பலர் வரையில் நம்பிக்கையில் மட்டும் வாழ்ந்து வரும் அந்தக் கடவுள், எதற்காக இப்படிக் கண்ணாமூச்சி விளையாட வேண்டும்? அந்தக் காலம்போல வானில் ஒரு அசரீரி ஒலி எல்லாம்கூட கேட்க வேண்டாம். நேரில் ஒரு தரிசனம்... அவ்வளவுகூட எதற்கு? எவ்வளவோ கொடுமைகள்... அதற்கு எதிராக ஒரு இடி முழக்கம் செய்யலாமே...? கடவுளை ஒரு கற்பனையாகக் கருதும் என்னிடம் எல்லாம் வந்து தன் திருவிளையாடலை எதற்கு அந்த கண்ணன் நிகழ்த்த வேண்டும்?'

கணேசனுக்குள் இப்படி எல்லாம்தான் கேள்விகள். எந்த ஒரு கேள்விக்கும் பளிச்சென்று பதில் இல்லை. அதேசமயம் ஏதோ ஒரு பதிலை அனுமானமாகச் சொல்லக்கூட தைரியமில்லை.

"என்ன மிஸ்டர் கணேஷ்... இப்படிப் பதில் சொல்லாம அமைதியா இருந்தா எப்படி? உங்க பாணில எல்லாமே தற்செயல்னு மட்டும் சொல்லிடாதீங்க. அப்படியே சொன்னாலும் எனக்குக் கவலை இல்லை. இனி உங்க குடும்பம் வரைல கண்ணன் நிகழ்த்தப்போற சாகசங்கள் மிச்சம் இருக்கு. அது உங்களை நிச்சயமா கையெடுத்துக் கும்பிட வைக்கும்." என்று அனுராதா அந்தக் குழப்பத்தில் அவன் சகோதரிகளின் ஞாபகத்தை மூட்டி விட்டாள்.

'கிளம்பிப் போயிருக்கும் கண்ணன் அங்கு என்ன பண்ணுவான்? அக்காவுக்கு வாய்த்த கணவன் ஆகாஷ், ஒரு குடிகாரன். அவன் தாய்-தந்தையர்களோ, சரண்யாவை ஒரு வீட்டு வேலைக்காரிக்கு மேல் நினைத்துப் பார்க்க இஷ்டப்படாதவர்கள். தங்கள் பிள்ளையின் குடியை 'இந்தக் காலத்துல யார்தான் குடிக்கலை. கவர்ன்மென்ட்டுக்கே டாஸ்மாக்லதான் அதிக வரும்படியாம்' என்றெல்லாம் பேசி நியாயப்படுத்துபவர்கள். தங்கை சுஜாதாவின் வலிப்பு வியாதியையோ கட்டுப்படுத்த மட்டும்தான் முடியும். முற்றாகக் குணப்படுத்த முடியாது என்று சென்னையின் முதல் பத்து டாக்டர்களில் ஒருவரே கூறிவிட்டார். இப்படி இருக்க, இந்த கண்ணன் அங்கே போய் எதைக் கிழிக்க முடியும்? போய்ச் சேர்ந்து விஷயங்களை விளங்கிக் கொள்ளவே ஒரு வாரம் பத்துநாள் கூட ஆகலாம்...' என்று கணேஷ் அவர்கள் தொடர்பான எண்ணங்களில் நெசவு நெய்தபோது அவனது செல்போன் கூப்பிட்டது. மிக நிதானமாக அதை எடுத்துக் காதில் வைத்தான்.

"திஸ் ஈஸ் மிஸ்டர் கணேஷ்?"

"யெஸ்..."

"சார் நான் கண்ணன் பேசறேன். ஜமீன் ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் உங்களுக்கு ஹெல்ப் பண்ண அனுப்பியிருக்கற கண்ணன்!"

"ஓ... நீங்களா? ஆமா இது என்ன குரல் மாற்றி எல்லாம் பேசிக்கிட்டு... உங்களால இங்க எவ்வளவு குழப்பம் தெரியுமா?"

"என்ன கணேஷ் சொல்றீங்க... நான் எதுக்குக் குரல் மாத்தி எல்லாம் பேசணும்? வில்லேஜ்ல எங்க பெரியம்மா இறந்துட்



"சார் பழைய கட்டடங்களை குண்டு வைத்துத் தகர்க்க டெண்டர் கொடுத்திருந்தோமே!"

"ஆமாம், அதுக்கென்ன?"

"அல்கொய்தாவிலிருந்து ஒரு அப்ளிகேஷன் வந்திருக்கு!"

- யமுனா ரெங்கநாதன்

டாங்க. நான் காசிக்கு வர்றதுக்காக ஏர்போர்ட் வர்ற வழியில தகவல் கிடைச்சது. உங்களுக்குத் தகவல் தந்துட்டு அப்படியே திருநெல்வேலி திரும்ப நினைச்சேன். அன்ஃபார்ச்சுநேட்லி உங்க லைனும் கிடைக்கல, ஆடிட்டர் சார் லைனும் கிடைக்கல. வெறுத்துப் போய் அப்புறம் பேசிக்கலாம்னு கிளம்பிப் போய்ட்டேன். அங்க கிராமத்துல சுத்தமா டவர் ஒர்க் பண்ணலை. படாதபாடுபட்டு இப்பத்தான் இந்த நம்பர்ல உங்களைப் பிடிச்சிருக்கேன்."

மறுபக்கத்து பதில் கணேஷை எழுந்தே நிற்க வைத்தது.

"கணேஷ்.. போன்ல யார்... எனி திங் சீரியஸ்?" அனுராதாவும் நிமிர்ந்து எழுந்தாள்.

"மிஸ் அனுராதா... இது அடுத்த கட்ட அதிர்ச்சி. கிட்டத்தட்ட உங்க பதில்கள் சரிங்கற மாதிரியான ஒரு விஷயம்தான் நடந்திருக்கு..."

"என்ன சொல்றீங்க கணேஷ்?"

"லைன்ல ஆடிட்டர் அனுப்பின உண்மையான கண்ணன்!"

"மைகாட்... எங்க இப்படிக் கொடுங்க.." அனுராதா செல்லை அவனிடம் இருந்து பிடுங்கி அந்த உண்மையான கண்ணனிடம் பேச ஆரம்பித்தாள்.

"சார்.. நீங்கதான் ஆடிட்டர் அனுப்பின உண்மையான கண்ணனா?"

"நீங்க யார்... இது என்ன பேத்தலான கேள்வி. உண்மையான கண்ணன்னா, பொய்யான கண்ணன்னு ஒருத்தன் இருக்கானா என்ன...?"

"ஐ ஆம் சாரி. இங்க நடந்த விஷயங்கள் உங்களுக்குத் தெரியாது. அதனால நான் கேட்டதுக்கு நீங்க இப்படித்தான் பதில் சொல்ல முடியும். இட்ஸ் ஓ.கே. நீங்க இப்ப எங்க இருந்து பேசறீங்க?"

"வாரணாசி ஏர்போர்ட்ல இருந்து... ஆமா நீங்க?"

"என் பேர் அனுராதா. மிஸ்டர் கணேஷோட தோழின்னு வெச்சுக்கோங்களேன்..."

"ஐ.சி. சரிங்க அனுராதா, ஒரு மணி நேரத்துல நான் உங்க முன்னால இருப்பேன். நீங்க பேசறத பார்த்தா நான் வரத் தாமதமானதால நீங்க உதவி செய்ய வந்துருக்கற மாதிரித் தெரியுது. ஐ ஆம் வெரி சாரி.. அங்க வரவும் முடியாம, தகவலும் தர முடியாம நான் ரொம்பவே சிரமப்பட்டுட்டேன். எவ்வளவுதான் வசதி வாய்ப்புகள் இருந்தாலும் நேரம் சரியில்லைன்னா நாமெல்லாம் நத்திங்னு என் குருநாதர் ஒருத்தர் அடிக்கடிச் சொல்வார். என் அனுபவத்துல அதுதான் சத்யமான உண்மை."

அசல் கண்ணனின் டைம் பற்றிய பேச்சு, அனுராதாவை, அவளுக்குள் அந்த நொடி நிலவிக் கொண்டிருக்கும் பரபரப்பான ஒரு நம்ப முடியாத நம்பிக்கைக்கு வலுச் சேர்ப்பதாகக்கூட இருந்தது.

"ரொம்பவும் சரியா சொன்னீங்க சார்... நீங்க நேர்ல வாங்க. மற்ற விஷயங்களை நேர்ல பேசலாம்." என்றபடியே செல்போனை அணைத்தவள் பார்வை, அடுத்து அந்த மூங்கில் பெட்டி மேல்தான் சென்றது. மிக மிக நிதானமாக அதே சமயம் வெறித்த விழிகளுடன் அதன்முன் சென்றவள், அப்படியே மண்டியிட்டாள். அவளுக்குள்ளும் இப்போது ஒரு கேள்வி 'கண்ணா இது என்ன விளையாட்டு? எதற்கு இந்த விளையாட்டு?'

- அடுத்த இதழில் முடியும்



மலர்களே சாட்சி!

மெட்டி ஒலி இயக்குனர் டீமிலிருந்து யார் தனியே போய் தொடர் ஆரம்பித்தாலும் தலை தப்பிவிடுகிறது என்பதற்கு நூறு எபிசோடுகளை வெற்றிகரமாகத் தொட்டிருக்கும் 'மலர்கள்' தொடர் சாட்சி. 'மெட்டி ஒலி'யின் திரைக்கதை ஆசிரியர் முத்துச் செல்வம்தான் மலர்களுக்கும் திரைக்கதை எழுதியிருக்கிறார். தொடரின் வெற்றியைப் பார்த்து, ஜெமினி டீ.வி.க்காக 'மா அம்மா மாட்டா' என்ற தலைப்பில் டப் செய்யாமல் மறு தயாரிப்புச் செய்கிறார் தொடரின் தயாரிப்பாளர் சித்திக்.



'சின்ன ஜோக்; பெரிய பரிசு!' போட்டி முடிவு - 6

சிறப்பான மன்னர் ஜோக் எழுதி தூத்துக்குடி மெட்டல்ஸ், சென்னை வழங்கும் சூர்யா கேஸ் ஸ்டவ் பரிசாகப் பெறும் வாசகர்: சி.பி. செந்தில்குமார், சென்னிமலை

''ஒவ்வொரு போரிலும் தோற்கிறார்; இருந்தாலும் இளவரசர் வெற்றி நமதே என்கிறாரே! எப்படி?"

"பக்கத்து நாட்டு மன்னர் மகள் வெற்றிச் செல்வியை இளவரசர் காதலிக்கிறாராம்!"

பிரசுரத்துக்குத் தேர்வான ஜோக்குகள்...

''எட்டாம் வகுப்புவரை இனி பரீட்சை கிடையாதுன்னு நாடு முழுவதும் தமுக்கடிக்க ஏற்பாடு செய்திருக்கீங்களே... ஏன் அரசே?"

''அப்படியாவது ஓடிப்போன இளவரசன் அரண்மனைக்குத் திரும்ப மாட்டானா என்றுதான்."

- எஸ். சிவகாமி

ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட...

''மகாராணியின் நகைகளை மார்வாடி கடையில் அடகு வைக்கும்போது இவனைக் கையும் களவுமாகப் பிடித்து வந்திருக்கிறோம் மன்னா..."

"அடப்பாவிங்களா... கைச்செலவுக்கு காசில்லன்னு நான்தான் யாருக்கும் தெரியாமல் அடகு வைக்கச் சொன்னேன்."

- ஷைலஜா பாலமுருகன்

"மரணப் படுக்கையில் கிடக்கும் நமது மன்னரின் ஆவி பிரியாமல் தவிப்பது எதனால்?"

"பெப்ஸி உமாவுடன் ஒருமுறையாவது பேசிவிட வேண்டும் என்ற மன்னரின் பல ஆண்டு லட்சியம் இதுவரையில் கைகூடவில்லையே!"

- அ.அ.யாழினி

"மன்னா, நாம் புறா மூலம் செய்தி அனுப்பியதற்கு அண்டை நாட்டு மன்னர் பதில் அனுப்பியிருக்கார்."

"என்னவாம்?!"

"நாம் அனுப்பிய புறா ஒரு வாய்க்குக்கூட பத்தலையாம். அடுத்த முறை வான்கோழித் தூது அனுப்பணுமாம்."

- பி.பொன் காவியா


You can
Win 75% Scholarship
on total course fee
13
SAT 2006
PROVE YOUR INTELLIGENCE
& WIN SCHOLARSHIP
SAT 2006
SCHOLARSHIP APTITUDE TEST
FOR DESERVING STUDENTS
இத்தேர்வுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது
உங்கள் அறிவுத்திறனை நிரூபித்து வெல்லுங்கள்!
Exam Date:
APRIL
2
SUNDAY
JAVA
ABOUT THE EXAMINATION
• No Entry fee for SAT exam.
• SAT exam question paper comprises of 25 objective type questions from General Knowledge, Science, Geography and Mathematics.
• SAT exam will be conducted in English / Tamil.
• No age bar to participate in this exam.
• Basic Qualification must be above 8th Std.
CSC
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION
SAT is conducted only once in a year - Don't miss it.
தவணைமுறை வசதியும் உண்டு
Collect FREE admit card from your nearest CSC centres


March 8-12
நாயுடு ஹால்
Stop
Me
if you can!
march
8-12
upto
30%
discount
for the real woman
NAIDU HALL®
Pondy Bazaar 28152151 • Mylapore 24985959 • Purasawakkam 26432151
Adyar 42112151 • KNK Road 28332533 • Soon in Chromepet & Velachery